செப்டெம்பர் 02 24 பக்கங்கள் ரூபா 14.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்






## பொலிஸ் தடுப்பு இம்முறை இல்லை

## மக்கள் பேரணி பூரண அமைதி



**சுடர் ஒளி நாளிதழ் விரைவில் வெளிவருகிறது**

# ஜெயந்தன் சிறப்புப் படையணி: கிழக்கில் படையினருக்கு கலக்கம்!

வன்னியில் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நகர்த்தப்பட்ட ஜெயசிக்குறு படையணியை ஒருசில நாட்களில் ஆரம்பித்த இடத்திற்கே விரட்டியடித்த ஜெயந்தன் படையணி கிழக்கிற்கு வந்திருப்பதை அறிந்த போதே படைமுகாம்கள் பலப்படுத்தப்பட்டன. பாரிய தாக்குதல்களை முறியடிப்பதற்கான முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனாலும் 24 மணி நேரமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மத்தியமுகாம் முதலாம் தர பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டிருக்கிறது.

1997 மே 13ஆம் திகதி யாழ் நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதற்கென ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறு படையணி 17 மாதங்களைக் கடந்த பின்பும் தனது இலக்கை அடைய முடியாது திசைமாறி ஒட்டிசுட்டான் வரை சென்றபோது அப்படையணிமீது ஒரு சில தினங்களில் மின்னல் வேகத்தில் தாக்குதலை நடத்தி இராணுவத்திற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதில் ஜெயந்தன் படையணிக்குப் பெரும் பங்குண்டு.

அதன் பின்னர் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆனையிறவு, இயக்கச்சி படைத்தளங்களை தாக்கி அழிப்பதில் முக்கிய பங்காற்றிய தளபதி கருணா தலைமையிலான ஜெயந்தன் படையணி ஆறு மாதங்களுக்கு முதல் கிழக்கிற்கு நகர்த்தப்பட்டிருந்தது.

கிழக்கில் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான தயார்ப்படுத்தல்கள் விடுதலைப்புலிகளால் மிகவிரிவான முறையில் மேற்கொள்ளப்படுவதை அறிந்த படைத்தரப்பும் படை நடவடிக்கைகளுக்கான முன்னேற்பாடுகளை செய்திருந்தது.

மட்டக்களப்பு, எழுவான்கரை பகுதியிலிருந்து படுவான்கரை நோக்கி இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக மட்டக்களப்பு இராணுவ இணைப்பு தலைமையகம் துண்டுப்பிரசுரம் ஒன்றையும் அண்மையில் வெளியிட்டிருந்தது.

படையினர் புலிகளின் முகாம்களை நோக்கி மாபெரும் தாக்குதலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர் எனவும் எனவே புலிகளின் முகாமை விட்டு 4 கிலோ மீற்றர் தூர விலகி இருக்குமாறும் இரண்டு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை சேகரித்து வைத்துக் கொள்ளுமாறும் செங்கலடி பதுளை வீதியின் அருகே உள்ள மக்கள் அப்பிரதேசத்தை விட்டு விலகியிருக்க வேண்டும் என்றும் படையினர் அறிவித்திருந்தனர்.

நவீன விமானங்களையும் அதிநவீன ஆயுதங்களையும் உபயோகித்து விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாரிய படைநடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக அறிவித்து உளவியல் ரீதியில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் கலக்கம் அடையவைக்கலாம் என நினைத்த படைத்தரப்பினர் மத்திய முகாம் பொலிஸ் நிலையத் தாக்குதலின் நெற்றியடியினால் கலங்கிப் போயுள்ளனர்.

மண்டூர் 13ஆம், 14ஆம் கொலனிகளையடுத்து மத்திய முகாம் கிராமம் உள்ளது. 1956ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டது. முதலாம்தர பொலிஸ் நிலையமாக தரமுயர்த்தப்பட்டு இராணுவ முகாம்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இப்பொலிஸ் நிலையத்திலும் செய்யப்பட்டிருந்தன.

60 எம்.எம் மோட்டார், ஜி.கே.எல்.எம்.ஜி, ஆர்.பி.ஜி.எல்.எம்.ஜி, ரி81 எல்.எம்.ஜி போன்ற சக்திவாய்ந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்த இந்த பொலிஸ் நிலையத்தில் விசேட பயிற்சி பெற்ற 125 பொலிஸாரும், 50 ஊர்க்காவல் படையினரும் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

அப்படி இருந்தும் இந்த பொலிஸ் நிலையம் வெற்றிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. படைத் தரப்பில் சுமார் 25க்கு மேற்பட்டோர் கொல்லப்படுள்ளனர்.

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் தப்பிச் சென்று தண்ணீர்த் தாங்கியினுள் இறங்கி ஒளிந்திருந்தார்.

மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் மரம் ஒன்றில் ஏறி ஒளிந்திருந்தார். இப்பொலிஸ்காரர் தாக்குதல் திகில் அனுபவத்தை கூறியிருக்கிறார்.

பெண் புலிகள் மின்னல் வேகத்தில் மேற்கொண்ட தாக்குதலையும் முகாமை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்த கச்சிதமான நடவடிக்கைகளையும் அவர் விவரித்திருக்கிறார். பொலிஸ் நிலையத்தை கைவிட்டு தப்பி செல்லாவிட்டால் ஒருவர் கூட உயிர் தப்பியிருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.



1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி மத்திய முகாம் பொலிஸாரினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டு படுகொலை செய்யப்பட்டதாக கூறப்படும் மூன்று பிள்ளைகளின் தாயாரான 35 வயதுடைய கோணேஸ்வரி முருகுப்பிள்ளையின் நான்காவது ஆண்டு நினைவாக விடுதலைப் புலிகளின் ஜெயந்தன் படைபிரிவின் பெண் புலி அணியினாின் தலைமையில் இத்தாக்குதல் நடத்தப் பட்டிருக்கிறது.

மத்திய முகாம் கிராமத்தைச் சேர்ந்த கோணேஸ்வரி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் பெண் உறுப்பில் கிரனைட் குண்டை வைத்து வெடிக்கச் செய்து படுகொலை செய்யப்பட்டார்.

இந்த ஈவிரக்கமற்ற படுகொலை தொடர்பாக மத்தியமுகாம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தபோதிலும் சாட்சி சொல்வதற்கு அப்பெண்ணின் கணவன் உட்பட எவரும் முன்வராததால் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் போயிருப்பதாக இவ்வழக்கில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்திருக்கிறார்.

அச்சுறுத்தல் காரணமாகவே சாட்சி சொல்ல எவரும் முன்வரவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இதன்பின்னர் மத்திய முகாம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரால் 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் 23ஆம் திகதி 5 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 23 வீடுகள் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டன. 45 வீடுகள் சேதமாக்கப்பட்டன. இதில் தமிழ் மக்களுக்கு சொந்தமான உழவு இயந்திரங்கள், நெல்மூடைகள், சொத்துக்கள் அனைத்தும் பொலிஸாரால் அழிக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக கல்முனை நீதிமன்றத்தில் பொலிஸாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டபோது சம்பவத்தில் ஈடுபட்ட 3 பொலிஸார் அடையாளம் காட்டப்பட்டனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட ஏனைய பொலிஸாரை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் தவறிவிட்டனர். இக்கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட பொலிஸாரை காணவில்லை என்றும், சிலர் இடமாற்றப்பட்டு விட்டதால் அவர்களை இங்கு கொண்டுவர முடியாமல் இருப்பதாகவும் பொலிஸ் அதிகாரிகள் நொண்டிச்சாட்டுக்களை கூறிவருவதாக இவ்வழக்கில் ஆஜராகியிருக்கும் சட்டத்தரணி பேரின்பராசா கூறினார்.

கொலை சம்பவம் ஒன்றில் ஈடுபட்ட பொலிஸாரை இடமாற்றம் செய்வதோ அல்லது அவர்களை காணவில்லை என்று கூறுவதோ பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையேயாகும் என்றும் குற்றவாளிகளை தப்பவைப் பதற்கு பொலிஸ் அதிகாரிகள் துணை போயிருக்கிறார்கள் என்றும் சட்டத்தரணி குற்றம்சாட்டியிருக்கிறார்.

பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையால் மூன்று வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் பொதுமக்கள் படுகொலை மற்றும் சொத்துக்களை அழித்தது தொடர்பான ஆரம்ப விசாரணையான அடையாள அணிவகுப்பு கூட பூர்த்தியடையாமல் இருக்கிறது.

மூன்று வருடங்கள் கடந்துவிட்டபின் கொலைக்காரர்களின் முகம்களை அம்மக்களால் அடையாளம் காணமுடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. மத்தியமுகாம் பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்களைப் பொறுத்தவரை நீதி கூட அவர்களின் பக்கம் இல்லை என்பது கடந்த கால வரலாறு.

இந்நிலையிலேயே மத்திய முகாம் பொலிஸார் தமிழ் பெண் மீது மேற்கொண்ட ஈவிரக்கமற்ற படுகொலைக்கு பழிவாங்கும் முகமாக பெண் புலிகள் அப்பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் உள்ள 14ஆம், 13ஆம், கொலனி, மத்திய முகாம், கெவிளியாமடு, சவளக்கடை ராணமடு ஆகியன பாரம்பரிய தமிழ் கிராமங்கள் ஆகும்.

1956ஆம் ஆண்டின் பின்னர் இங்கு படிப்படியாக சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதன்பின்னர் 1977, 1981, 1985ஆம் ஆண்டுகளில் இப்பகுதிகளில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக பெருந்தொகையான தமிழ் மக்கள் வெளியேறினர். தமிழ் மக்களின் பாரம்பரிய விளைநிலங்கள் அபகரிக்கப்பட்டன. இன்று இப்பகுதி களில் தமிழர்கள் சிறுபான்மையினராகவே உள்ளனர்.

தமது பாரம்பரிய தாயகத்தை விட்டு வெளியேறு வதில்லை என்ற வைராக்கியத்துடன் இருக்கும் மக்களையும் காலத்திற்கு காலம் படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்கள் நிலைகுலைய வைத்திருக்கின்றன.

இந்நிலையில் மத்திய முகாம் பொலிஸ் நிலையம் நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. ''எங்கும் செல்வோம், எதிலும் வெல்வோம்'' என்ற முழக்கத்துடன் கிழக்கில் நிலை கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் ஜெயந்தன் படையணியின் அடுத்த பாய்ச்சல் எதுவாக இருக்கும்?

இதுவே கிழக்கில் உள்ள படையினருக்கு பெரும் தலையிடியைக் கொடுக்கும் கேள்வியாகும்.

—துவாகரன்

# தொடரும் தாக்குதல்கள்

கடந்த வாரம் சம்பவங்கள் நிறைந்த வாரமாகக் கழிந்திருக்கிறது. களமுனைத் தகவல்களை நோக்கும் போது படைத்தரப்பு கணிசமான இழப்புக்களைச் சந்தித்திருக்கிறது.

கடந்த 18 ஆம் திகதி கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தை அண்டிய பகுதியில் விமானப்படையின் மிக்–27 தாக்குதல் விமானம் வீழ்ந்து நொருங்கியது. இதனால் விமானியான உக்ரைன் நாட்டவர் உயிரிழந்தார்.

தரையில் வீடுகளுக்கு மேல் விமானம் வீழ்ந்ததால் ஏழு பொது மக்கள் படுகாயமடைந்தனர். வீடுகள், கடைகள் என்பவை பலத்த சேதமடைந்தன. விமானப் படைக்கு ஏற்பட்ட தொடர்ச்சியான இழப்புக்களின் ஒரு பகுதியாக இந்த விபத்து நிகழ்ந்தது.

இதனை அடுத்து கிழக்கைக் கலக்கிய சூறாவளி அம்பாறை மத்திய முகாம் தாக்குதல்.

மத்திய முகாம் பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடர்பாக புலிகள் தெரிவிக்கையில், தாக்குதல் ஆரம்பித்து 15 நிமிடத்தில் தமது கையில் முகாம் வீழ்ந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

தமது தரப்பில் மேஜர் கோகுலன் (நாகராசா நவநீதன்—அம்பாறை, பவித்ரன் (கோகுலநாயகம் கவிதாசன்— அம்பாறை) ஆகியோர் உயிரிழந்தனர் என்று புலிகளால் தெரிவிக்கப்பட்டது.

முகாமிலிருந்து 60 மி.மீ மோட்டார்கள் — 3, பி.கே. எல்.எம்.ஜி — 2, ஆர்.பி எல்.எம்.ஜி— 3, ரி— 81 எல்.எம்.ஜி — 1, 40 மி.மீ பிஸ்ரல் — 2, ஜீ —3 ஏ—3 —1, ரி 56 ரக துப்பாக்கிகள் — 5, ரி — 56 ரக துப்பாக்கிகள் — 20, 38 ரிவோல்வர் — 1, 60 மி.மீ எறிகணைகள் — 40, நடுத்தர ரவைகள் — 3000, நடுத்தர ரவைகள் இணைப்பிகளுடன் 450, பி.கே.மௌன்ட் — 1, ஏ.கே ரவைக்கூடுகள் — 33, ஏ.கே.எல்.எம்.ஜி ரம் ரவைக்கூடுகள் — 5, 81 எல்.எம்.ஜி ரம் ரவைக்கூடுகள் 2 உட்பட பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றைவிட இரண்டு டிராக்டர்களையும் ஆறு மோட்டார் சைக்கிள்களையும் முகாமிலிருந்து புலிகள் எடுத்துச் சென்று விட்டனர். முகாமிலிருந்து 10 வாகனங்களை தீக்கிரையாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலை அடுத்து இராணுவத்தின் கண்கள் கிழக்கின் மீது ஆழப் பதிந்திருந்த வேளை, வடக்கே முல்லைத்தீவில் புலிகள் மேற்கொண்ட மற்றொரு தாக்குதல் இடியாக விழுந்திருக்கிறது.

கடந்த 23 ஆம் திகதி கட்டுநாயக்க விமானத்தள தாக்குதல் இடம்பெற்று ஒரு மாதம் பூர்த்தியாக முதல் நாள் அதிகாலை 1.50 மணியளவில் மணலாறு, ஜனகபுர, கொக்குத்தொடுவாய் முகாம்களின் மீது புலிகளின் அணிகள் சீறிப் பாய்ந்தன.

மணலாறு — கொக்குத்தொடுவாய் முகாம் மீது ஒரு அணியும், ஜனகபுர முகாம் மீது இன்னொரு அணியும், கொக்குத்தொடுவாய்க்கு அருகிலுள்ள 20 முன்னரங்கப் பதுங்கு குழிகள் மீது மற்றொரு அணியும் தாக்குதல் நடத்தின.

மும்முனைகளில் நடத்தப்பட்ட இந்தத் தொடர்ச்சியான சமரில் படைத்தரப்பு பயங்கரமாகப் பின்வாங்கியது.

பதுங்கு குழிகளை அண்டி படையினரால் அமைக்கப்பட்டிருந்த மினி முகாம்கள் புலிகளின் மோட்டார் தாக்குதல்களுக்கு இரையாகின.

தமது தரப்பில் 13 பேர் பலியாகினர். 24 பேர் காயமடைந்தனர். 10 பேர் காணாமல் போய் விட்டனர் என்றும் புலிகள் தரப்பில் 7 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 15 பேர் காயமடைந்தனர் என்றும் இராணுவம் கூறியது.

மேற்படித் தாக்குதல் தொடர்பாக புலிகள் தரப்பு தெரிவிக்கையில் 15க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். ஓர் அதிகாரி உட்பட 11 பேர் படுகாயமடைந்தனர். கைப்பற்ற ஏழு படையினரின் சடலங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாகக் கடந்த 24ஆந் திகதி படையினரிடம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்பட்டது.

இந்த மோதலின் போது தமது தரப்பில் மேஜர் நாயகன் அல்லது புலேந்திரன் பேரம்பலம் யோகேஸ்வரன்— யாழ்ப்பாணம்), மேஜர் பாண்டிமுத்து (பாலசுந்தரம் பிரதீபன்— யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்ரினென்ட் இளங்கீரன் (முருகன் நாகரூபன்— மன்னார்), 2ஆம் லெப்ரினென்ட் மாதவன் (செல்வராசா நந்தகுமார்— கிளிநொச்சி) ஆகியோரும் தேசிய எல்லைப் படை வீரர்களான காந்தரூபன் ( சபாரத்தினம் காந்தரூபன்— முள்ளியவளை), சுதாகரன் ( வேலாயுதம் சுதாகரன் — முள்ளியவளை) ஆகியோரும் உயிரிழந்தனர் எனப் புலிகள் அறிவித்தனர்.

முகாம்களிலிருந்து பி.கே.எல்.எம்.ஜி — 1, ஏ.கே.எல்.எம்.ஜி — 2, ஆர்.பி.ஜி— 1, ரி — 56 ரக துப்பாக்கிகள் — 7, ரி— 56 ஒரு ரகத் துப்பாக்கிகள் — 3, 40 மி.மீ எறிகணைச் செலுத்தி ஒன்று, பி.கே இணைப்பிகளுடன் — 1800, பி.கே பரல்கள் — 2, பி.கே.பைப் போட் — 1, நடுத்தர ரவைகள் இணைப்பிகளுடன் — 2400, ஏ.கே.எல்.எம்.ஜி ரம் ரவைக்கூடுகள் — 2, ஏ.கே ரவைகூடுகள் — 2, கைக்குண்டுகள் — 2, 60 மி.மீ எறிகணைகள் — 21, ஆர்.பி.ஜி எறிகணைகள்— 8, ஏ.3.வி.3 கிளைமோர்கள் — 4, வோ பாண்ட் செற்— 1, ஏ.கே ரவைக்கூடு தாங்கி அணிகள் — 4, தொப்பிகள் — 3, சப்பாத்து — 3 சோடி, கிற்பைகள் — 4 என்பவை தம்மால் கைப்பற்றப்பட்டன என்றும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க இராணுவ அராஜகங்கள் இடம் பெற்ற மறக்க முடியாத சம்பவங்கள் நிகழ்ந்த நாட்களை எண்ணி தமது நிலைகளை மிகவும் கவனமாகப் பாதுகாக்க வேண்டிய நிலைக்குப் படையினர் தள்ளப்பட்டுள்ளனர்.

—ஆதித்தியன்

# வடபகுதியில் தம்மை பலப்படுத்த முடியாத நிலையில் படைத்தரப்பு

## மழை காலத்துக்கு முன் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைக்கு முயற்சி

ஆங்காங்கே சிறு சலசலப்புக்களுடன் தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்த புலிகள் தற்போது கிழக்கு மாகாணத்தில் தமக்கே உரிய பாணியில் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள்.

இதனால் குடாநாட்டின் பாதுகாப்பை மறுசீரமைக்கும் முயற்சிகள் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாக புலிகளின் மூத்த களமுனைத் தளபதி கருணா அம்மான் கிழக்கு மாகாணத்தில் விசேடமாக மட்டக்களப்பு படுவான்கரை மற்றும் கொக்கட்டிச் சோலைப் பகுதிகளில் தங்கியிருந்து நேரடியாக தாக்குதல் அணிகளை தயார்ப்படுத்தி உரிய தருணம் வரும்வரை காத்திருக்கிறார் போலும்.

இவர் இங்கு உலாவும் செய்தியை அறிந்து கொண்ட படையினர் நேரடியாகச் சென்று தாக்க முடியாத காரணத்தினால் கடும் ஆகாயத் தாக்குதலில் ஈடுபட்டு வந்தனர்.

அக்கினிச் சுவாலை இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்த மறுநாள் கொக்கட்டிச்சோலை பகுதியில் புலிகளின் ''பெய்ரூட் முகாம்'' மீது விமானப்படை ஜெட் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கின.

தாக்குதலின்போது புலிகளின் அத்தளம் முற்றாக அழிக்கப்பட்டதாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் விசேட பயிற்சி பெற்ற அதிரடிப்படையினர் படுவான்கரையை நோக்கிச் சிறு நகர்வுகளையும் மேற்கொண்டனர். அந்தத் தாக்குதலின் போது புலிகளின் தரப்பில் சுமார் 10 பேர் வரை கொல்லப்பட்டனர்.

இது போதாதென்று நீண்ட தூரம் ஊடுருவிச் சென்று பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தக்கூடிய (Deep Penetration Army) படை வீரர்களை மக்களோடு மக்களாக புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள் படைத் தலைமைகள் அனுப்பி வைத்தன. நிச்சயமாக கருணா இவர்களது இலக்குகளில் பிரதானமானவராக இருந்திருப்பார்.

ஆனால் இவர்களால் கொல்ல முடிந்ததெல்லாம் புலிகளின் உள்ளூர் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் நிசாம் என்ற உறுப்பினரை மட்டுமே.

ஆனாலும் படைத்தரப்பினதும், இராணுவ புலனாய்வுத் துறையினரதும் நடவடிக்கைகள் புலிகள் தம்மைத் தாக்குதலுக்கு நன்றாகத் தயார்படுத்திக் கொள்வதையோ அல்லது கிழக்கில் ஆட்திரட்டலில் ஈடுபடுவதையோ எள்ளளவேனும் பாதிக்கவில்லை.

கடந்த சில மாதங்களாக கருணா தலைமையிலான ஜெயந்தன் படையணி உள்ளிட்ட தாக்குதல் பிரிவுகள் கடுமையான பயிற்சியிலும் மாதிரித் தாக்குதல்களிலும் (Model attacks) ஈடுபட்டுவருகின்றன. இது கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதலை தொடுக்கவே என எண்ணியது படைத்தரப்பு. அவ்வாறான மாதிரித் தாக்குதல்களில் ஈடுபட்டது சமீபத்தில் இடம் பெற்ற புலிகளின் பெரிய பாய்ச்சலுக்கு முன்னதான பயிற்சியாகக் கூட இருந்திருக்கலாம் என தற்போது நம்புகிறது.




வடக்கில் தாக்குதல்களை கடந்த சில மாதங்களாகத் தவிர்த்திருந்த புலிகள் கடந்த வாரம் தான் ''குடாநாட்டு மக்களிற்கு நீண்ட மடல்'' எனும் தலைப்பில் எச்சரிக்கை பிரசுரம் வெளியிட்டிருந்தனர்.

உள்ளூர் அரசியல் பொறுப்பாளர் ச.இளையதம்பி என்னும் கையொப்பத்துடன் கூடிய இந்தப் பிரசுரத்தில் ''யாழ் மண் எதிரியிடம் இருந்து மீட்கப்படும் நாள் தொலைவில் இல்லை என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.

புலிகள் என்ன நோக்கத்துடன் இதனை விநியோகித்திருக்கிறார்கள் என்பதை அறிய முன்னரே அவ்வெச்சரிக்கைக் கடிதத்தைச் சவாலாக ஏற்றுக் கொண்ட படைத்தரப்பு அதனை கொழும்புத் தலைமையகத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூட்டுப்படைத் தலைமையகத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் ரொஹான் தலுவத்தை முப்படைத் தளபதிகள் சகிதம் மறுநாளே யாழ் சென்று நிலைமையை ஆராய்ந்தார்.

புதிதாக யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றிருக்கும் மேஜர் ஜெனரல் விஜேசூரியவின் தலைமையின் கீழும் மேலதிக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நீல் டயசின் அதிகாரத்தின் கீழும் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் விரிவாக்கப்பட்டன.

ஆனால் அடுத்த சில நாட்களில் புலிகள் கிழக்கில் தமது அதிரடித் தாக்குதல்களை அடுத்தடுத்து நடத்தியிருந்தனர்.

கடந்த ஆகஸ்ட் 21ஆம் திகதி அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையம் தாக்கி அழிக்கப்பட்டது.

மறுநாள் கடற்படையினரை எதிர்பார்த்துப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் அமுக்கக் கண்ணி வெடியில் சிக்கி பஸ் ஒன்று சிதறியது. இதில் நிலாவெளி நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த 14 பயணிகளில் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர். பின்னால் வந்து கொண்டிருந்த கடற்படை வாகனம் மயிரிழையில் தப்பிக் கொண்டது.

அன்றைய தினமிரவு திருமலை அலஸ் தோட்டம் அகதிகள் முகாமிற்குச் சென்ற புலிகளின் பிஸ்டல் குழுவினர் சித்திரவேல் தேவானந்தம் (வயது 23) என்ற முன்னைநாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினரைச் சுட்டுக் கொன்றனர்.

இதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவர் புலிகளால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புலிகள் அத்துடன் நின்றுவிடவில்லை. மறுதினமான ஆகஸ்ட் 23ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள கொக்கிளாய் இராணுவ நிலைகள் மீதும் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர். இதேவேளை மணலாறு மாவட்டத்தின் ஜானகபுர இராணுவ நிலைகள் மீதும் அவர்கள் சமநேரத் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதல்களின்போது புலிகள் பல்குழல் ரொக்கட் ஏவுகணைகளைப் (MBRL) பயன்படுத்தியதாகக் கூறப்படுகின்ற போதும் இவ்வாறான கொரில்லாத் தாக்குதல்களின் போது எம்.பி.ஆர். எல் போன்ற கனரக ஆயுதங்களை புலிகள் பயன்படுத்தக் கூடிய சாத்தியப்பாடுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

காரணம் எம்.பி.ஆர். எல் போன்ற நீண்ட தூர கனரக ஆயுதங்களைக் கொண்டு வருவதும் தாக்குதலின்பின் அவற்றைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்வதும் மிகவும் கடினமான விடயம்.

இவ்வாறான தாக்குதல்களில் இலகுவாகக் காவிச் செல்லக் கூடிய குறுந்தூர மோட்டார் மற்றும் ஆர்.பி.ஜி போன்ற ஆயுதங்களையே சிறப்பாகப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு புலிகள் கிழக்கு மாகாணத்தில் தமது தாக்குதல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருப்பது படையினரைப் பொறுத்தவரை பெரும் தலையிடியைக் கொடுத்திருக்கிறது.

குடாநாட்டில் புலிகளின் எச்சரிக்கைக் கடிதங்களின் பின் அங்கு தம்நிலைகளைப் பலப்படுத்த வேண்டியிருக்கும் படையினருக்குக் கிழக்கில் புலிகளின் கடந்த வாரத் தாக்குதல்கள் புதிய சிக்கல்களை உருவாக்கியிருக்கிறது.

ஏற்கனவே திருமலை கடற்படைத் தளத்துக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலினால் அங்கு பெருமளவு கடற்படையினரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுக் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கட்டுநாயக்கவில் இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நெருக்கடியினாலும் கொழும்பு துறைமுகத்திற்கும் அச்சுறுத்தல் காணப்படுவதாக கிடைக்கும் புலனாய்வுத் துறை அறிக்கைகளினாலும் இங்கிருந்து படைகளை விலக்கி கிழக்கு மாகாணத்திற்கு அனுப்ப முடியாது.

ஆகவே வடக்குக்கு மேலதிகமாக அனுப்பப்படும் படையினரின் ஒரு தொகுதியினர்தான் கிழக்கிற்கு அனுப்ப வேண்டியிருக்கும்.

அவ்வாறாயின் வடக்கின் பாதுகாப்பு மறுசீரமைப்பிற்கு என்னாவது என்ற கேள்வியும் படைத்தலைமைகளினால் ஆழமாக ஆராயப்பட்டுவருகிறது.

வெறுமனே விமானத் தாக்குதல்களினால் மட்டுமே புலிகளின் நடமாட்டங்களை வடக்கிலோ அன்றி கிழக்கிலோ கட்டுப்படுத்த முடியாது.

அத்துடன் மழைக்காலம் வடக்கில் ஆரம்பிக்க இருப்பதால் அதற்கு முன்னர் தம் முன்னரங்க நிலைகளைப் பலப்படுத்த படையினர் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட முனையலாம்.

இவ்வாறு செய்வதால் புலிகளை வடக்கில் தொடர்ந்தும் தற்காப்பு நிலையிலேயே வைத்திருக்க முடியும்.

அத்துடன் நாட்டில் காணப்படும் ஸ்திரமற்ற பொருளாதார அரசியல் நெருக்கடியால் துவண்டு போயுள்ள பேரினவாதிகளுக்கு அரசு தீனிபோட எத்தனிக்கிறது. அக்டோபர் 19ஆம் திகதிக்கு பின்போடப் பட்டுள்ள சர்வஜன வாக்கெடுப்பிற்கு முன்னதாக வடமுனையில் தமது கை உயர்ந்திருப்பதாக உரத்துக் கூற முயல்வதே அரசின் இலட்சியம்போலத் தெரிகிறது.

அக்கினிச் சுவாலை இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட அனுபவங்கள் படையினரை இன்னமும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்நிலையில் அவ்வாறான மேலுமொரு இராணுவ நடவடிக்கை சாத்தியப்படுமா என்பதும் இங்கு சந்தேகமே.

ஒட்டு மொத்தமாகப் புலிகளால் தற்போது கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அமுக்கத் தாக்குதல்களின் வெளிப்பாடு வட களமுனையில் எதிர்வரும் வாரங்களில் பிரதிபலிக்கலாம் என்றே களமுனை ஏற்பாடுகள் எதிர்வு கூறுகின்றன.




GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER

Euromind Active Antenna.

for Clear Reception

Of all Channels in all Locations


Importers and Suppliers

UKAAYE

190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.

Tel: 075-370019, Fax:075-370018





Eurostar

Sole Distributors in Sri Lanka for

UKAAYE

190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.

Tel: 075-370019, Fax:075-370018



என்டெனா பொருத்துதல்




Get it Installed by professionals

TELECAVE (PVT) LTD.

PETTAH : 445377, 439467 (TEL/FAX)

KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)

E-mail : telecave@eureka.lk



முருகாமலை தேர் — தீர்த்தோற்சவம்

சிறப்புற நடைபெற வாழ்த்துகிறோம்!

இந்தியாவில் பிரபல சிற்ப ஆசாரிகளால் உருவாக்கப்பட்டுள்ள தாம்பர விக்கிரகங்கள், சிலா விக்கிரகங்கள், சுதை விக்கிரக வார்ப்பு மணிகள், கலசங்கள், வெள்ளி, தங்க அங்கிகள், கொடிக்கம்பம், தகட்டுத் திருவாசிகள், தலைவரிசை ஆசனக்கற்கள் முதலான அனைத்து சிற்ப வேலைகளுக்கும் நீங்கள் நம்பி நாடவேண்டிய இடம்



இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள்

கோயில்களுக்குத் தேவையான சகல ஓடர்களும் நியாயமான விலையில் உடனுக்குடன் செய்து தரப்படும்.



தானியா என்டர்பிரைசஸ்

193A, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு—13. தொ.பே. 077—769443



அவசர திருத்தங்கள்




Guaranteed repair & service by trained technicians

TELECAVE (PVT) LTD.

PETTAH : 445377, 439467 (TEL/FAX)

KOTAHENA : 478742, 075-352656.(TEL/FAX)

E-mail : telecave@eureka.lk

# சுடர் ஒளி

02 செப்டெம்பர், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com


## வீதிப் போராட்டம் கற்பித்த பாடம்

மக்கள் சக்தி மகத்தானது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களும் காவல் துறையினரான பொலிஸாரும் இதை உணர்ந்து நடந்தால் எவ்வளவோ நல்லது.

சட்ட அதிகாரம் இருக்கிறது என்ற மமதையில் பொலிஸார் அட்டகாசமாக நடக்க முற்பட்டால் பொதுமக்களுக்குக் கெட்ட கோபம் வரும்.

அதன் விளைவு என்னவாகும் என்பதை கடந்த ஜூலை 19இல் கண்டோம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிட்ட அரசாங்கம் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முன்வந்ததும் தவறு, சர்வாதிகாரப் போக்கு என்று கண்டித்து மக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தப் பெரும் எண்ணிக்கையில் வீதியில் இறங்கினார்கள்.

அனுமதி பெறாமல் பேரணி நடத்தக் கூடாது; அது சட்ட விரோதம் என்று பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றார்கள்.

படுமோசமான கண்ணீர்ப் புகை, குண்டாந் தடி, ரப்பர் ரவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள். மக்கள் ஆத்திரமடைந்து பொலிஸாரைத் திருப்பித் தாக்குமளவுக்குச் சென்றார்கள். பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இருவர் இறந்தார்கள்.

இவ்வளவு துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் மக்கள் பாதைகளை மாற்றிப் பேரணி நடத்திக் கூட்டமும் வைத்தார்கள்.

மக்கள் சக்தி வென்றது. அரசும் பொலிஸாரும் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. என்றாலும் நல்லதொரு பாடத்தைப் படிக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்தது.

அதன் விளைவுதான் போலும், கடந்த ஆகஸ்ட் 20ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னணியினர் முன்னின்று அரசுக்கு எதிராக நடத்திய பேரணியைப் பொலிஸார் தடுத்து நிறுத்த நினைக்கவில்லை. அசம்பாவிதம் எதுவுமின்றிப் பேரணியும் பொதுக்கூட்டமும் அமைதியாக நடந்தேறின.

மக்களின் இரண்டாவது வீதிப் போராட்டம் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ஐ.தே.கவின் முன்னிலை ஆதரவுடன் ஆகஸ்ட் 23ல் நடந்தது. அதில் மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த அனைத்து எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

அதுவும் மிக மிக அமைதியாகவே நடந்தது.

பொலிஸ் அனுமதி பெறப்படவில்லை. போராட்டத்தில் மக்கள் கலந்து கொள்ளக் கூடாது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் புலிகள் தாக்குதல் நடத்தி அனர்த்தங்களை ஏற்படுத்தலாம் என்று அரசு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்தது.

மக்கள் அதற்கு அஞ்சவில்லை. மிகப்பெரும் எண்ணிக்கையானவர்கள் பேரணியில் இணைந்து கொண்டனர். பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்கள்.

பொதுக் கூட்ட மேடையில் எதிரணியில் உள்ள தமிழ், முஸ்லிம் எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் மனோகணேசன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ரவூப் ஹக்கீம், ஆனந்தசங்கரி, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, தேவராஜ், ரசூல் முதலானோர் மேடையில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் அமர்ந்திருந்தனர்.

பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் பொலிஸார் பொதுமக்களோடு வழமைக்கு மாறாக அன்னியோன்யமாக நடந்து கொண்டனர்.

பொலிஸாரிடம் இப்போது காணப்படும் இந்த மாற்றம் தற்காலிகமானதா அல்லது நிரந்தரமாக இருக்குமா என்பது தெரியவில்லை.

பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது பொலிஸாரின் முக்கிய கடமை. அப்படியிருக்க, பொலிஸாரே பொதுமக்களைப் பகைத்துக் கொண்டால் என்ன ஆகும்?

பெரும்பாலான பொலிஸாரின் பார்வையில் தமிழ்ப் பொதுமக்கள் எல்லோருமே புலிகள். அதனால்தான் தமிழர்கள் எந்த நேரத்திலெங்கே சென்றாலும் பல தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். வீதிச் சோதனைச் சாவடிகளில் தமிழர்கள் படும்பாடு சொல்லி முடியாது.

பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் தமிழ்ப் பொதுமக்கள் எல்லோரையும் சந்தேகிக்காமல் அவர்களையும் நம்பிக்கைக்குரிய நண்பர்கள் என்ற ரீதியில் நடத்தினால் அனைவருக்கும் நன்மை. தவறினால் தொல்லைதான்!




தேசத்தின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமான மக்கள் நிலையம் கடந்த 20 ஆம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றையும் பொதுக்கூட்டமொன்றையும் கொழும்பில் நடத்தியது. விகாரமஹாதேவி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்ட மேடையில் நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச முதலான அமைப்பின் பிரதிநிதிகளையும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களின் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

## திரும்பிப் பார்க்கும் தமிழ்க் கட்சிகள்...!

தமிழ்க்கட்சிகள் எல்லாம் இப்போது திரும்பிப் பார்க்கின்றன.

அரசாங்கத்தில் கூட்டுப் பொறுப்பு வகிக்கும் டக்ளஸின் ஈ.பி.டி.பியும் ஆறுமுகம் தொண்டமானின் இ.தொ.கா வும் இதற்கு விதிவிலக்கு.

அரசாங்கத்தை வீழ்த்துவதற்குப் பெரும் முயற்சி செய்துவரும் ஐ.தே.க வுக்கு ஆதரவு அளித்துவரும் எதிரணித் தமிழ்க்கட்சிகளே திரும்பிப்பார்க்கின்றன.

காரணங்கள் இரண்டு. அவற்றில் ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் சங்கிலியன்படை விநியோகித்த துண்டுப் பிரசுரம். மற்றது ஐ.தே.க வுடனும் ஜே.வி.பியுடனும் புதிய அரசு அமைப்பது தொடர்பாக அரசாங்கம் நடத்தும் பேச்சுவார்த்தைகள்.

பேச்சுவார்த்தைகளின் பெறுபேறு என்னவாக இருந்தாலும் அவை எந்த அடிப்படையில் நடைபெறுகின்றன என்பதுதான் முக்கியம். அரசாங்கக் கட்சிக்கும் ஐ.தே.க வுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை கருத்தொருமைப்பாட்டு அரசாங்கத்தை (நல்லிணக்க அரசாங்கத்தை) அமைப்பதற்கு.

அரசாங்கத்துக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான பேச்சு தகுதிகாண் இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கு, அதாவது அரசாங்கம் இன்னும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வழி செய்வதற்கு.

ஜே.வி.பியுடன் முன்னரும் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தினார். ஜே.வி.பி விதித்த நிபந்தனைகளில் பலவற்றை ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அவர் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளில் சிலவற்றை அவருடைய அமைச்சர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரு சில அமைச்சர்கள் ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு அந்தக் கட்சியின் பொறியில் விழுந்து விடக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்கவும் செய்தனர்.

என்றாலும் ஜே.வி.பியை ஜனாதிபதி புதிதாகப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். அதுவும் அரசாங்கத் தூதுக்குழுவும் ஐ.தே.க. தூதுக்குழுவும் கூடிப்பேசும் அதே நாளில்.

இது ஐ.தே.கவுக்கு ஜனாதிபதி விடுத்த வெள் வெருட்டாக இருக்கலாம் என்றும் ஒரு கருத்து.

ஐ.தே.கவை முதலில் பேச்சுவார்த்தைக்கு அழைத்தவர் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆவார்.

''நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடிய பொதுத்திட்டத்தின் அடிப்படையில் நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றிப் பேசுவோம் வாருங்கள்.

முக்கியமாக இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை, ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தக் கூட்டாக முயற்சி எடுப்போம். சிறுபான்மை மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தச் சட்ட ரீதியான ஒழுங்குகளைச் செய்வோம்.

தேர்தல் முறையில் திருத்தங்களைக் கொண்டுவருவோம்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம்.

நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவோம். பிரதமருடைய நிலையையும் ஸ்திரப்படுத்துவோம்.

முக்கியமாக இந்த விஷயங்களைப் பற்றிப் பேசுவோம் வாருங்கள் என்று தரன் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுட் பிரதமர் கடிதம் மூலம் அழைத்தார்.

அந்தக் கடிதத்துக்கு ரணில் விக்கிரமசிங்க பதில் அளித்தார்.

''ஜனாதிபதி நியமிக்கும் ஒரு தூதுக் குழுவுடன் ஐ.தே.க. தூதுக்குழு ஒன்று பேசுவதானால் சரி. அதுவும் 24.08.2001இல் பேச்சுத் தொடங்கவேண்டும். பேச்சு இழுபடாமல் குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள் முடிந்து விடவேண்டும்'' என்று ரணில் தனது பதில் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

தூதுக் குழுக்கள் முக்கியமாக எதைப் பற்றிப் பேசவேண்டும் என்றும் ரணில் தெரிவித்திருந்தார். முக்கிய விஷயங்கள் என்று பிரதமர் தெரிவித்தவற்றையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு ரணில் பின்வரும் விஷயங்கள் பற்றியே பேசவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

1. நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டவேண்டும்.

2. சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்ய வேண்டும்.

3. ஐந்து சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிக்கவேண்டும்.

பொலிஸ், தேர்தல், நீதிச் சேவை, அரசாங்க சேவை, ஊடகத்துறை ஆணைக்குழுக்களே அவ்வைந்தும் ஆகும்.

ஐ.தே.க தூதுக்குழுவில் யார் யார் இடம் பெறுகிறார்கள் என்பதையும் ரணில் தெரிவித்திருந்தார்.

இவற்றிற்கெல்லாம் அரசு ஒப்புக்கொண்டது. அரச தூதுக்குழு உறுப்பினர் ஒருவர் கொழும்புக்கு வெளியே சென்றிருந்ததால் ரணிலின் சம்மதத்தோடு அரசு 25 ஆந் திகதி பேச்சுவார்த்தையை தொடங்கியது.

இந்தப் பேச்சுவார்த்தையை நடைபெறச் செய்வதற்கு அரசாங்கம் அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸை ஐ.தே. கவிடம் தூது அனுப்பியதாகத் தகவல் கசிந்தது.

ஒரு கட்சியின் வேண்டுகோளின் பேரில் இன்னொரு கட்சியிடம் தாம் அமெரிக்க அரசாங்க அனுமதி பெற்றுத் தூது சென்றதை தூதுவர் வில்ஸ் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தனது அரசு இலங்கையின் நலனில் அக்கறை கொண்டுள்ளதால் இங்கே நிலையான அரசாங்கமும் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே தாம் தூது சென்றதாக அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

ஆயினும் எந்தக் கட்சி தம்மை அனுப்பியது என்பதையும் எந்தக் கட்சியிடம் தூது சென்றார் என்பதையும் என்ன பேசினார் என்பதையும் அவர் வெளியிடவில்லை.

வில்ஸ் தம்மைச் சந்தித்ததை ரணில் ஒப்புக் கொண்டார். ஆயினும் அவர் தம்மிடம் எவரினதும் தூதுவராக வந்து எந்தச் செய்தியையும் தரவில்லை என்றார். தமது கட்சியின் நிலைப்பாட்டைத்தாம் வில்ஸிடம் தெரிவித்தது மட்டும் தான் நடந்தது என்றும் ரணில் சொன்னார்.

இலங்கையின் உள்நாட்டு விஷயத்தில் அமெரிக்கா மூக்கை நுழைக்க இடமளிக்கப்பட்டிருக்கிறதே என்ற குரல் பேரினவாத வட்டாரங்களில் எழுந்திருக்கிறது.

அது வேறு விஷயம்.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை பேச்சுவார்த்தை எப்போது எங்கே நடக்கிறது என்பதை விட எந்த விஷயங்கள் பற்றிப் பேசப்படுகிறது என்பது தான் முக்கியம்.

யுத்த நிறுத்தம், அரசு -- புலிகள் பேச்சுவார்த்தை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, அதிகாரப்பரவலாக்கல் இவை எல்லாம் முக்கியமானவையாக ரணிலுக்குப் படவில்லை. இவை பற்றிப் பேச வேண்டும் என்று அவர் அரசுக்குத் தெரிவிக்கவில்லை.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவதும், சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்வதும், ஐந்து சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிப்பதும்தான் யுத்தத்தால் சீரழிந்து அகதிவாழ்வு வாழ்ந்து அல்லல்படும் தமிழ் மக்களின் அவசியத்

### காண்டீபம்

தேவையா?

நிலைமையை சரிவர உணராத அல்லது தமிழ் மக்களின் விஷயம் தானே என்று அதைப் பொருட்படுத்தாமல் விட்டிருக்கும் ரணிலின் குறிக்கோள் என்ன?

ஒன்றில் இந்த அரசை வீழ்த்த வேண்டும். அல்லது அரசுடன் சேர்ந்து ஆட்சி அதிகாரம் பெற வேண்டும் என்பது தானா?

இப்படிப்பட்ட ஒருவரின் முயற்சிகளுக்குத் துணை போவது சரிதானா?

இவர் முன்னின்று அரசுக்கு எதிராக நடத்திய இரண்டு வீதிப் போராட்டங்களுக்கும் உறுதுணையாக நின்றோமே, அணி திரண்டு சென்றோமே, அது நியாயப்படுத்தக்கூடியதா? தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் திரும்பிப்பார்த்துச் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

அந்தக் கட்டத்தில் தான் மற்றொரு இடி அவர்களுடைய தலையில் விழுந்தது.

அது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழல் அமைப்பு என்று கருதப்படும் சங்கிலியன் படையின் துண்டுப்பிரசுரம். தமிழ் எம்.பீக்கள் நாடாளுமன்றப் பதவிகளைத் தூக்கி எறிய வேண்டும். விடுதலைப் போருக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். தவறினால் விளைவு பாரதூரமானதாக இருக்கும். கவலைப்படுவதற்கே அவகாசம் இருக்காது என்று கூறும் துண்டுப் பிரசுரம் அது.

துண்டுப்பிரசுரத்தின் முழு விவரம் வருமாறு: —

சிங்களப் பேரினவாதத்தின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்குப் பல வழிகளிலும் 'பக்கபல

மாக நிற்கும் பதவிவெறியர்களே, பதவி விலகுங்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்களினதும், போராளிகளினதும் உயிர்த்தியாகங்களால் கட்டியெழுப்பப்பட்ட விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் துரோகத்தனத்திலிருந்து தூர விலகுங்கள்.

தமிழீழத் தாயகத்தின் விடுதலைப் போரை மழுங்கடிக்கும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்தும் கைகோத்தும் செயற்பட்டுவரும் அரசியல்வாதிகளை மக்களே அரவணைக்காதீர்கள்.

தத்தம் பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காகச் சிங்களப் பேரினவாதத்துடன் நட்புப்பாராட்டிக்கொண்டு போராட்டத்தைக் கொச்சைப்படுத்த இடமளிக்காதீர்கள்.

பண்டா — செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி வருவதே சிங்களத் தலைமைகளின் வழக்கம். இதிலிருந்து தென்னிலங்கைக் கட்சிகள் எதுவும் மாறிவிடவில்லை.

ஆனால் ஜனநாயகப் போர்வையில் நாடாளுமன்றப் பதவிகளைப் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் சிங்களப் பேரினவாதத்தின் கபட நாடகங்களுக்குத் துணை போகின்றனர்.

அபிவிருத்தி செய்யப்போவதாகக் கூறி போராட்டத்தை அடகு வைக்கின்றனர்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என்று சொல்லி பேரினவாதிகளுடன் கைகோக்கின்றனர்.

ஆனால் நடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகித்த கூட்டணியினரும் ஈரோஸ்காரர்களும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தமது பதவிகளை விட்டொதுங்கியதால் போர் வீறு பெற்றது கண்கூடு. அன்றைய நிலைமைகளோடு ஒப்பிடும் போது மிக மோசமான இன்றைய சூழலில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவதே போராட்டத்துக்கான பங்களிப்பாகும்.

போராட்டம் தனக்கான நியாயங்களைத் தானே வாதாடிக் கொள்ளும், போரில் ஈடுபட்டிருப்பவர்களுக்காக வாதாட யாரும் நாடாளுமன்றம் செல்லவேண்டியது அவசியமில்லை.

தன்மானமும், இன உணர்ச்சியும் கொண்டவர்கள் வாழும்வரை போர் நீடிப்பதை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. கடைசிப் போராளி இருக்கும்வரை போராட்டம் ஓயப்போவதில்லை.

எந்த அடக்குமுறைச் சட்டங்களாலும் இன உரிமைப்போரை அடக்கிவிட முடியாது.

எனவே, ஜனநாயக அரசியல் நீரோட்டம் என்பதன் பெயரால் நாடாளுமன்ற நாற்காலிகளைப் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் தத்தம் பதவிகளைத் தூக்கி எறிந்து விடுதலைப் போருக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும்.

சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறைக்கு துணைபோகும் செயல்களை நிறுத்தவேண்டும்.

வீரம் செறிந்த விடுதலைப்போருக்கு உத்வேகம் ஊட்ட முன்வர வேண்டும்.

இந்த அறிவுரையைப் புறக்கணிப்பதால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றிக் கவலைப்படுவதற்குக்கூட உங்களுக்கு அவகாசம் இருக்காது என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம். இப்படித் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது நிலைப்பாடு குறித்துத் தாமே சங்கடப்பட்டுக் கொண்டிருந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ்க்கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கும் இந்தத் துண்டுப்பிரசுரம் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

தேசியக்கட்சிகள் என்ற போர்வையில் உள்ள பேரினவாதக்கட்சிகளில் இன்று ஆட்சி அமைக்கக்கூடிய நிலையில் உள்ளவை இரண்டு கட்சிகள் தான். ஒன்று சுதந்திரக்கட்சியின் பொது ஜன ஐக்கிய முன்னணிக் கூட்டு. மற்றது ஐக்கிய தேசியக் கட்சி.

இரண்டும் ஒன்றை ஒன்று வீழ்த்தி ஆட்சி அதிகாரத்துக்குப் போட்டி போடுகின்றன.

அது முடியாவிட்டால் ஒன்றாகச் சேர்ந்தாவது சிறுபான்மைக் கட்சிகளின் தயவு இல்லாமல் ஆட்சி அதிகாரத்தில் இருக்கலாமா என்று பார்க்கின்றன.

மற்றப்படி அவற்றிற்குச் சிறுபான்மை மக்களின் நலனில் உண்மையான அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. சிறுபான்மை மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கும் நல்ல மனமும் அவற்றிற்கு இல்லை.

இதனால் தமிழ்த் தலைவர்கள் இப்போது ஐயத்துக்கு இடமின்றி உணர்கிறார்கள். அவர்கள் இனி என்ன செய்யப்போகிறார்கள்? சங்கிலியன் படையின் துண்டுப் பிரசுரம் காலம் பார்த்தே விநியோகிக்கப்பட்டிருக்கிறது.


**முருகமலை மலர்**

செயதுமஹறுமப்ர முருகாமலை ஸ்ரீமுருகன் தேர் — தீர்த்தோற்சவ மலர் 12, 13, 21 ஆம் பக்கங்களில்

# மாணவர்களின் பிடிவாதத்தால் மசிந்த யாழ் பல்கலை தலைமை!

தேரடிக்கு வரும்போதே லோகன் உற்சாகமாகக் குரல் எழுப்பினான்.

'யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீண்டும் ஒருமுறை தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றி உள்ளார்கள்' என்று கூறியபடி மணலில் அமர்ந்தான்.

'சமீபத்தில் அங்கே போராட்டம் ஒன்றும் நடக்கவில்லையே' கேட்டார் மாஸ்டர்.

'இது பல்கலைக்கழக உயர்தலைமைக்கும், மாணவர்களுக்கும் நடந்த மௌனப் போராட்டம்', என்றான் லோகன்.

'விண்ணாணத்தை விட்டிட்டு விளக்கமாகச் சொல்லுங் கோவன்' குரலில் கோபம் காட்டினாள் சின்னாச்சி.

நண்பனுக்காக விளக்கத் தொடங்கினான் டானியல்.

'பல்கலைக்கழகங்களிடையே நடக்கும் விளையாட்டுப் போட்டியான ''மினி ஒலிம்பிக்ஸ்'' இந்த வருடம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகிறது.

அதில் கலந்துகொள்ள யாழ். பல்கலைக்கழக விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் பேராதனை செல்ல, நிதி வசதி போதாது என்று உயர் தலைமை கையை விரித்ததாம்.'

'ஏன் இதற்கென்று நிதி ஒக்கப்படவில்லையாமோ?' கேட்டார் விநாசியர்.

'நிதி ஒதுக்கப்பட்டுத்தான் இருந்தது. ஆனால் குடாநாட்டில் இருந்து தெற்குக்குச் செல்ல ஒவ்வொருவருக்கும் ஆகும் செலவு அதிகம் என்பதால் ஒதுக்கப்பட்ட நிதி போதவில்லையாம்.'

'அப்ப இதற்கு முன்னர் எப்படிப் போனவை?' கேட்டார் மாஸ்டர்.

'முன்னாள் நிர்வாகம் மேலதிக நிதிகளை ஏற்படுத்தித்தானாம் தெற்குக்கு 'மினி ஒலிம்பிக்ஸ்' போட்டிகளில் கலந்துகொள்ள மாணவர்களை அனுப்புவது வழக்கமாம்.'

'அப்ப அதேபோல் இந்த வருடமும் செய்திருக்கலாமே?' வினா எழுந்தது சின்னாச்சியிடமிருந்து.

'அங்கேதான் விஷயமிருக்கு. 'மினி ஒலிம்பிக்ஸில்' கலந்து கொள்ள பேராதனை செல்வதற்கு மேலதிக நிதி ஏற்பாடு செய்யும்படி மாணவர்கள் கேட்டார்களாம். ஆனால் மேலதிக நிதி வசதியை ஏற்படுத்துவது இயலாத காரியம் என்று உயர் தலைமை கைவிரித்ததாம்.

அத்துடன் பேராதனை செல்வதற்கான நிதி எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்க ஒரு வழியிருக்கு என்று கூறி ஒரு அரசியல் கட்சியின் பக்கம் கைகாட்டியதாம் உயர் தலைமை.'

'உயர் தலைமைக்கு ஏனாம் இந்த வேலை?' சினத்துடன் சீறினாள் சின்னாச்சி.

'ஏற்கனவே யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்ட விவகாரத்தை துரும்புச் சீட்டாக வைத்து அரசியல் வாதிகளிடம் பல்கலைக்கழக மாணவர்களை மண்டியிட முயற்சித்ததாக உயர் தலைமை மீது சந்தேகம் எழுந்திருந்தது.

அந்த நிலையில் இந்த யோசனையை அடியோடு நிராகரித்த மாணவர்கள், பேராதனை செல்ல பல்கலைக்கழகம் நிதி ஏற்பாடு செய்யாவிட்டால் 'மினி ஒலிம்பிக்ஸில்' கலந்து கொள்வதில்லை என்று மாணவர் தரப்பு அடித்துச் சொல்லி விட்டதாம்.

இந்த இழுபறி நீடித்து விஷயம் பெரிதானால் சிக்கலாகிவிடும் என்ற பயத்தில் இறுதியில் மாணவர்களிடம் மண்டியிட்ட உயர் தலைமை, பேராதனை செல்ல நிதி வசதி ஏற்படுத்தித் தந்ததாம்' சொல்லி முடித்தான் டானியல்.

''தமது பதவியைக் காப்பாற்ற இந்தக் கூத்தாடுறவை,



## தேரடி அரட்டை

எப்படித்தான் உத்தியோகபூர்வ காரில் முன்சீட்டில் தாங்களும் பெரிய மனிதர்கள் என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு போகினமோ தெரியவில்லை'' விசனப்பட்டார் விநாசியர்.

'காலம்தான் இப்படிப்பட்டவைக்குப் பதில் சொல்ல வேணும்' என்றார் மாஸ்டர்.

''இலங்கையில் கால் வைக்கக் கூடாது என்று அம்மா தடுத்த ஒரு தமிழர், மகளின் காலத்தில் கொழும்பில் கால் பதித்திருப்பதும் காலத்தின் கோலம்தான்'' புதுக்கதை கூறினார் விநாசியர்.

'அண்ணை யாரைச் சொல்லுறியள்?'

'உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தபோது அதில் கலந்து கொண்டு உரையாற்ற உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா.ஜனார்த்தனத்துக்கு, அப்போது முட்டுக்கட்டை போடப்பட்டது தெரியும்தானே?'

''அவர் இப்ப 'உலகில் தமிழர்' என்ற நூலுக்கான விடயங்களை சேகரிக்க கொழும்பு வந்திருக்கிறார். தமிழாராய்ச்சி மாநாடு நடந்த போது தமிழர் தாழ்ந்த நிலையிலிருந்ததால் ஜனார்த்தனம் வரத் தடை போடப்பட்டது. இப்ப எங்கள் உரிமை எமக்கு வேண்டும் என்று கேட்கும் நிலைக்கு தமிழர் வந்திருப்பதால், ஜனார்த்தனம் கொழும்பு வந்து போற அளவுக்கு நிலைமை மாறியிருக்கு இது எங்கடை ஆட்களில் உணர்ச்சியில்லாமல் இருக்கும் சிலருக்கு விளங்கினால் சரி'' கூறி முடித்தார் விநாசியர்.

''ஆனாலும் தங்கடை திருப்திக்காக ஜனார்த்தனத்தை இரண்டு மணிநேரம் தடுத்துவைத்து விசாரிச்சினமாம். ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நின்று அவர் புகைப்படமெடுத்துக்கொண்ட போது கைது செய்யப்பட்டு விசாரித்து விடுவிக்கப்பட்டாராம்'' கேள்விப்பட்டதைச் சொன்னான் லோகன்.

'அது சரி நல்லிணக்க அரசு அமைக்கிறதைப் பற்றி கதைபடுகுது' புதுவிடயத்துக்கு அடிபோட்டார் மாஸ்டர்.

'ஓம், நாங்களும் அறிஞ்சனாங்கள். ஐ.தே.கவுக்கும் அரசுக்கும் இடையே தேசிய அரசு அமைப்பது தொடர்பாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தான் புரோக்கர் வேலை பார்த்ததாக செய்திகள் வெளி வந்திருக்காம். அது தெரியுமோ' கேட்டான் லோகன்.

'அவைக்கு ஏனாம் உந்த மூக்கை நுழைக்கிற வேலை' சினந்தாள் சின்னாச்சி.

'ஆடுகளை மோதவிட்டு இடையில் புகுந்து இரத்தம் குடிக்கிற குள்ளநரிக்கு இப்ப நிலவுகிற அரசியல் பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்தால், கஷ்டப்படாமலேயே முழு நாடும் வன்னியாகிவிடும். பிறகு திருகோணமலைத் துறைமுகத்திலை காலூன்றுவதும், ஆயுத விற்பனையும், வேற சாதகமான விஷயங்களும் அமெரிக்காவுக்குக் கேள்விக்குறிதான்.

அது தான் எப்படியும் தற்போதைக்கு இரு பெரிய கட்சிகளையும் சேர்த்து வைத்து தேசிய அரசொன்றை அமைக்க வைத்தால், இப்போதைக்கு நெருக்கடி தீர்ந்து, எங்களைப் போட்டு நசுக்கி நலிவடைய வைக்கலாம். பிறகு எப்படியும் கொஞ்சக் காலத்திலை இரு கட்சிகளும் முட்டி மோதி அரசியல் குழப்பம் ஏற்படும். அப்போது எரியிற வீட்டில் பிடுங்கின கொள்ளைலாபம் என்று ஆதாயம் தேடுவதுதான் வெளிநாடுகளின் நோக்கம் எப்படியோ அவைக்கு நாட்டிலை குழப்பம் நீடிக்க வேணும்' தெரிந்ததைச் சொன்னான் டானியல்.

'ஐயாவும் அம்மாவும் சேர்ந்து அரசமைத்தால் அவைக்கு வால் பிடிக்கிற எங்கடை ஆட்களின் பாடு கொஞ்சம் கஷ்டம் தான்' என்றார் விநாசியர்.

''எங்கடை ஆட்கள் வடக்குக்கும் தெற்குக்கும் இழுபடாமல் பேய்க்கும் பிசாசுக்கும் தண்ணி காட்டுபவர்களுக்குப் பின்னால் ஒன்றாக அணிதிரண்டால் நல்லகாலம் வரும்'' என்று கூறியபடி கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி

— ஏகலைவன்




### நம்பினோர் கெடுவதுண்டு

இக்கரையில் பச்சைப் புல்வெளி இருந்தாலும் ''அதுகளுக்கு'' அக்கரை பச்சையாகவே தெரியும். இக்கரையில் இருந்து அக்கரை போன பின்புதான் தெரியும் பழைய பச்சை எவ்வளவோ நல்லதென்று.

அப்படித்தான் ஓர் அரசியல்வாதிக்கு ஆகியிருக்கிறதாம். தேர்தல் நெருங்கும் நேரம் ஆசை வார்த்தைகளில் மயங்கி பச்சைக் கட்சியில் இருந்து நீலக் கட்சிக்கு மாறியவர் அவர். பிரதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். அதுவும் அதிகார அம்மணியின் தயவால். ஆனால் இப்போது அவர் மீது அம்மணிக்கு அவ்வளவு அக்கறை இல்லையாம்.

அதிகார அம்மணியின் தலைமையில் அதிகாரத் தரப்பு முக்கியஸ்தர்கள் மற்றும் பிராந்திய முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட ஒரு கூட்டம் அந்த மாளிகையில் நடந்தது.

கூட்டத்தில் பொதுவான கருத்துக்களைக் கூற முக்கியஸ்தர்களுக்கு அவகாசம் கிடைத்தது.

நீலக்கட்சியின் ஒரு முக்கியஸ்தர் இந்த கட்சிமாறி வந்த பிரதியமைச்சரை பெயர் சொல்லி விளித்து சில விடயங்களைத் தெரிவித்தாராம்.

அதிகார அம்மணியுடன் நேருக்கு நேர் மோதும் இன்னும் ஒரு அமைச்சருடன் ஏன் சமாதானம் செய்து கொள்ள முடியாது என்று கேள்வி எழுப்பப்பட்டதாம்.

கட்சிமாறியவரின் பெயர் சுட்டிக்காட்டப்பட்டபோதெல்லாம் கிண்டல் செய்யும் வகையில் பெரிய 'ஹூ.....' சத்தம் எழுப்பப்பட்டதாம்.

ஆத்திரம் அடைந்த கட்சி மாறி வந்த பிரதியமைச்சர் தகுந்த பதிலடி கொடுத்துப் பேச முற்பட்டாராம்.

ஆனால் படிப்படியாக அதிகரித்த ''ஹூ'' கிண்டல் சத்தம் அவரைப் பேச விடவில்லையாம். அவருக்கு எதிராகக் கிண்டல் செய்து ''ஹூ'' சத்தம் போட்டபோதும் தலைமை வகித்த அதிகார அம்மணி சபையை அமைதிப்படுத்தவோ; அவரைக் காப்பாற்றவோ முன்வரவில்லையாம்.

### உனக்கும் எனக்கும் ரகசியம்

இரண்டெழுத்துக்காரர்கள் அந்தத் தளத்தில் வீரகாவியம் படைத்துச் சாதனை நடத்தியது குறித்து ஒரே ஒரு சீருடைத் தலைமைக்காரருக்கு மட்டும்தான் ரோசம் ஏற்பட்டிருக்கிறதாம்.

நேரடி பொறுப்பு உள்ளவர்களே செய்ய முன்வராத காரியத்தை அந்தச் சீருடைத் தலைமைக்காரர் செய்ய முன்வந்தாராம். அலுவலகத்தில் இருந்து தனது ராஜினாமாக் கடிதத்தை எழுதி, அதை நேரடியாக அதிகார அம்மணியிடம் சமர்ப்பித்தாராம்.

அத்தகைய ஒரு காரியத்தை எத்தனையோ தடவை தாமே செய்திருக்க வேண்டிய அதிகார அம்மணி அதற்கு இணங்குவாரா?

ராஜினாமாக் கடிதத்தை ஏற்க மறுத்தார் அதிகார அம்மணி. அது மட்டும் அல்ல சீருடைக்காரரின் சேவையை புகழ்ந்து பாராட்டினாராம்.

ராஜினாமாவை ஏற்பதால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக்காட்டி அவரை அமைதிப்படுத்தினாராம்.

அத்தோடு இந்த விவகாரத்தை வெளியே கசிய விடாமல் பார்த்துக்கொள்ளுமாறும் அவரைக் கேட்டுக் கொண்டாராம்.

### சீட்டு

அதிகார மன்றம் 'மீண்டும் கூடுமா?' புதிதாகத் தேர்தல் நடக்குமா? ஆட்சி நிலைக்குமா? இப்படி எல்லாம் பொதுமக்கள் கூடிக் கூடி பேசி வருகிறார்கள்.

ஆனால் அடுத்த தேர்தலில் யார் யார் போட்டியிடுவது என்பது குறித்து அந்தக் கட்சிக்குள் இப்போதே கச முசாக்கள் இடம் பெறுகின்றனவாம்.

அதிகார மன்றம் அதிகாரத்துடன் இருக்கும் பிரதிநிதிகள் மத்தியில் தேர்தல் குறித்து நடக்கும் விவாதங்களில் வீதியும் வீதியோரமும் குறித்து பேசப்படுகிறதாம்.

அந்த அமைச்சர் எந்தக் காரியத்தையும் திறமையாகச் செய்யக் கூடியவர் என்று புகழப்படுபவர். அவருக்கு அடுத்த தேர்தலில் 'சீட்டு' கிடையாதாம்.

அவருக்கு 'சீட்டு' கொடுப்பதை எப்படியும் தடுத்து நிறுத்தச் சிலர் முயல்கிறார்களாம். அப்படி 'சீட்டு' கிடைக்காவிட்டால் நெடுஞ்சாலைகள் வழியாக அரசியல் அகதியாகத் திரியமாட்டார் என்று அவர் சார்பானவர்கள் கூறுகிறார்களாம்.

கட்டடங்களை உடைப்பதில் பிரசித்தி பெற்ற இன்னுமொரு அரசியல்வாதி அடுத்த தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவதென்று தீர்மானித்து விட்டாராம். மக்கள் எப்படித் தீர்ப்பளிப்பார்களோ?'

### கூட்டு

தேர்தல் பற்றிய அறிவிப்புக்கு நாள், காலம் நெருங்கிவிட்டதனால் கூட்டுக்கள் அமைப்பது பற்றிய பேச்சுக்களும் ஆரம்பமாகி விட்டனவாம்.

அதிகார அம்மணிக்கு அந்த அமைச்சரும், அந்த அமைச்சருக்கு அதிகார அம்மணியும் மாறி மாறி நீண்ட கடிதங்களை அனுப்பிக்கொள்ளும் சச்சரவான சூழ்நிலை ஏற்படுவதற்கு ''கூட்டு அமைக்கும்'' திட்டமும் காரணமாம்.

முன்னாள் விளையாட்டுப் பிள்ளையான அந்த இரண்டெழுத்துப் பிரபல அரசியல் புள்ளி பச்சைக் கட்சியுடன் கூட்டு அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறாராம். இந்த விவரம் அம்பலமாகியதால்தான் ''சுபீட்சம்'' திட்டத்தின் பணம் வங்கிப் பங்குச் சந்தைக்கு மாறிய கதைகள் அம்மணியால் வெளியிடப்பட்டனவாம்.

பிரபலமான இப்புள்ளிக்கு 'சுபீட்சம்' திட்டத்தில் பெரும் பின்புல செல்வாக்கு உள்ளதால் அதன் நன்மைகளைப் பச்சைக் கட்சிக்கு இழுக்கும் நோக்கம் பச்சைக்கட்சியின் பெரும் புள்ளிகளுக்கு இருக்கிறதாம்.

எல்லாம் சரியாக அமைந்து தேர்தலுக்குத் திகதி குறிப்பிடப்பட்டு விட்டால், அதிகார அம்மணியின் தரப்பில் இருந்து விலகி தனித்து இயங்கும் நோக்கம் அரச தரப்பின் அந்தப் பிரபலஸ்தர்களுக்கும் அவர் சகாக்களான பிரபல புள்ளிகளுக்கும் இருக்கிறதாம்.

பச்சைக் கட்சியின் பிரபல புள்ளிகளுக்கும், இவர்களுக்கும் இடையில் ரகசிய தொடர்புகள் இருப்பது குறித்தும் தகவல்கள் கசிகின்றனவாம்.

அதேநேரம் மொரட்டுவ பகுதியின் ஓர் அரசியல் புள்ளி, அப்பகுதியில் செய்யும் அபிவிருத்தி தொடர்பான வைபவங்களில் அதிகார அம்மணிக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அரச அதிகாரப் புள்ளிகள் அடிக்கடி கலந்து கொள்கிறார்களாம்.

இவர்களின் ஐக்கியம், இன்னும் ஓர் ஐக்கிய கட்சிக்குள் பெரும் மகிழ்ச்சிப் பிரவாகத்தை ஏற்படுத்தியிருக்கிறதாம்.

STUDY IN LONDON USA & CYPRUS

Get the Degree from the Prestigious Leicester University (Afliated to London City College)

LONDON, U.S.A, CYPRUS

Sep, Oct 2001 கற்கைநெறிகளுக்கான பதிவுகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

கற்கை நெறிகள்

- Business studies (BBA, MBA., Phd)
- Hotel & Tourism Management,
- Computing & Engineering Courses,
- Marketing Management,
- Information Technology in Business
- Shipping Courses ETC.
- இலவச ஆலோசனை
- உறுதிப்படுத்தப்பட்ட பகுதி நேர வேலை
- அடிப்படை கல்வித் தகைமை (O/L)



Authorised University Agent in Sri Lanka

நாடுங்கள்! ஆலோசனை வழங்குவதில் முன்னோடியான

M.S.LANKA

Recruitment & Travels (Pvt) Ltd

(Licence No: 1745)

379 2/2, (2nd Floor)

Galle Road, Wellawatta, Colombo-06

(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)

☎ : 074-513442, 074-517836.

Fax : 074-518928.

Mobile : 077-672084, 077-374314.

E-mail : mslanka@visual.lk

வெளிநாட்டுக் கல்வியைத் தொடர்வதற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் (Students to Europe Countries;) வேலைவாய்ப்புக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கும் முகவர்கள் (Sub Agent) தேவைப்படுகின்றனர்.

# இராணுவ மேலிடத்து ஊழல்! விசாரணை இழுத்தடிப்பு ஏன்?

இராணுவ மேலிடத்து ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணை ஒன்று எட்டு மாதங்களுக்கு மேலாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. காரணம் என்ன? ஆறிய கஞ்சி பழங்கஞ்சி ஆகட்டும் என்ற நினைப்பா என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

இந்த ஊழலில் சம்பந்தப்பட்டவர் என்று கூறப்படுபவர் முன்னர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் ஜி.எஸ்.ஸி.பொன்சேகா.

உத்தியோகத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட சட்டலைட் தொலைபேசியை இவர் சொந்தத் தேவைக்கு அதுவும் வெளிநாட்டுத் தொடர்புகளுக்குப் பயன்படுத்தினார் என்பதே இவர் மீதான குற்றச்சாட்டு.

சட்டலைட் தொலைபேசியை சொந்தத் தேவைகளுக்குத் தாராளமாகப் பயன்படுத்தியதால் கட்டணம் பல லட்சங்களைத் தாண்டிவிட்டது.

பெரும்பாலான அழைப்புக்களை இவர் அமெரிக்காவுக்கே எடுத்துள்ளார்.

2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி அமெரிக்காவுக்கு ஓர் அழைப்பை எடுத்து 110 நிமிடங்கள் 48 செக்கன்களுக்குப் பேசியிருக்கிறார்.

இது தொடர்பான பல விவரங்கள் இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. இதையடுத்துப் பல குட்டுகள் அம்பலமாகியிருக்கின்றன.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பொன்சேகாவின் சட்டலைட் தொலைபேசிக் கட்டணங்கள் வருமாறு:—

2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் 81,538 ரூபா 17 சதம்; 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 901,020 ரூபா 94 சதம்; 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 811,880 ரூபா 76 சதம்; 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 605,826 ரூபா 99 சதம்; 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 287,442 ரூபா 63 சதம்; 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 131,630 ரூபா 27 சதம்.


இவரது சட்டலைட் தொலைபேசி கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரை பாவனையிலிருந்தது. பின்னர், பொன்சேகா இலங்கை அரசால் உயர் பயிற்சிநெறி ஒன்றில் கலந்துகொள்வதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தொலைபேசித் துஷ்பிரயோகம் ( Phone misuse) தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு அதிகம் அலட்டிக் கொள்ள அஞ்சுகிறது . 65 லட்சம் ரூபா செலவில் பொன்சேகா உயர் கல்விக்காக வெளிநாடு அனுப்பி வைக்கப்பட்டார் என்று கதைக்கு முடிவுரை எழுதிவிட்டது.

அமைச்சர் மங்கள சமரவீர தபால் தொலைத் தொடர்பு அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் பொன்சேகாவுக்கான சட்டலைட் தொலைபேசி வழங்கப்பட்டது.

பொன்சேகா யாழ்ப்பாணத்துக்கு மாற்றலான போது இந்த இணைப்பு கடமையின் நிமித்தம் வழங்கப்பட்டது.

ஆனால், பின்னர் இவர் வன்னிக்குப் மாற்றலானார். அனைத்து நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதியாக (Overall Operations Commander) நியமிக்கப்பட்டார். அப்போது தன்னுடன் இந்தத் தொலைபேசி இணைப்பையும் கொண்டு சென்று விட்டார்.




தொலைபேசிக்கட்டண பற்றுச்சீட்டின் பிரதிகள்

வன்னியில் இவர் கடமையிலிருந்த போது சட்டலைட் தொலைபேசிக் கட்டணம் ரூ. 27 லட்சம். யாழ்ப்பாணத்திலிருந்த போது சட்டலைட் தொலைபேசிக் கட்டணம் ரூ. 17 லட்சம்.

தான்தோன்றித்தனமாக வெளிநாடுகளுக்கு அழைப்புகளை மேற்கொண்டு சட்டலைட் தொலைபேசியால் குவிந்த கட்டணத்தை இவர் அரச கணக்கில் காட்டி விடுவாரா அல்லது தனது தேவைகளுக்கு மேற்கொண்ட அழைப்புகளுக்குத் தமது சொந்தப் பணத்தைச் செலுத்துவாரா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

சொந்தத் தேவைக்கு ஏற்படுத்திய அழைப்புக்களுக்கான கட்டணத்தை மாதா மாதம் இவரது ஊதியத்தில் கழித்தால் கூட கணக்குத் தீராது.

தற்போது பதவியிலுள்ள உயர் இராணுவ அதிகாரிகள் தர வரிசையில் மேஜர் ஜெனரல் பொன்சேகா ஆறாவது ஸ்தானத்தில் உள்ளார்.

சிரேஷ்ட அதிகாரிகளின் தர வரிசை, மற்றும் அனுபவ முதிர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் அடுத்த இராணுவத் தளபதியாக வரக்கூடிய தகுதி பொன்சேகாவுக்கே அதிகம் உண்டு என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இங்கிலாந்தில் உள்ள பொன்சேகா எதிர்வரும் டிசெம்பர் மாதம் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவருக்கான சட்டலைட் தொலைபேசி இணைப்பு தற்போது துண்டிக்கப்பட்டு விட்டது.

பொன்சேகாவின் தொலைபேசி துஷ்பிரயோகம் பற்றி இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரத்னவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது விஷயம் உண்மை என அவரும் ஒத்துக்கொண்டார். இவ்வாறான தவறுகள் இதற்கு முன்னர் நடந்ததில்லை. தற்போது இடம்பெற்றிருப்பது ஒரு அசாதாரண நிகழ்வு என்றும் அவர் சொன்னார்.

சம்பவம் தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு— பாதுகாப்பு அமைச்சு விசாரணை நடத்தி வருகிறது என்றார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இந்த விடயம் படைத் தரப்பினுள் அம்பலமாகி விட்டது. எட்டு மாதங்கள் கடந்து விட்டன.

வெளியூரில் 'திருவாளர் ' இருக்கிறார் என்ற சாக்கில் விடயத்தை விட்டுவிட விருப்பமா அல்லது தொடர்ந்து விசாரணைகள் நடைபெறுமா? இது கேள்விக் குறியாகவே உள்ளது. உறுதியளிக்கப்பட்ட பல விசாரணைகள் இன்னும் தொக்கு நிற்பது போல் இதுவும் ஆகிவிடுமா என்ற வினாவும் எழச் செய்கிறது.

— எறியன்

# நட்பு, பகையாக மாறினால்.....!

தேசிய அரசு யோசனையை முன்வைத்த முன்னோடி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க ஆவார்.

அவசியமேற்பட்டால் நீதிமன்றங்களை சிறிது காலத்துக்கு மூடி வைக்க வேண்டும் என்று முன்னர் கூறி பெரும் சர்ச்சையைக் கிளப்பியவரும் அவரே.

அவர் வெளியிட்ட கருத்துக்களை ஜனாதிபதியால் ஜீரணிக்க முடியவில்லை.

இப்பொழுது ஜனாதிபதி சந்திரிகாவுடன் ஒரு பெரும் சவால்விடும் அளவுக்கு மோதல் வலுத்துள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகாவுடன் அமைச்சர் எஸ்.பி.க்கு சில கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின்றன. அமைச்சரவைக் கூட்டங்களிலும் அவை எதிரொலித்துள்ளன.

இதனால் சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவி அவரிடமிருந்து பறிக்கப்படலாம் என்ற ஹேஷ்யமும் சில காலத்துக்கு முன்னர் வெளியானது.

இந்த முரண்பாடுகள் நீடித்துக் கொண்டிருக்கையிலேயே ஜனாதிபதி முதலாவது மறைமுகத் தாக்குதலைத் தொடுத்தார். ஜூலை மாதம் 22 ஆம் திகதி கொழும்பு பழைய குதிரைப் பந்தயத் திடலில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான இக்கூட்டத்தில் பொ.ஐ.மு கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஜனாதிபதி முக்கிய உரையாற்றினார்.


''சிறு சிறு பிரச்சினைகளை முன்வைத்து கட்சியைப் பிளவுபடுத்த எவராவது முயற்சிப்பார்களேயானால் அவர்கள் பொய்ப்பிரசாரம் செய்யாமல் இப்பொழுதே வெளியேறிச் செல்லலாம். அவ்வாறு செல்ல விரும்புவோர் அதை அறிவித்து விட்டு இந்த நிமிடமே வெளியேறலாம்'' என்று ஜனாதிபதி கூறி இருந்தார்.

கட்சிக்குள் உள்ள 'சிண்டு' பிடிப்பை ஜனாதிபதியின் இந்தக் காரசாரமான பேச்சே அம்பலத்துக்குக் கொண்டுவந்தது.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் ஜனாதிபதியின் தீர்மானத்தை அமைச்சர்கள் சிலர் எதிர்க்கிறார்கள் என்ற செய்தியையும் அது மெய்ப்பிப்பதாக இருந்தது.

ஜனாதிபதியின் இந்த சாட்டையடிக்குப் பின்னரும் எவரும் கட்சியை விட்டு வெளியேறவில்லை. இருந்தாலும் சில அமைச்சர்கள் தமது மனக்குமுறல்களை சொல்லாலும் செயலாலும் இடைக்கிடையே வெளிப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி 28 பிரதியமைச்சர்கள் திடீரென பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர். ஜனாதிபதிக்கு தமது ஒத்துழைப்பைத் தெரிவிக்கவே அவர்கள் இவ்வாறு செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.



சந்திரிகா


பிரதியமைச்சர்களைப் பின்பற்றி அமைச்சர்களும் பதவி விலகல் கடிதங்களை கையளிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அலவி மௌலானா, ரெஜி ரணதுங்க, ஜீவன் குமாரதுங்க ஆகிய மூன்று அமைச்சர்கள் மட்டுமே கடந்த 20ஆம் திகதி கடிதங்களைக் கையளித்தனர்.

திகதியிடாத பதவி விலகல் கடிதங்களைக் கையளிக்கும் இச் செயலுக்கு அமைச்சர்கள் மத்தியில் அவ்வளவாக ஆதரவு இருக்கவில்லை. சிலர் எதிர்க்கவும் செய்தனர்.

நாட்டின் பிரச்சினைகளைப் பதவி விலகல் கடிதங்கள் தீர்க்குமாயின் திகதியிட்டே கடிதங்களைக் கையளிக்கத்தாம் தயார் என்று அமைச்சர் ஜெயராஜ் கூறியுள்ளார். அமைச்சர்களைப் பதவி நீக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருப்பதால் அவர் எந்த நேரத்திலும் எந்த அமைச்சரையும் பதவியிலிருந்து நீக்கலாம். ஆகவே பதவி விலகல் கடிதங்களை வழங்க வேண்டிய அவசியம் இல்லையென அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

இறுதியில் இந்தப் பதவி விலகல் 'நாடகம்' ஒரு புஸ்வாணமாகவே முடிந்தது. அமைச்சர் எஸ்.பியை இலக்கு வைத்துத்தான் இந்தப் பதவி விலகல் கடித நாடகம் அரங்கேற்றப்பட்டதோ என்ற சந்தேகத்தை, அடுத்து வந்த ஜனாதிபதியின் அறிவிப்புகள் ஏற்படுத்தின.

கம்பஹா மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கூட்டம் ஒன்றில் கடந்த வாரம் ஜனாதிபதி உரையாற்றினார். ''சமுர்த்தி பணம் 16 கோடி ரூபா சட்டவிரோதமாக தனியார் வங்கி ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இது குறித்து விசாரணை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. விசாரணை விவரங்கள் விரைவில் வெளியிடப்படும்''. இவ்வாறு அறிவித்த ஜனாதிபதி எஸ்.பி.யையே இதற்குப் பொறுப்பாளியாக்கியிருந்தார்.



எஸ்.பி.திசாநாயக்க

அமைச்சர் எஸ்.பி மறுநாளே இக்குற்றச்சாட்டுக்குச் சூடாகப் பதிலளித்தார். ''அது வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணம் அல்ல. வங்கியில் பங்குகளை வாங்கவே பணம் பயன்படுத்தப்பட்டது. மத்திய வங்கியின் அனுமதியும் அதற்கு உண்டு'' என்று நீண்டதொரு விளக்கத்தை அவர் அளித்திருந்தார்.

ஜனாதிபதி பதிலுக்கு மற்றொரு அறிக்கை வெளியிட்டார். சமுர்த்தி அமைச்சின் தில்லுமுல்லுகளால் சமுர்த்தி பயன்பெறுவோருக்கு நன்மைகள் கிட்டவில்லை என்ற குற்றச்சாட்டையும் சுமத்தினார்.

அமைச்சர் எஸ்.பியும் விடவில்லை. மற்றொரு பதில் அறிக்கையையும் வெளியிட்டார். ஜனாதிபதி தனக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபித்தால் தாம் அரசியலுக்கு முழுக்குப் போடவும் தயார் என்று அறிக்கையில் அவர் சவாலும் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா அமைச்சர் எஸ்.பி மோதலுக்கு முடிவு என்ன? கவிழப் போகும் கப்பலின் நிலையிலேயே அரசு இருந்து வருகிறது. கப்பலைக் காப்பாற்ற ஜனாதிபதி இதுவரை எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வி கண்டுள்ளன.

இந்த நிலையில் கப்பலுக்குள்ளும் புகையத் தொடங்கியுள்ளது. கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கு விசுவாசமான அமைச்சர்களில் சிலர் கூட விசுவாசத்தை வெளிப்படுத்தத் தவறி விட்டனர். சுதந்திரக்கட்சி நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதை இவையெல்லாம் காட்டுகின்றன.

இந்த நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும் என்று அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் அரசியல்— பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டி இருக்கையில் கட்சிக்குள் சண்டையிட்டுக் கொள்வதா என்று ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். இச்சண்டையைத் தற்காலிகமாகவாவது நிறுத்திக் கொள்ளுங்கள் எனவும் அவர் கோரியுள்ளார்.

கோரிக்கைகளுக்கும் யோசனைகளுக்கும் செவிமடுக்கும் நிலையில் ஜனாதிபதி இன்று இருக்கின்றாரா? ''நடந்து முடிந்த பத்துத் தேர்தல்களிலும் நாமே வென்றோம். 2006 ஆம் ஆண்டு வரை நானே ஜனாதிபதி''. இவ்வாறு அவர் தொடர்ந்து பெருமை பேசுவதிலேயே ஈடுபட்டுள்ளார்.

அவர் எவருக்குத்தான் விட்டுக் கொடுப்பார்?

ஒரு காலத்தில் ஜனாதிபதிக்கும் திசாநாயக்கவுக்கும் இருந்த ஒட்டு வர்ணிக்க முடியாததாக விளங்கியது.

ஆனால் இன்று இருவருக்கும் வெட்டுப்பகை. நட்பு, பகையாக மாறிவிட்டால் மனிதரே கீரியும் பாம்பும் ஆகிவிடுகிறார்கள். சமுர்த்தியை மையமாக வைத்து கீரிக்கும் பாம்புக்கும் இடையே போர் ஆரம்பமாகிவிட்டது. இனிப் பொறுத்திருந்து முடிவைப் பார்க்கவேண்டியதுதான்!

— அவதானி

# திரை மறைவில்

'உயிரிலே கலந்தது' படத்தில் ஒரு பாடலுக்கு ஆடியவர் விந்திய நடிகை. பின்னர் அது நட்புக்காக ஆடியது இனிமேல் ஒரு பாடலுக்கு நடனம் ஆட மாட்டேன் என்று அடித்துச் சொன்னவர் இப்போது மீண்டும் இயக்குநர் இமயத்தின் 'பரவசம் தரும்' படத்தில் ஒரு பாடலுக்கு ஆடியிருக்கிறார்.

**

'மனதைத் திருடிவிட்டாய்' படத்திற்காக லட்டு லட்டா பொண்ணுங்கள சிபாரிசு செய்தேன். ஆனால் இடையில் என்னவெல்லாமோ நடந்து மறுபடியும் அதே முருங்கைக்காய் கூட (கவுஸ் நடிகை) நடிக்க வேண்டியதாப் போயிடுச்சே என்று அலுத்துக் கொள்கிறாராம் நடன நடிகர்.

**

'சவுண்ட் பார்ட்டி' படத்திற்காக பொள்ளாச்சி போயிருந்த 'பிரதி' நடிகைக்கு தயாரிப்பாளரின் மகன் தொந்தரவு கொடுத்ததனால் நடிகை சொல்லாமல் கொள்ளாமல் சென்னைக்கு ஓடி வந்து விட்டாராம்.

தயாரிப்பாளர் தரப்பு 'பிரதி' நடிகையைத் தேடி வந்து அவரிடம் மன்னிப்பு கேட்ட பின்னர் தான் 'பிரதி' நடிகை படத்தில் தொடர்ந்து நடிப்பதற்குச் சம்மதித்தாராம்.



அஞ்சலா ஜவேரி

**

ஒரு நாளைக்கு ஐம்பதாயிரம் என தமிழிலுள்ள முன்னணி நடிகைகள் யாரும் வாங்காத சம்பளத்தை வாங்கு கிறார் 'ஷகீ' நடிகை. ஒரு நாளைக்கு என்றால் காலை 9 மணி யிலிருந்து இரவு ஒன்பது மணிவரை தானாம். அதற்கு மேல் என்றால் மேலதிகமாகக் கொடுக்க வேண்டுமாம்.

**

ஐவேரி நடிகைக்கு சென்னையில் அவ்வளவாகத் தொடர்புகள் இல்லையாம். ஆனாலும் 'தேவ' நடிகரின் நட்பு பலமாக உள்ளதாம். அண்ணாரின் சிபாரி சினால் 2 தெலுங்குப் படங்கள் கிடைத் திருக்கின்றன.

## இனி இவர்கள்..

*ராதிகா தயாரிக்கும் புதிய படத்திற்கு ஹாரீஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.

*'வல்லரசு' படத்தில் சிறிய கரெக்டரில் அறிமுகமான எஸ். எஸ். சந்திரனின் மகன் ரோஹித் இப்போது 'ராயல் பேமிலி' என்ற படத்தில் இரண்டு ஹீரோக்களில் ஒருவராக நடிக்கிறார்.



ஸ்ரீகாந்த் – பூமிகா
படம்: ரோஜாக்கூட்டம்

## பூமிகாவிற்கு சசி உத்தரவாதம்

பூமிகாவினால் தான் 'ரோஜாக் கூட்டம்' படம் வெளிவரத் தாமதமாகிறது என்று ஒரு செய்தி திரையுலகில் நிலவுகிறது. படத்தின் இயக்குநர் சசியிடம் கேட்ட போது, ''யார் சொன்னது அவங்க கோபரேட்டிவ் வான நடிகை கால்ஷீட் விஷயத் தில் அவரால் எந்தக் குழப்பமுமில்லை'' என்று பூமிகா விற்கு உத்தரவாதப்பத்திரம் வாசிக்கிறார் டைரக்டர் சசி.



அபிநயஸ்ரீ, சஞ்சீவ்குமார், அவினாஷ், அனுசுயா
படம்: 'பியூட்டி'

## திரைக்கு வருகிறார் விஜய்யின் தம்பி

'பியூட்டி' என்ற படத்தில் இரண்டு ஹீரோக்களில் ஒருவராக நடிப்பவர் சஞ்சீவ் குமார். இவர் நடிகர் விஜய்யின் சித்தி மகன். 'கல்லறைப் பூக்கள்' என்ற திரைப் பயிற்சி படத்தில் சிறப்பாக நடித்ததற்காக தமிழக அரசின் விருதை கலைஞர் கையால் பெற்றிருக்கிறார்.

அத்துடன் சண்டைப்பயிற்சி குதிரையேற்றம் போன்றவைகளை முறையாகக் கற்றுக் கொண்டுள்ளாராம். இப்படத்தில் இவருக்கு ஜோடியாக நடிப்பவர் அபிநயஸ்ரீ.

## சாக்ஷி விவரிப்பு! ரசிகர் வியப்பு !!

நடிகை சாக்ஷியைப் பார்க்கும் எல்லோரும் அவரை மும்பாய்ப்பெண் என்று நினைத்துக் கொள்கிறார்களாம்.

அதனால் சாக்ஷிக்குத் தமிழ் தெரியாதென்ற நினைப்பில் ஆங்கிலத்தில் அல்லது ஹிந்தியில் உரையாட ஆரம்பித்துவிடுகிறார்களாம்.

அண்மையில் 'வேதம்' படத்தில் சாக்ஷி நடித்துக் கொண்டிருந்த போது, ரசிகர் ஒருவர் சாக்ஷியைச் சந்தித்திருக்கிறார். ரசிகர் சாக்ஷியுடன் ஹிந்தியில் உரையாட ஆரம்பித்திருக்கிறார். ஆரம்பத்தில் தானும் ஹிந்தியில் உரையாடிய சாக்ஷி இடையில் தமிழில் உரையாட ஆரம்பித்து விட்டாராம். தடுமாறிப் போன ரசிகர் சாக்ஷியிடம் விவரங்கேட்டிருக்கிறார்.

அப்போது தான் சாக்ஷி தமிழ்ப்பெண் என்பதும் அவரது தந்தை பெயர் சிவானந்தா என்பதும் ரசிகருக்குத் தெரிந்ததாம். ஆச்சரிய மடைந்தவராக,''அடடா பார்ப்பதற்கு பம்பாய் பொண்ணு மாதிரியே இருக்கிறீங்களே! என்று சொல்லிச்சொல்லி அசடு வழிந்தாராம். ரசிகரை போகச் சொல்வதற்குள் பெரும்பாடாகி விட்டதாம். இந்த சம்பவத்திற்குப்பிறகு சாக்ஷியின் தாய்க்குலம் மகளிடம் எவன் எப்படி நினைச்சா உனக்கென்ன? கண்டபடி உளறிக்கொட்டி அவஸ்தைப்படாமல் நடிச்சு நாலு காசு சம்பாதிக்கிற வழியைப்பார் என்று உபதேசம் செய்துள்ளாராம்.

## அப்பாவிகளான நடிகைகளின் அப்பாக்கள்!



மீனா

நடிக்க வந்து விட்டாலே பணமும் புகழும் தேடி வரும். இது ஒரு புறமிருக்க, நடிகைகள் இவற்றைச் சம்பாதிப் பதற்கு எதையும் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அப்படி இல்லையாயின் ஆரம்பத்திலேயே ஓரங்கட்டப்பட்டு விடுவார்கள்.

மகள்மாரைப் போன்றே பெற்றோர் சகோதரர்களும் சினிமா வாழ்க்கைக்குப் பழகிக் கொள்ள வேண்டும்.அதுவும் குறிப்பாக பெற்றோர் எதிர்நோக்கும் சிக்கல்கள் அதிகம்.

மகள் நடிகையாகி விட்டாள் என்பதை சந்தோஷமான மன நிலையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை விட்டு விட்டு கௌரவம், கத்தரிக்காய் என்று கதைத்துக் கொண்டிருந்தாலோ அல்லது மகளின் நடிப்பு ஆசைக்குத் தடை போட்டாலோ பெற்றோருக்கு மகள் என்பதை மறந்து அவர்களை நடிகை என்ற ரீதியில் பார்ப்பாள். பெரும்பாலும் தந்தை பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

மீனாவின் தந்தையும் ஆரம்பத்தில் கண்டபடி கட்டுப்பாடுகளை விதித்தவர்தான்.'' ஆனால் தாய்க்குலம் உஷாராகி மகளுக்கு உறுதுணையாக நின்றதனால் எதுவும் செய்ய முடியாத நிலை தந்தைக்கு.

தனது சம்பாத்தியத்தில் இப்படி வசதிகளோடு மனைவி, மகளை வாழ வைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டவர் மனைவி, மகளோடு சேர்ந்து தானும் சினிமா வாழ்க்கைக்குப் பழகிக் கொண்டார்.

ஆனால் தம்மை மாற்றிக் கொள்ள முடியாத அப்பாவி அப்பாக்களும் இருக்கத்தான் செய்கின்றனர். தற்போது கொடிகட்டிப் பறக்கும் 'தாஜ்' நடிகையின் அப்பாவும் கௌரவம் பார்க்கும் அப்பாவின் வகைக்குள் அடங்குபவர்.

கூழோ, கஞ்சியோ கௌரவத்தோடு குடிக்க வேண்டும் என்று நினைப்பவர். 'தாஜ்' நடிகையின் குடும்பம் இருந்த நிலையில் மகளை வைத்து சம்பாதிக்க நினைத்தார் தாய்.

தந்தை எதிர்ப்புக் கொடி தூக்கினார். ஆனாலும் கணவரின் பேச்சைக் கேட்காத 'தாஜ்' நடிகையின் தாயார் மகளை நடிக்க வைக்க முயற்சி செய்தார். மகளும் பெருமளவு பணத்தைச் சம்பாதிக்க ஆரம்பித்தார். விஷயத்தை அறிந்த தந்தைக்குலம் மனைவியையும் மகளையும் எச்சரித்தார். அது மட்டுமல்ல வீட்டை விட்டுப் போகக் கூடாது என்று கட்டளையும் போட்டு விட்டார்.

'தாஜ்' நடிகை தனது முன்னேற்றத்துக்கு தந்தை தடையாக இருப்பதை விரும்பவில்லை.

திடீரென ஒரு நாள் 'தாஜ்' நடிகையின் தந்தையைக் காணவில்லை என்று பிரபல சினி இதழ் செய்தி வெளியிட்டது. இது இப்படியிருக்க, இப்போது தண்ணீரின் விஞ்ஞானப் பெயர் கொண்ட படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ப்ரியமான நடிகையும் இதே போன்ற ஒரு நிலைக்கு முகம் கொடுத்துள்ளார்.

ஆரம்பப் படத்திலேயே பல அட்டகாசமான போஸ்களைக் கொடுத்து போட்டோ கிராபர்களை அசத்தியவர்.

தண்ணீர்ப் பிரச்சினையை மையமாகக் கொண்ட இந்தப் படத்தில் தான் பிரபுதேவாவின் அறிமுகம் அம்மணிக்குக் கிடைத்தது.

இதன் பலனாக 'மனதைத் திருடி விட்டாய்' படத்தில் ப்ரியமான நடிகையைத்தான் முதலில் ஒப்பந்தம் செய்தார்கள்.

படத் தொடக்க விழா விற்கும் வந்திருந்தார் ப்ரியமான 'வேதி' நடிகை. ஆனால் படத் தொடக்க விழாவில் அம்மணி கையில் இருந்த செல்போன் கொடுத்த தகவலினால் மும்பாய்க்கு பறந்து விட்டார் நடிகை. இதன் காரணமாக 'மனதைத் திருடி விட்டாய்' படத்தில் அம்மணிக்குப்பதிலாக காயத்ரி நடிக்கிறார். ப்ரியமான நடிகையின் மும்பைப் பயணத்திற்குக் காரணம் அம்மணியின் தந்தை தானாம். மகள் நடிப்பது அவருக்குப் பிடிக்கவில் லையாம். சொல்லிப்பார்த்தவர் முடியாத கட் டத்தில் விஷத்தைக் குடித்தது மல்லாமல் தனது மகள் நடிப்பது பிடிக்காத தனால் விஷத்தைக் குடித்து விட்டதாக வாக்கு மூலம் வேறு கொடுத் திருக்கிறார்.

## மறுபக்கம்



மும்தாஜ்

# அக்ஷனுக்கு விடை கொடுத்து காதல் செண்டிமெண்ட்டுடன் தவசி



வயதான கெட்டப்பில் விஜயகாந்த்

கர்ஜிக்கும் சிங்கமாக 'நரசிம்மா'வை முடித்த கையோடு 'தவசி'க்குப் பூஜை போட்டு விட்டார் விஜயகாந்த்.

"The South Indian Lion" என்ற வாசகத்தோடு தொடங்கப்பட்ட படம் இது.

முதற்கட்டப்படப்பிடிப்பை சென்னையிலும் தொடர்ந்து பொள்ளாச்சியிலும் பின்னர் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் படமாக்க எண்ணியுள்ளனர்.

விஜயகாந்த் இரட்டை வேடங்களில் நடிக்கும் படங்கள் வெற்றி பெறுகிறது என்பதனாலோ என்னவோ 'தவசி'யிலும் இரட்டை வேடமேற்கிறார் விஜயகாந்த்.

அதுமட்டுமல்ல சமீபகாலமாக அக்ஷனிற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தவர் அடிதடி வழி



தன் சொந்தப் படத்தில் பிஸியாகியிருந்த சௌந்தர்யா 'தவசி' படத்தின் கதையைக் கேட்டு தன் சொந்தப் படத்தைத் தள்ளிப் போட்டு விட்டு 'தவசி'யில் நடிக்க வந்திருக்கிறாராம்.

**

அண்ணாமலையாரின் அருமை பெருமைகளை விளக்கும் வகையில் 'வேலாயுதம்' என்ற பெயரில் பக்திப் படத்தை இசை ஞானி இளையராஜாவின் ஒத்துழைப்புடன் உருவாக்க முயற்சிகள் நடக்கின்றன. இதில் ரஜினிகாந்தை ஒரே ஒரு காட்சியிலாவது நடிக்க வைக்க எண்ணியுள்ளனர்.

**





'தவசி' முன்னோட்டம்



விஜயகாந்த், சௌந்தர்யா

அக்ஷனிலிருந்து விலகி பெண்கள் சென்டிமென்ட், நகைச்சுவை, காதல் என்பனவற்றைத் துணையாகக் கொண்டு 'தவசி'யில் களமிறங்குகிறார்.

கதாநாயகியாக 'படையப்பா'வின் நாயகி சௌந்தர்யாவையும் முன்னணி நடிகை ஜெயசுதாவையும் தெலுங்கிலிருந்து அழைத்து வருகிறார்.

வயதான விஜயகாந்திற்கு ஜோடியாக ஜெயசுதா நடிக்கிறார். 'சின்னக் கவுண்டர்' படத்தின் கெட்டப் போன்று வயதான விஜயகாந்தின் கெட்டப் அமைந்திருக்கிறது.

அப்பாவை மதித்து நடக்கும் நல்ல மகன் விஜயகாந்துக்கு அப்பா சொன்ன தீர்ப்பினால் ஏற்படும் பிரச்சினைகளே மீதிக்கதை.

படத்தில் மொத்தம் ஆறு பாடல்கள். இசை சேர்ப்பவர் வித்யாசாகர், கதை—சின்னி ஒளிப்பதிவு – எஸ்.கே.பூபதி, இயக்குபவர் உதயசங்கர். —ஷாம்

## வரவிருக்கும் வசந்தங்கள்

'நைனா' தெனாலிக்குப் பின்னர் ரொம்பப் படிச்சவங்க படத்தில் பாக்கிய ராஜுடன் நடித்து வருகிறார் ஜெய்ராம். இப்போது அவர் நடிக்கும் புதிய படம் 'நைனா'. இதில் தந்தை—மகனாக இரட்டை வேடமேற்கிறார். தந்தை ஜெயராமுக்கு ஜோடியாக பானுப்பிரியாவும் மகன் ஜெயராமுக்கு ஜோடியாக மும்பாய் அழகியும் நடிக்கப் போகிறார்கள்.

இவர்களுடன் வடிவேலு ரமேஷ் கண்ணா, கோவைசரளா, சார்லி, வையாபுரி, ராஜன் பீ.தேவ், டெல்லி கணேஷ், தியாகு, பாண்டு, மதன் பாப் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

'பச்சை நிறமே'— ஏசியன் ஸ்லிங்க்ஸ் புரொடக்ஷன்ஸ் என்ற புதிய நிறுவனம் சார்பில் ஏ.இதிரிஸ் தயாரிக்கும் படம் இது. கதாநாயகனாக புதுமுகம் சுகன் அறிமுகமாகின்றார். ஜோடியாக திவ்யஸ்ரீ, ரேஷ்மா நடிக்கிறார்கள். தயாரிப்பு நிர்வாகம் – அயன்புரம் ராஜு, இணை இயக்குநர் – எக்ஸ் – பிரகாஷ்.

## 'ஷாக்லெட்' அம்மா



சுஹாசினி

பிரசாந்த்—ஜெயாரே இணையும் 'ஷாக்லெட்' படத்தில் பிரசாந்துக்கு அம்மாவாக நடிப்பதற்கு பொருத்தமானவர் சுஹாசினிதான் என்று டைரக்டர் கருதியிருக்கிறார்.

சுஹாசினியை அணுகி விஷயத்தைச் சொன்னபோது அம்மா வேடம் என்றதும் பதறிப் போய் மறுத்து விட்டாராம்.

சரி நீங்கள் நடிக்க வேண்டாம் கதையை மட்டும் கேளுங்கள் என்று சொல்லி முழுக்கதையையும் சொன்னார்களாம்.

கதையைக் கேட்டு முடித்த பின்னர் சுஹாசினி தானே அந்தக் கரெக்டரில் நடிக்கிறேன் என்று அடம்பிடித்தாராம்.

## சுஷ்மிதா வழியில் சோனாலி பெந்ரே

காதலிக்கிறோம் ஆனால் திருமணம் செய்து கொள்ள மாட்டோம் என்ற அதிரடி அறிவிப்புடன் தனது காதலரை அறிமுகப்படுத்தியவர் சுஷ்மிதா சென்.

இப்போது இவர் வழியைப் பின்பற்றி நடைபோட ஆரம்பித்திருக்கிறார் சோனாலி பெந்ரே. இந்தி நடிகையாக இருந்தாலும் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமானவர்தான். இவர் நடித்த 'காதலர் தினம்' படத்தை தமிழ் ரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறந்திருக்க மாட்டார்கள்.



சோனாலி பெந்ரே

மும்பைத் திரையுலகின் நெட்டைக் கால் அழகி என்று வர்ணிக்கப்படும் சோனாலியும் இப்போது காதல் வலையில் விழுந்துள்ளார்.

காதலர் பெயர் கோல்டி பெஹ்ல். எங்கு சென்றாலும் இருவரும் சேர்ந்தே செல்கின்றனர். இதைக்கண்ட பத்திரிகைகள் சோனாலி காதல், விரைவில் திருமணம் என்று பெரிதாக விளம்பரப்படுத்தி விட்டன.



சுஷ்மிதா சென்

பத்திரிகைச் செய்தியைப்பார்த்து விட்டு பலரும் சோனாலியைக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுத் துளைத்து விட்டனராம்.

"நான்கோல்டியை நேசிக்கிறேன் அவரும் என்னை விரும்புகின்றார். ஆனால் திருமணம் நடக்கப் போகிறது என்று பத்திரிகைகள் கூறுவது பொய். திருமணம் செய்து கொள்வோமா? என்பதைப்பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது என்று கூறியிருக்கிறார் சோனாலி.

## ரம்பா விருந்து வெப் தளம்

புதுமையான வழியில் இணையத்தில் வெப்தளங்களை உருவாக்கும் முயற்சியில் 'காஸ்மிக் கம்யூனிக்கேஷன்ஸ்' ஈடுபட்டு வருகிறது.

இப்போது நடிகை ரம்பாவிற்கென புதிய வெப்தளம் ஒன்றை உருவாக்கி உள்ளார்கள். www.rambhaplanet.com என்ற முகவரியில் ரம்பா வைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

இதில் ரம்பா நடித்த படங்கள், ஜோடி சேர்ந்த ஹீரோக்களுடன் ஏற்பட்ட சுவையான சம்பவங்கள், அவரது தனிப்பட்ட ஆசைகள், லட்சியம் போன்ற ஆரம்பம் முதல் லேட்டஸ்ட் வரையான தகவல்களை அறிந்து கொள்ளலாம். இதில் ரம்பாவின் கலக்கலான படங்களும் உண்டு.



ரம்பா



# அதிஷ்டத்தைத் திருடி...

மிகுந்த உற்சாகத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் வின்ஸ்டன். இருபத்தெட்டு வயதான அந்த இளைஞன், குழந்தையைப் போல் துள்ளிக்குதித்தவாறு வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்ததற்குக் காரணம் -- அவனுக்குக் கிடைத்த அதிஷ்டப் பரிசு.

அவ்வார அதிஷ்டலாபச் சீட்டிழுப்பின் போது அவனுக்கு எண்பது லட்சம் டொலர்கள் கிடைத்திருந்தன. தற்செயலாக அவன் வாங்கிய பரிசுக்குலுக்கல் சீட்டொன்று பெரும் செல்வச் சீமானாக அவனை ஆக்கிவிட்டிருந்தது.

அமெரிக்காவின் அமைதியான பகுதியைச் சேர்ந்தவன் இந்த வின்ஸ்டன் ரெட். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த அவனைப் பாட்டிதான் வளர்த்து ஆளாக்கினாள். சமீபத்தில் பாட்டியும் காலமாகிவிடத் தனியாகவே வசித்து வருகிறான் அவன்.

பல்கலைக்கழகத்தில் குற்றவியல் பட்டப்படிப்பின் இறுதியாண்டுப் பரீட்சையை எழுதிவிட்டு வரும் வழியிலேயே அந்த அதிர்ஷ்டச் சீட்டை வாங்கியிருந்தான் வின்ஸ்டன்.

''எண்பது லட்சம் டொலர்கள்!...ஆஹா!'' நினைத்துப் பார்க்கவே வானத்தில் மிதப்பது போலிருந்தது அவனுக்கு.

பரிசுக் காசோலையை கையளித்த வைபவத்தின் போது நிருபர்கள் அவனிடம் கேட்ட கேள்வி, ''பரிசுப் பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்பதுதான்.

''இந்தப் பணத்தைக் கொண்டு உலகைச் சுற்றிப் பயணம் ஒன்றை மேற்கொள்வதே எனது முதல் எண்ணம்'' என்று பதிலளித்தான் வின்ஸ்டன். அவ்வாறு அவன் பதிலளித்தபோது 'எனது நீண்ட நாள் கனவொன்று ஈடேறப் போகிறது' என்ற எண்ணத்தின் பெருமிதப் பிரதிபலிப்பு அவன் முகத்தில் நன்கு தெரிந்தது.

''இன்று ஞாயிறு விடுமுறையாதலால் காசோலையை வங்கியில் வைப்பிலிட முடியவில்லை. நாளை காலையில் முதல்வேலையாக இதை முடித்துவிட வேண்டும். போக்கிரிகளுக்குத் தெரிந்தால் என்பணத்துக்கு ஆபத்து வந்துவிடும்'' என்று சிந்தித்தவாறே கதவைத்திறந்து தனது சிறிய வீட்டினுள் நுழைந்தான் வின்ஸ்டன்.

வீட்டின் விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டிருந்தன. அவன் சந்தேகத்துடன் சுற்றுமுற்றும் இருளினுள்ளே துழாவினான்.

''போகும்போது விளக்குகள் எரிந்து கொண்டிருந்தனவே! மின்வெட்டும் இல்லை. அப்படியானால் விளக்குகள் அணைந்தது எப்படி?'' கேள்விகள் மூளையைக்குடைய சுவிட்சைத் தேடிப்பிடித்து விளக்குகளைப் போட்டான்.

'பளீர்' என வெளிச்சம் பரவியது. அங்குகண்ட காட்சி வின்ஸ்டனின் இதயத்துடிப்பை ஒருகணம் நிற்கச் செய்தது. அங்கிருந்த சோபாக்களில் மூன்று முரடர்கள் அமர்ந்திருந்தார்கள். மூவர்கையிலும் பிஸ்டல்கள்.

திக்பிரமை பிடித்து நின்றிருந்து வின்ஸ்டனை நோக்கி ஒரு முரடன் வந்தான் .

''நாங்கள் யாரென்று தெரியுமா? உனக்கு?''

''தெ..தெ..தெரியாது ....'' தட்டு தடுமாறி வந்தது வின்ஸ்டனின் பதில்.

''எங்கள் கைகளில் இருப்பது என்னவென்றாவது தெரியுமா?'' இன்னொரு முரடன் கேட்டான் .

''பி... பிஸ்டல் .....''

''இதிலிருக்கும் குண்டுகள் உன் உடலில் பாயாமலிருக்கவேண்டும் என்றால், நாம் சொல்கிறபடி நீ கேட்க வேண்டும். மறுத்தாயோ உன் உயிர் பறந்துவிடும் !'' மூன்றாவது முரடனும் மிரட்டினான் .

''ச......ரி ....நீங்கள் சொல்கிறபடியே நடக்கிறேன்..என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள்......?'' இப்போது பயம் ஒரளவு தணிந்திருந்தாலும் ,பயத்தால் நடுநடுங்கு வது போலவே தொடர்ந்தும் பாவனை செய்தான் வின்ஸ்டன். 'வெறியோடு இருக்கும் முரடர்களின் முன் முரண்டு பிடிப்பது ஆபத்தானது' என்பது அவன் பட்டப் படிப்பில் கற்றுக் கொண்ட பாடங்களில் ஒன்று.

''எமக்கு உனது பணந்தான் வேண்டும். பணத்தை மரியாதையாகக் கொடுத்துவிட்டாயானால் உன்னை ஒன்றும் செய்யமாட்டோம்! ''

அதிஷ்ட லாபச்சீட்டின் மூலம் பணம் கிடைத்தது வெளியில் தெரிந்தால் தனக்குக் கயவர்களால் ஆபத்து நேரக் கூடும் என்பதை எதிர்பார்த்தே இருந்தான் வின்ஸ்டன். ஆனால் இவ்வளவு விரைவாக அது வந்து சேரும் என்று நினைத்துப் பார்க்கவேயில்லை.

''பணம் இன்னும் என் கைக்கு வரவில்லை ..... வங்கியில் தான் இருக்கிறது.''

''அது தெரியும் தம்பி. உன்னிடம் இருக்கும் காசோலையை நாமே மாற்றிக் கொள்கிறோம். அதில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாயானால் போதும் !''



வின்ஸ்டன் அதிர்ந்து போனான்.

''சகல விவரங்களையும் அறிந்து வைத்திருக்கிறார்கள்.இவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டு மானால் சாமர்த்தியமாகச் செயல்பட்டால்தான் முடியும் பணம் கிடைத்ததும் என்னைத் தீர்த்துக்கட்டவும் தயங்க மாட்டார்கள் '' என்று எண்ணமிட்டது அவன் மனம்.

அவனது சிந்தனையைக் கலைத்தான் ஒரு முரடன். ''கையெழுத்து மட்டும் போதாது அப்பனே, உன் கைப்பட ஒரு கடிதமும் எழுதித் தர வேண்டும். கொடுத்த தொகையைத் தர வங்கி காசாளர்கள் தயங்குவார்கள். எனவே எமது பெயருக்கு காசோலையை மாற்றிக் கொடுத்ததாக எழுதிய கடிதம் ஒன்றும் வேண்டும்! ''

''ஓ.கே ! நீங்கள் எது கேட்டாலும் செய்கிறேன்.என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள்.

வின்ஸ்டனின் கெஞ்சல் அவர்களுக்குச் சிரிப்பை வரவழைத்தது. இருபத்தெட்டு வயது ஆஜானுபாகுவான இளைஞன் ஒருவன் தம்மிடம் உயிர்ப்பிச்சை கேட்பதைக் கண்டு எக்காளமிட்டார்கள் அந்த முரடர்கள்.

''ஹே ........தம்பி! பயப்படாதே. சமர்த்தாக நடந்து கொண்டாயானால் நாங்களும் பொறுமையாகவே இருப்போம்.இப்போது நாங்கள் கேட்டபடி கடிதத்தையும் காசோலையையும் கொடு!''

தன்னுடைய மேசையை நோக்கிப் போனான் வின்ஸ்டன். பத்திரமாகக் காற்சட்டைப் பையில் வைத்திருந்த 'செக் 'கை எடுத்துக் கையொப்பம் இட்டான்.

அவனது மூளை துரிதமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. அந்த மூன்று முரடர்களைப் பற்றிய விவரங்களைத் தான் எங்கேயோ படித்திருந்தது அவன் ஞாபகத்துக்கு வந்தது.

''யெஸ்! அவர்கள்தான். ரெயில் கொள்ளையின் போது பொலிஸாரிடம் பிடிபட்டுச் சிறையிலிருந்த பீட்டர், கெல்லி. ஹார்ட்டர் என்ற மூன்று தடியர்களும்தான் இவர்கள். வட பகுதியில் அட்டகாசம் செய்து கொண்டிருந்த இவர்கள் எப்போது இங்கு வந்து சேர்ந்தார்கள்? சிறையிலிருந்து எப்போது தப்பித்தார்கள்?'' வின்ஸ்டன் அவர்களை அடையாளம் கண்டு கொண்டான்.

குற்றவியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பல்கலைக் கழகத்தில் பயின்ற அவனால் இவர்களை இலகுவாக இனங்காண முடிந்தது.

அவனது மேசை முழுவதும் விதவிதமான பொருட்கள் நிறைந்து கிடந்தன. துப்பறியும் நிபுணர்கள் பயன்படுத்தும் பல்வேறு உபகரணங்கள் அவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தினுசாக இருந்தன.

கொள்ளையர்கள் மூவரும் தாம் கொண்டுவந்திருந்த மதுபாட்டில்களைக் காலி செய்ய ஆரம்பித்தார்கள். வின்ஸ்டனோ 'இந்தக் கயவர்களிடமிருந்து எப்படித் தப்பிக் கொள்ளலாம்?' என்ற சிந்தனையில் மூழ்கிப்போயிருந்தான்.

* * *

பொழுது புலர்ந்து மூன்று மணிநேரமாகயிருந்தது. நகரம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

வின்ஸ்டன் வீட்டுக் கதவு ஒன்று மெல்லத் திறந்தது. ஒருவன் வெளியேறி வந்து பிரதான வீதியை நோக்கிப் போனான். அவனது நோக்கம் நகரின் மத்திய பகுதியிலிருந்த வங்கியை அடைவது.

* * *

''நீங்கள் கேட்டபடியே நடந்து கொண்டேன். என்னை இனி விட்டுவிடுங்கள்.''

வின்ஸ்டனை முறைத்துப் பார்த்தான் பீட்டர். ''இரு! பணத்தை எடுத்துக் கொண்டு கெல்லி வந்து சேரட்டும். அதன்பின் பார்க்கலாம்..''

''கெல்லியா? பாங்குக்குப் போயிருப்பவனின் பெயர் கெல்லியா? அப்படியானால் உங்கள் இருவரதும் பெயர்கள் என்ன?'' தெரியாதவன் போல் கேட்டான் வின்ஸ்டன்.

''சாகப் போகிறவன் தானே? எங்களுடைய பெயரையும் தெரிந்துகொள். நான் பீட்டர் இவன் ஹார்ட்டர்'' என்றான் பீட்டர்.

வின்ஸ்டனின் முகத்தில் கிலிதெரிந்தது. ''சாகப்போகிறவனா? என்னை விட்டுவிடுவதாக அல்லவா கூறினீர்கள்?''

விஷமப்புன்னகை செய்தான் ஹார்ட்டர். பழைய தகரடப்பாக்களை உருட்டுவது போல் வந்தது அவன்குரல்,

''உன்னை உயிரோடு விட்டால் எங்களைக் காட்டிக் கொடுத்து விடுவாயே பையா! நீ பரிசை வாங்கிய போது உலகைச் சுற்றிவரப் போகிறேன் என்று தானே கூறினாய்? இப்போது இந்த உலகை விட்டு சொர்க்கத்தைச் சுற்றிப் பார்க்கப் போகிறாய் நீ''

''நீ காணாமல் போனாலும் மற்றவர்கள் உன்னைத் தேடமாட்டார்கள். உலகைச் சுற்றிவரப் புறப்பட்டுவிட்டாய் என்றே நினைப்பார்கள். நீ கொல்லப்பட்டு விட்டாய் என்று யாருமே நினைத்துப் பார்க்கமாட்டார்கள் அப்பனே!''

இடி இடியென்று சிரித்தனர் இருவரும். வின்ஸ்டனின் உடல் பதறத் தொடங்கியிருந்தது.

* * *

பணத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் கெல்லி. ஆவணங்களும் கையொப்பமும் சரியாக இருந்ததால் யாருமே சந்தேகிக்கவில்லை அவனை. வின்ஸ்டனின் வீடு நோக்கி விரைந்தான் அவன்.

* * *

வின்ஸ்டன் கொடுத்திருந்த அத்தாட்சிப்பத்திரம் வங்கி முகாமையாளரது மேசையில் கிடந்தது. அவர் இன்ஸ்பெக்டர் டோரான்ட்டுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

தற்செயலாக அந்தக் கடிதத்தின் மீது இன்ஸ்பெக்டரின் பார்வை படிந்தது. அதன் வலதுபக்க மூலையில் இடப்பட்டிருந்த சிறிய குறியீடு அவரைக் கவர்ந்தது. அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்தார் அவர்.

''சந்தேகமில்லை. இது ஒரு சங்கேதக் குறியீடுதான். இந்தக் கடித்தில் ஏதோ ரகசியம் மறைந்திருக்கிறது. அந்த மேசை விளக்கை இப்படித்தாருங்கள்.''

இன்ஸ்பெக்டரின் துரித நடவடிக்கை முகாமையாளரைத் திகைப்படையச் செய்தது.

''ஏன்... என்னவாயிற்று... இன்ஸ்பெக்டர்?''

இன்ஸ்பெக்டர் மௌனமாக–துரிதமாகச் செயற்பட்டார். விளக்கு வெளிச்சத்தில் அந்தக்கடிதத்தை வெவ்வேறு கோணங்களில் வைத்து ஆராய்ந்தார். ஆனால் எதுவும் பிடிபடவில்லை.

சலித்துக்கொண்டு விளக்கை அணைக்கப் போனவரது கண்கள் ஆச்சரியத்தால் மின்னின.

''இதோ பாருங்கள் மிஸ்டர் ஹமில்டன். விளக்கின் சூடுபட்டதும் சில எழுத்துக்கள் தெரிய ஆரம்பிக்கின்றன.''

'நான் ஆபத்திலிருக்கிறேன். பீட்டர், ஹார்ட்டர், கெல்லி மூவரிடமும் சிக்கியுள்ளேன். பணம் எடுக்க வருபவன் கெல்லி. பெரிய மோசடி நடக்கிறது. உடனே பொலிஸாருக்கு அறிவியுங்கள் – வின்ஸ்டன் ரெட்'

என்ற எழுத்துக்கள் மெல்லிய பழுப்பு நிறத்தில் தென்பட்டன.

* * *

''தட் ...தட் ....''

கதவு தட்டப்படும் ஓசை கேட்டு எழுந்து வந்து கதவைத் திறந்தான் ஹார்ட்டர். அவனது முகத்துக்கு நேரே துப்பாக்கியை நீட்டியபடி நின்றிருந்தார் இன்ஸ்பெக்டர் டோரான்ட்.

மூன்று முரடர்களும் கைது செய்யப்பட்டனர். வின்ஸ்டன் பத்திரமாக விடுவிக்கப்பட்டான்.

கண்ணுக்குத் தெரியாத அமிலத்தைக் கொண்டு தாளில் அந்த வார்த்தைகளை எழுதியிருந்தான் வின்ஸ்டன். தாள் சூடாக்கப்பட்டதும் இரசாயன மாற்றங்கள் நிகழ்ந்து அவை நிறம் மாறி வெளித் தெரிந்தன. அவன் கடிதத்தின் மூலையில் கிறுக்கியிருந்தது ஒரு சங்கேதக் குறியீடு. காவல் துறையினர் தகவல்களைப் பரிமாறப் பயன்படுத்தும் இரகசியக் குறியீடுகளில் ஒன்றுஅது.

அந்தக் குறியீட்டைக் கண்ட இன்ஸ்பெக்டர், ஏதோ ரகசியம் அக்கடிதத்தில் இருப்பதை உணர்ந்து கொண்டார்.

''சமர்த்தாகக் காரியம் பண்ணினாய் வின்ஸ்டன். படித்ததைத் தக்கபடி பயன்படுத்தியுமிருக்கிறாய். ஆனால், அந்தக் குறியீட்டை நான்மட்டும் பார்த்திராவிட்டால், இப்போது 'பயணம்' போயிருப்பாய்நீ'' என்று கண்ணைச் சிமிட்டினார் இன்ஸ்பெக்டர் டோரான்ட்.

## வாசகர் இதயம் பேசுகிறது

வர வர ''சுடர் ஒளி'' மிக மிக சிறப்பாக வெளிவருவது கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். வாசகப் பெருமக்களுடன் சேர்ந்து நானும் மேலும் மேலும் சிறப்புப் பெற வாழ்த்துகிறேன். வாழ்த்துவதோடு வேண்டுதலுமொன்று குறுக்கெழுத்துப் போட்டியொன்றையும் நடத்துவீர்களா?

அ.அரசரெத்தினம்,சேனையூர்—06.

சுமைகள் பல தமிழர்களைவதைக்க சுதந்திரம் இன்றித் தவிக்கும் தமிழர்களுக்காக சுந்தரக் கனவுகளுடன் தோன்றிய சுடர் ஒளியே, தமிழர்களின் விடியலுக்காக வன்முறையை ஒழித்து சுபிட்சமான வாழ்வதனை உருவாக்கு வாயாக. சுட்டெரிக்கும் சூரியனாய்ப் புறப்பட்டு மென்மேலும் தமிழ்ப்பணி புரிய வாழ்த்துகின்றேன்— இந்தத் தமிழ்ப் பித்தன்.

கா.சுபாஷ்,டிக்கோயா.

''சுடர் ஒளி'' விற்பனையில் பரபரப்பை ஏற் படுத்தி உள்ளது. வாசகர் மத்தியில் எழுத்து பெரும் வரவேற்பைப் பெற்றுள் ளது. திரை மறைவில் நடக்கும் தில்லு முல்லுகளைத் தேடிப் பிடித்துத் தருவதில் முன்னணியில் நிற்கிறாய். அரசியல் கட்டுரைகள் அனைத்துமே அதிரடியான படைப்புகள். தராசு போல் சமன் செய்து நீதிசொல்லும் ''சுடர் ஒளி '' தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வாய்த்த பெருநிதி என வாயாரப் புகழ்ந்து வாழ்த்துகின்றேன்.

கவிக்குயிலன்,சேனையூர்.

தேரடி அரட்டையில் உண்மைத்தத்துவங்களை எடுத்துரைக்கும் ஏகலைவனுக்கு நன்றிகள்..

ரா. சேகர்,கம்பளை.

அன்பின் சுடர் ஒளியே நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் என்னைக் கவர்ந்துள்ளன. அவற்றில் மலையகப் பக்கத்தில் எங்களுக்கே தெரியாத, எவ்வளவோ விஷயங்கள் உள்ளன. உன் சேவை தொடர என் வாழ்த்துகள்.

சித்திகன், கந்தப்பளை.

சுடர் ஒளி தனது வளர்ச்சிப் பாதையில் இன்னொரு படிக்கல்லை அடையப் போவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். பாராட்டுகிறேன்.

ஏ.ஏ.எம்.பாயிஸ், பலாங்கொடை.

வாரம் ஒரு முறை மலர்ந்தாலும் கனமான செய்திகளைத் தந்து மகிழ்ச்சியில் ஆழ்த்தும் வண்ணச் ''சுடர் ஒளியே '' தினம் தினம் நீ மலரப் போவது எப்போது?

உஷாராணி,யாழ்ப்பாணம்.

உண்மையான செய்திகளை ஒளிவு மறைவின்றி துணிகரமாகத் தாங்கிவரும் சுடர் ஒளியே ! உனது அடுத்த இதழ் எப்போது வரும் என்று ஏங்கித் தவிக்கும் வாசகர்கள் நாங்கள்.

இர்பானா, ரஹீம், காதர், முறக்கொட்டாஞ்சேனை.




பத்திரிகை உலகில் ஒளி வீசும் தாரகையே! உனது படைப்புகள் அனைத்தும் சூப்பர். குறிப்பாக உண்மைகளை உரித்துக் காட்டும் காண்டீபம் என்ற பகுதி எனக்குப்பிடித்தது. வாரா வாரம் காண்டீபத்தை வாசிக்காவிட்டால் எனக்குத் தூக்கமே வருவதில்லை.

ராஜா, திருகோணமலை.


அரசியற் செய்திகளுடன் பல்சுவை அம்சங்களையும் அட்டகாசமாகத் தாங்கி வரும் சுடர் ஒளியே! உனது பணி என்றென்றும் தொடர வாழ்த்தும் இவன்.

மொகமட் இர்பான், கண்டி.

வாகனங்கள் அதிகரித்ததால் வீதிகளில் ஒரே நெருக்கடிதான். மாஸ்கோ நகர வீதியில் அண்மையில் நிகழ்ந்த ருசிகரமான சம்பவம் இது. ஒரு வாத்து தனது குஞ்சுகளுடன் குளத்திலிருந்து கரையேறிக் காலாற உலாவியது. திக்குத் திசை தெரியாமல் பிரதான வீதியில் இறங்கிவிட்ட வாத்துக் குடும்பம் வாகனங்களால் அரைபட்டு அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டது.

ஒரு வாகனத்தில் வந்த கருணையுள்ளம் கொண்ட ஒரு தொழிலாளி இறங்கி வந்து நடு வீதிக்குச் சென்று வாகனங்களை நிறுத்தி அந்த வாத்துக் குடும்பம் ஆபத்து இன்றி ஊர்வலமாகச் செல்ல உதவினார்.

## மாஸ்கோ நகர வீதியில் வாகனத்தடை ஊர்வலமா?





## கன்னி வயதாகும் வரை காவல் தெய்வம் இவள்

நேபாள மக்கள் தமக்கென ஒரு காவல் தெய்வத்தை உருவாக்கும் தன்மை கொண்டவர்கள். தங்களுடன் வாழும் ஒரு பெண் குழந்தையைக் காவல் தெய்வமாக அவர்கள் நியமித்துக் கொள்கிறார்கள். அந்தத் தெய்வத்துக்கு பூஜையும் செய்வார்கள். கன்னி வயதாகும் வரைதான் இவள் காவல் தெய்வம். பெரியவளாகி விட்டால் வேறு தெய்வம் வந்து விடும். நான்கு வயதான இந்தப் பெண் குழந்தையே தற்போது நேபாள மக்களின் காவல் தெய்வம். அலங்கார பூஜிதையாக பக்தர்களைக் கவர்ந்திழுக்கும் காவல் தெய்வம்.

தமிழ் நாட்டில் விநாயகர் சதுர்த்தி விழாவின் போது பிள்ளையார் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். பின்னர் விநாயகர் சிலைகளை கடலில் கரைப்பார்கள். இந்த விநாயகர் ராஜபவனியின் போது மோதல்கள் ஏற்படுவதால் இம்முறை விநாயகர் பவனிக்குத் தடை



## டைனோசர் வாகனத்தில் விநாயகர் ராஜபவனி

விதிக்கப்பட்டது. ஆயினும் விநாயகர் சிலைகள் வீதிக்கு வரத்தவறவில்லை. மூசிகவாகனன் பிள்ளையாரை வேறொரு வாகனத்தில் கொண்டு வந்து சிலர் அசத்திவிட்டார்கள். அவர்கள் பிள்ளையாருக்கெனத் தேர்ந்தெடுத்த வாகனம் புராதன ராட்சத விலங்கான டைனோசர் ஆகும். டைனோசர் வாகனத்தில் விநாயகர் ராஜபவனி வரும் காட்சி இது.

## மசாலா மிக்ஸ்

முருகன் தேரேறி வரும் வேளையில் பக்தர்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துவார்கள். காவடி எடுக்கும் பக்தர்கள் அலகு குத்திக்கொண்டு அருள் மழையில் நனைவார்கள். பறவைக்காவடி எடுத்து அந்தரத்தில் நிற்கும் பக்தர்களும் இருக்கிறார்கள். பால சந்நியாசிகள் சிலரும் அலகு குத்திக் கொண்டு ஏனைய பக்தர்களுடன் காவடி தூக்குவதற்காகக் காத்திருக்கும் காட்சி இது.



## பால சந்நியாசிகள் அலகு குத்திக் காவடி

## ஒளிந்திருக்கும் முகம் எது?

ஓகஸ்ட் 19, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் எஸ்.வி. சேகருடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப் பிய வாசகர் களில் மூன்று அதிஷ்ட சாலிகளின் பெயர் விவரம் வருமாறு.



1. ஆர். விஸ்வ நாதன், தலவாக்கலை.
2. எம்.எம். உனவஸ், மன்னார்.
3. ரீ. பிரியதர்சினி, வவுனியா.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (26.08.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? வில்லனாக அறிமுகமாகிப் பிரகாஷமான இடத்தைப் பெற்றவர். பெண் வேடத்தில் வந்து கலக்கியவர்.



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டு பிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.

## தாய்லாந்து மன்னரின் மாட்டுப் பொங்கல் விழா

தமிழர்கள் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தைப்பொங்கல் விழா கொண்டாடுகிறார்கள். அடுத்தநாள் மாட்டுப் பொங்கல் விழா ஆகும். தாய்லாந்து நாட்டிலும் விவசாயமே முக்கிய தொழிலாக இருக்கிறது. தாய்லாந்து மன்னர் தமது நாட்டு விவசாயிகளைச் சிறப்பான முறையில் கௌரவிக்கும் தன்மை கொண்டவர். நிலம் உழுது நெல் விதைக்கும் விழாவின் ஆரம்ப தினம் காளைகள் பூட்டிய ஏருடன் அரண்மனைக் காவலர்கள் அணிவகுத்துச் செல்லும் காட்சி இது. மாட்டுப் பொங்கல் விழாவை ஞாபகப்படுத்தவில்லையா இந்தப் படம்?



# வீரியக் குறையை சீராக்கலாம் வீண் கவலையை விட்டுவிடுங்கள்

பல ஆண்கள் தமக்கு இருக்கும் பிரச்சினைகள் குறித்து ஒரே விதமான கேள்விகளைக் கேட்டு எழுதியிருக்கிறார்கள். எல்லா வினாக்களையும் பிரசுரிக்க முடியவில்லை. எனவே உதாரணத்திற்கு இங்கு மூன்று கேள்விகளைப் பிரசுரித்து அவற்றுக்கு ஒரேயடியாக பதில் அளித்திருக்கிறேன். பிரசுரிக்கப்படாத கடிதங்களுக்கும் இதிலே பதில் இருக்கிறது.

கே : எனது வயது 33. இருபது வயது தொடக்கம் முப்பது வயதுவரை எனக்கு சுய இன்ப பழக்கம் இருந்தது. இப்பொழுது, அதில் எனக்கு ஈடுபாடு இல்லை. இந்த வருடம் எனக்கு திருமணம் செய்துதர எனது பெற்றோர்கள் முடிவு செய்துள்ளார்கள். எனக்கோ முதலில் இருந்ததை விட இப்போது வீரியத்தன்மை குறைவாக உள்ளது. நான் பல மனோதத்துவ டாக்டர்களிடம் சொல்லி மருந்து எடுத்துச் சாப்பிட்டு வருகிறேன். பலன் கிடைப்பதுபோல் எனக்குத் தெரியவில்லை. இந்தக் குறையை நீக்க நான் என்ன செய்ய வேண்டும். இது நரம்புத்தளர்ச்சியா அல்லது தாழ்வு மனப்பான்மையா? எனது இந்த இக்கட்டான நிலைக்கு உடன் பதில் தருவீர்களா? எனது உடல் வளம் நலமாக உள்ளது. மெலிவுத்தன்மை ஏதும் இல்லை.

கே : எனக்கு 45 வயது முடிந்து விட்டது. திருமணம் முடிந்து 15 வருடங்கள் கழிந்து விட்டன. மனைவி உட்பட 6 பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உடல் ஆரோக்கியமாக உள்ளது. புகை பிடிப்பதைத் தவிர வேறு எந்தவிதமான தீய பழக்கங்களும் இல்லை. ஆனால் கடந்த 5 மாதங்களாக நான் உறவு கொள்ளும் போது எனது ஆணுறுப்பு செயலிழந்து போய்விடுகிறது. இதனால் எனக்கும் மனைவிக்கும் பெரிய ஏமாற்றம் ஏற்படுகிறது. இதனால் எனக்கு தாழ்வு மனப்பான்மையும் மன அழுத்தமும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. இப்பொழுது நான் ஒரு ஜடமாக வாழ்வதாக உணர்கிறேன். எனது இந்த நிலைக்கு நல்லதோர் பரிகாரம் கூறுவீர்கள் என நம்பி சுடரொளியை எதிர் பார்த்தவண்ணம் இருக்கிறேன்.

கே : எனது வயது 41. ஆறு மாதங்களுக்கு முன்பு தான் திருமண வாழ்வில் இணைந்தேன். சில குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக எனது திருமணமும் தாமதப்பட்டுப் போனது. எனது குருதி அமுக்கம் சற்று அதிகமாயிருந்ததால் வைத்தியரின் ஆலோசனைப்படி HCT என்ற மருந்ததைக் கடந்த இரண்டு வருடங்களாக பாவித்து வருகிறேன். எனது குருதி அமுக்கம் இப்பொழுது சாதாரண நிலையில் இருக்கிறது. இதனைத் தவிர நான் மிகவும் சுகதேகியாக இருக்கிறேன். உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் கூட பங்குகொள்கிறேன். என்னிடம் எந்தவிதமான தீய பழக்கங்களும் இல்லை. எனது பிரச்சினை உடலுறவு சம்பந்தமானது. எனக்கு உறவிலே நாட்டம் இருந்த பொழுதிலும் எனது ஆணுறுப்பின் வீரியத்தன்மை போதாததால் உறவு கொள்ள முடியவில்லை. இதனால் எனக்கும் மனைவிக்கும் இடையேயான சுமுகமான உறவில் குழப்பமும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. எமது திருமண பந்தம் விரைவில் முறிந்து விடுமோ என்றும் அஞ்சுகிறேன். எனது இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு உண்டா? உங்களது பதிலை விரைவில் எதிர்பார்த்து நிற்கிறேன்.

ப : நீங்கள் மூவரும் குறிப்பிட்டிருக்கும் வீரியக் குறைவை 'இம்போடன்ஸ்' என்று சொல்லுவார்கள். நீங்கள் கவலையோ பயமோ அடையவேண்டிய அவசியமில்லை. இவை தீர்த்து வைக்கப்படக் கூடிய பிரச்சினைகளே.

இம்போடன்ஸ் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை முதலில் நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அது விளங்கிக் கொள்ளப்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதில் அதிகம் சிரமம் இருக்காது.

பின்வரும் காரணங்கள் (ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையோ) உங்களின் இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைகின்றன. அவையாவன:—

1. கவலைகள், பிரச்சினைகள், கோபம், போதிய ஓய்வு இன்மை அல்லது நித்திரையின்மை, மன அமைதியின்மை.
2. புகைத்தல், மது அருந்து தல், போதைப்பொருள் பாவனை.
3. பிறநோய்களுக்காகப் பாவிக்கப்படும் சில மருந்து வகைகளும் இம்போடன்ஸுக்குக் காரணமாக இருக்கலாம். உதாரணமாக HCT எனப்படும் தயாசைட், அிரெனோலோல், புறோபிறனொலோல், சிமெரிடின், மக்சலோன் இப்படியாக சில மருந்துவகைகள்.
4. கணவன் மனைவியிடையே புரிந்துணர்வும் பற்றுதலும் இல்லாதிருத்தல்.
5. சில நோய்களும் இதற்குக் காரணமாக அமையலாம். அவையாவன நீண்டகாலமாக நல்ல முறையில் கட்டுப்படுத்தப்படாத நீரிழிவு நோய், சில ஓமோன் (Hormone) சம்பந்தமான நோய்கள், நரம்பு அல்லது குருதிக்குழாய் சம்பந்தமான நோய்கள், சிறுநீரக அல்லது ஈரல் சம்பந்தமான நோய்கள்.
6. உடலுறவு கொள்ளும் முறைகளில் சரியான வழிமுறைகளைக் கடைப்பிடிக்காமை.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

உங்களுக்கு மேற் குறிப்பிட்ட காரணங்களில் ஏதாவது இருக்குமானால் அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும். உதாரணமாக உங்களில் ஒருவர் புகைத்தல் பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பதுடன் மன அமைதி இன்மையாலும் பாதிக்கப் பட்டிருக்கிறீர்கள். நீங்கள் புகைத்தலை முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டும். (புகைத்தலை எவ்வாறு நிறுத்தலாம்? இதற்கு ஜூலை 21 சுடரொளியில் பதில் எழுதியிருந்தேன்.) போதிய ஓய்வு எடுத்து மனதை சந்தோஷமாக வைத்திருக்க முயற்சியுங்கள்.

இதில் மனைவியின் பங்கும் மிக முக்கியமானது. பிரச்சினைகளையும் கோபத்தையும் ஏற்படுத்தும் பேச்சையும் சூழ்நிலைகளையும் தவிர்த்துக் கொள்ளுங்கள். இவற்றைவிட மேலே கூறப்பட்ட காரணங்களில் வேறு ஏதாவது உங்களுக்கு இருந்தால் அதையும் நிவர்த்தி செய் யுங்கள். ஒருசில மாதங்களில் உங்கள் பிரச்சினை தீரவழியுண்டு.

உங்களில் இன்னொருவர் HCT என்ற மருந்தைப் பாவிப்பதாக எழுதியிருந்தீர்கள். நீங்கள் உடனடியாக அந்த மருந்து பாவிப்பதை நிறுத்தி விடுங்கள். ஒருசில நாட்களில் உங்களுடைய பிரச்சினை நிவர்த்தியாகும். குருதி அழுத்தத்திற்கு வேறுவகையான மருந்துகளை நீங்கள் பாவிக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினை உள்ளவர்கள் மருத்துவரைச் சந்தித்து உரையாடுவதில் தயக்கம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. மருத்துவர் உங்களுடன் உரையாடி உங்களை சோதித்துப் பார்த்து தேவை ஏற்படின் சில பரிசோதனைகளையும் செய்து பார்க்கும் பொழுது உங்களின் இந்த நிலைக்கான பூரணமான காரணங்களை அறிந்துகொள்ள முடியும்.

ஆண்களின் இந்தப் பிரச்சினைக்கு ஆண்கள் மட்டும் காரணமல்ல அவர்களின் மனைவிமாரில் இருக்கும் சில பிரச்சினைகளும் இது சம்பந்தமான போதிய அறிவு இன்மையும் கூட காரணமாக அமையலாம்.

எனவே நீங்கள் டாக்டரைச் சந்திக்கப் போகும் பொழுது உங்கள் மனைவியையும் அழைத்துக்கொண்டு செல்வது அவசியமாகும். இது உண்மையில் ஆண்களின் பிரச்சினை அல்ல. கணவனுக்கு மனைவிக்கும் உள்ள பொதுவான பிரச்சினை என்பதை மறந்துவிட வேண்டாம்.

இம்போடன்ஸ் என்று சொல்லப்படுகின்ற இந்த நிலையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதனை நிவர்த்தி செய்ய மருந்துகளும் இருக்கின்றன. சில மருந்துகள் ஊசிமூலம் ஏற்றப்படவேண்டும். சிலவற்றை மாத்திரைகளாக விழுங்கலாம்.

மாத்திரைகளிலே பிரபல்யமானது 'வயாக்ரா' என்று சொல்லப்படுகின்ற சில்டெனாபில் ஆகும். இந்த மாத்திரையை உடல் உறவு கொள்வதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை ஒரு நாளுக்கு ஒரு தடவைக்கு மேல் பாவிக்கக் கூடாது. இருதயநோய், பாரிசவாதம் போன்ற சில நோய்கள் உள்ளவர்கள் இதனைப் பாவிக்கக் கூடாது. எனவே ஒரு மருத்துவரின் அனுமதியுடனேயே நீங்கள் இதனைப் பாவிக்கவேண்டும்.

> இருதய நோய், பாரிசவாதம் உள்ளோர் வயாக்ரா பாவித்தால் ஆபத்து.

அனாவசியமாக மருந்து பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எல்லா மருந்துகளுக்கும் பக்கவிளைவுகள் இருக்கின்றன என்பதை மறந்துவிட வேண்டாம். மருந்து எதுவும் இல்லாமலே உங்களது இம்போடன்ஸ் என்ற பிரச்சினையை நிவர்த்தி செய்ய முயற்சிப்பது நல்லது.

நல்ல முறையில் தீர்க்கக் கூடிய இந்த பிரச்சினையால் பலர் கடுமையான மனத் தாக்கத்திற்கு ஆளாகிறார்கள். பல குடும்பப் பிரச்சினைகளுக்கும் குடும்பப் பிரிவுகளுக்கும் தற்கொலைகளுக்கும் இது காரணமாக அமைகின்றது.

இது உண்மையில் ஒரு பெரிய பிரச்சினை அல்ல என்பதும் இதுதான் வாழ்க்கை அல்ல என்பதும் உணரப்பட வேண்டும். இது தீர்த்து வைக்கப்படக் கூடிய கணவனுக்கும் மனைவிக்கும் பொதுவான ஒரு பிரச்சினை என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30-13.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | | |
| 13.00-13.15 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.15-13.30 | | | | | | | |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | ரிலாக்ஸ் டைம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | இளையகானம் | ரிலாக்ஸ் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | டைம் |
| 16.30-17.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | செம்பருத்தி | சனிதபதனி |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா | தமிழ் கார்ட்டூன் தில்லானா | மலரும் | தமிழ் கார்ட்டூன் மொட்டு | பூஞ்சோலை | புஷ்பாஞ்சலி |
| 17.30-18.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப் பறவை | சின்னத்திரை |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாட் ஷோ | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | செம்பருத்தி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | சின்னத்திரை | சனிதபதனி | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | இப்படிக்கு தென்றல் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# மெதமஹாநுவர முருகாமலை ஸ்ரீ மு

## வரலாற்றுச் சிறப்புமிக்க பழம் பெரும் ஆலயம்



இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தின் மெதமஹாநுவர முருகா மலை உச்சியில் அமைந்துள்ளது முருகா மலை ஸ்ரீ முருகன் ஆலயம்.

இதனை சிங்களவர்கள் மொறகாமலை சின்னக் கதிர்காமம் என்று போற்றி வழிபடுகின்றனர்.



150 வருட பழைமை மிக்க இவ்வாலயம் மலையகத்தில் வரலாற்று சிறப்பு மிக்கது. தமிழர்களும் சிங்களவர்களும். இந்துக்களும் பௌத்தர்களும் இணைந்து வழிபடும் பக்திப் பேராலயமாகவும் இன நல்லிணக்கத்தின் ஒரு கேந்திர ஸ்தலமாகவும் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

தேயிலை உற்பத்தியை அடிப்படை நோக்கமாகக் கொண்டு தென் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டு குடியேற்றப்பட்ட இந்தியத் தமிழர்கள் தமது வழிபாட்டுக்காக ஓர் ஆலயத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இம்மலை உச்சியில் அதற்கென ஓர் இடத்தை துப்புரவு செய்தனர். அப்பொழுது பெரியசாமி என்ற பெரிய வரின் கையில் இரண்டடி உயரமான முருகன் கைவேல் ஒன்று சிக்கியது. அதனால் அம்மலையும் முருகா மலை என்ற காரணப் பெயரால் அழைக்கப்படுகின்றது என பிரதேச வாசிகள் கூறுகின்றனர்.

1884 ஆம் ஆண்டு நான்கு மரத்தூண்களுடன் ஓலைக் குடிசையாகவே இந்த ஆலயம் அமைக்கப்பட்டது. இந்த ஆலயத்தில் ஒரு பூசாரியை அமர்த்தி தினசரி பூசைகளை தவறாமல் நடத்தினர்.

காலப்போக்கில் இத்தோட்ட மக்களுடன் அருகில் உள்ள கிராமத்து சிங்களவர்களும் இந்த ஆலயத்தில் வழிபட ஆரம்பித்தனர்.

கதிர்காமத்திற்குச் செல்ல முடியாத கிராமத்தவர்கள் இந்த ஆலயத்தை சின்னக்கதிர்காமம். (புஞ்சி கதரகம) என வழிபட்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

படிப்படியாக இவ்வாலயம் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பிரபல்யம் அடைந்ததால் பல பாகங்களில் இருந்து இந்துக்களும் பௌத்தர்களும் வருடா வருடம் இங்கு வந்து வழிபட்டு முருகன் அருள் பெறுகின்றனர்.

மெதமஹாநுவர மத்தியில் உள்ள இந்த ஆலயம் பிரதேசவாசிகள் கொடைவள்ளல்கள் ஆகியோரின் உதவியாலும் பக்தர்களின் காணிக்கைகளாலும் நிரந்தரமான ஓர் ஆலயமாக அமைக்கப்பட்டு 1956 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து வருடா வருடம் திருவிழா நடைபெற்று வந்தது. இன ஐக்கியத்திற்கு ஒரு முன் உதாரணமாக அமைந்த இவ்வாலயம் 1977 ஆம் ஆண்டு தேர்தலின் பின் சில விசமிகளால் தாக்கி சேதப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரத்தக்களரியும் இந்த ஆலயத்தை விட்டு வைக்கவில்லை.


அகிலம்
இன்று "சுடர் ஒளி" யில் வெளிவரும் முருகாமலை ஸ்ரீமுருகன் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலருக்கு எமது நல்வாசிகள்!
இலங்கைத் திருநாட்டில் சாந்தி, சமாதானம் நிலவவும், மக்கள் சுபீட்சமாக வாழவும் முருகாமலை ஸ்ரீ முருகப் பெருமான் அருள்புரிவாராக!
சகல்விதமான அச்சு வேலைகளுக்கும்
கண்டியில்
அகிலம் அச்சகம் (சென்றல் பிரிண்டர்ஸ்)
நபீஷா சொப்பிங் கம்ப்ளெக்ஸ்
135 4/1, கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொடர்பு : 08-224632

Jayalalitha Jewellery Mart
அசல் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள
ஜெயலலிதா ஜுவலரி மார்ட்
இல. 65
செட்டியார் தெரு, கொழும்பு - 11 தொ.பே: 422548

With Best Compliments From
Central Essence Suppliers
76B, Kings Street, Kandy.
T.P. 08-224187, Fax: 074-471563

With Best Compliments From
Green Apple Foods
Pandiwatha, Kundasale, Kandy
T.P. 08-420581

With Best Compliments From
NBH New Bobby Hardware
உறுதிமிக்க இரும்புக் கிராதிகள் (Girders)
சகல அளவுகளிலுமான போல்ட் ஆணிகள்,
Nuts மற்றும் எல்லா
விதமான இரும்புச் சாமான்களுக்கும் ..........
NEW BOBBY HARDWARE
19, Kandy Road, Bolagolla, Kengalla.
T.P: 074-479344 Fax: 08-374195

Himalaya
Lily Assortment
With Best Compliments From
NEW Himalaya
New Himalaya Biscuit Manufacturers
Kundasale, Kandy
Tel : 074-476844, 074-474843, 08 420843

With Best Compliments From
எழில் கொஞ்சும் வண்ண நகைகளின் ஏகோபித்த தெரிவுக்கு.....
SJ Sarathas JEWELLERS
சாரதாஸ் ஜுவலர்ஸ்
&
Sun Video Vision
அடகு பிடிப்பாளர்கள்
76-A, New Town, Digana Raiawella T.P & Fax: 08-374451

# முருகன் தேர்-தீர்த்தோற்சவ மலர்



கடவுளுக்கே இந்த நிலை என்றால் அங்கு வாழ்ந்த தமிழர் களுக்கு ஏற்பட்ட துயரங்களை சொல்ல வேண்டியதில்லை. கோயில் சிதைக்கப்பட்டது. காலம் காலமாக வாழ்ந்த தமிழர்கள் இடம் பெயர்ந்தனர்.

சுமார் 13 வருடங்கள் இந்த ஆலயம் கைவிடப்பட்ட நிலையில் காடு மண்டி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

காலம் காலமாக இங்கு இந்துக்கட வுளான முருகப் பெருமானின் ஆலயம் மட்டுமே இருந்து வந்தது. ஆனால் ஆலயம் மீண்டும் புனர்நிர் மாணம் செய்யப்படும் போது ஆலயத் தின் பிரதான வாயிலில் ஒரு பௌத்த விகாரையும் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழர்கள் எல்லோரும் இடம் பெயர்ந்து சென்று விட்டதால் ஆலயத்தைப் பராமரிக்க ஆள் இல்லை. இதனால் அங்கு வாழ்ந்த பௌத்தர்கள் தமக்கென இந்த விகாரையை அமைத்துக் கொண்டனர் என்று கூறப்பட்டது.

மாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முருக மலை முருகன் ஆலயம் விக்டோரியா நீர்த் தேக்கத்தில் மூழ்கி விடும் அபாயமும் ஏற்பட்டது. இதற்கு நஷ்டஈடாக மாவலி அபிவிருத்தி அமைச்சு எட்டு லட்ச ரூபாவை வழங்கியது.

முருகன் ஆலயத்தின் பெரும் பகுதிகள் சிதைந்து போய் இருந்தன. கோயிலுக்குச் செல்ல பிரதான வழி இல்லை. இதனால் பெருஞ் செலவில் புதிய பாதை அமைக்கப்பட்டது.

இப்பணிகளுக்கு பிரதேச வாசிகளை சிங்களப் பெரு



மக்களும் இந்துக்களும் இணைந்து ஆதரவு வழங்கினர்.

இந்துக்களாலும் பௌத்தர்களின் உதவியுடனும் மீள அமைக்கப்பட்ட முருகன் ஆலய கோபுரமும் பௌத்த விகாரைத் தூபியும் ஒன்றை ஒன்று ஒட்டி அமைந்துள்ளன.

இக்காட்சி, இங்கு வாழும் சிங்களவர்களும் இந்துக் களும் நல்லுறவுடன் ஐக்கியமாக வாழ்கின் றனர் என்பதை ஊர்ஜிதப்படுத்துவது போல் அமைந்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் 1993 ஆம் ஆண்டு வுட்சைட் தோட்டத் துரையாக வந்த வள்ளல் பங்காருசாமியின் முயற்சியால் இந்த ஆலயம் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகமும் மண்டலாபிசேகமும் நடத்தப்பட்டன.

1993ஆம் ஆண்டில் ஆலய பரிபாலனசபையின் தலைவராக ஏகமனதாக வள்ளல் பங்காருசாமி நியமிக்கப்பட்டார். இரண்டு வருடங்கள் மட்டுமே தனது பணியை சிறப்புடன் செய்த பங்காருசாமி 1994 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

இதனைத் தொடர்ந்து லக்கிலேண்ட் நிறுவன உரிமையாளர் எஸ்.முத்தையா, தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இன்றுவரை சிறப்பாக அவர் அதனை நிர்வகித்து வருகின்றார்.

புனரமைக்கப்பட்ட இந்த ஆலயத்தின் ஒருபுறம் மகாவலிகங்கை. மறுபுறம் கண்டி மன்னனை ஸ்ரீ விமலதர்மனின் கோட்டையில் கருவில் ஊற்றெடுத்துப் பாயும் கல்மல் ஓயா.

இயற்கையாகவே இந்த முருகன் ஆலயத்தில் மூர்த்தி ஸ்தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமைந்துள்ளமை சிறப்பு அம்சம் ஆகும்.

வரலாற்று சிறப்புமிக்க இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் 20.08.2001 திங்கட்கிழமை ஆரம்பமாகியது. 29 ஆம் திகதி தேரோட்டத்துடன் நிறைவுபெறும்.

ஸ்ரீ முருகப் பெருமானின் பேரருளால் நாடு நலம் பெற வும் நாமெல்லாம் வளம் பெறவும் பிரார்த்திப்போமாக.

—இரா.சிகா


With Best Compliments From
PRATHA TRADING CO.
உங்களுக்குத் தேவையான பேக்கரி,Confectionary பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும்
அனைத்து வகை உணவுப் பதார்த்தங்களுக்கான வண்ண நிறமூட்டிகள் (Essence) போன்றவற்றை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் இன்றே தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
பிரதா டிரேடிங் கம்பனி
இல. 64, டாம் வீதி,
கொழும்பு — 12,
T.P. 445626, 074-615185



RT
With Best Compliments From
Ranjitha Traders
180, Colombo Street, Kandy
T.P: 08-232350



With Best Compliments From
சிறந்த தங்க நகைகளுக்கு தேவி
Devi Jewellers
இல. 38, D.S. சேனநாயக்க வீதி,
கண்டி.
தொ.பே.இல. 08—224110



With Best Compliments From
Latha
"காதலை சொல்லும் மொழி தங்கம்"
லதா ஜுவலர்ஸ்
இல. 27, கொட்டுகொடல்ல வீதி, கண்டி.
தொ.பே. 08-232027, 225476 தொலைநகல்: 074-471605



நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ, மக்கள் சுபீட்சத்துடன் வாழ, எல்லாம் வல்ல முருகாமலை முருகப் பெருமான் அருள் புரிவானாக!
எமது தயாரிப்புகள் :-
யானை மார்க் பப்படம்
யானை மார்க் அம்மாமி பப்படம்
யானை மார்க் கறிசோயா
யானை மார்க் ஸ்பெஷல் பப்படம்
யானை மார்க் நூடில்ஸ்
யானை மார்க் நீலம்
Elephant Brand NOODLES
ELEPHANT PAPADAM CO. (PVT) LTD.
3-B, Nattaranpotha, Kundasale, Sri Lanka.
Tel / Fax: 08-420446, 08- 420518, 08- 227045




With Best Compliments From
Luckyland
Lemon Puff
Naturally Flavoured
Lemon Cream Centered Biscuits
லெமன் பஃப்
LUCKYLAND BISCUIT MANUFACTURERS
Nattaranpotha, Kundasale
T.P: 08-420217, 420574, 227041

சுடர் ஒளி சிறுகதை

# சோதிடத்தைச் சோதித்துப் பார்த்தபோது...

—உரும்பிராய் சிவன்சுதன்



முச்சந்திச் சோதிடரிடம் ஒரு முக்கிய விடயம் சம்பந்தமாக சோதிடம் கேட்கக் காத்திருக்கிறேன். முத்துமாரி அம்மன் கோயிலுக்குப் போன சோதிடர் இன்னும் வீடு திரும்பவில்லை. நேரம் போவதற்காக பக்கத்திலிருந்தவரிடம் பேச்சுக்கொடுக்கிறேன்.

''உங்களை எங்கோ கண்டமாதிரி இருக்கே??''

''என்னைத் தெரியாதே? இவர் கந்தையா ஸ்ரோர்ஸ் முதலாளி இருக்கிறாரே அவருடைய சகலனின் ஒண்டுவிட்ட தமயன் என்னுடைய மனிசிக்கு ஒரு மாமா முறை.''

பதிலைக்கேட்ட எனக்கு தலைசுற்றியது. பூமி தன்னைத்தானே சுற்றி சூரியனையும் சுற்றுமாம். இவர் பூமியைவிடப் பொல்லாத ஆளாய் இருப்பாரோ? 'பேட்டி' பாணியில் எனது அடுத்த கேள்வி தொடர்ந்தது.

''நீங்களும் சோதிடம் பார்க்க வந்தனீங்களோ?''

கேட்டதும் என்னை ஏறெடுத்துப் பார்த்தார். இரண்டு அண்டசராசரங்கள் அவரது விழிகளில் உருண்டன.

''தம்பி! எனக்கு சாத்திரத்திலை நம்பிக்கை இல்லை. சும்மா ஒருக்கால் சோதிடம் சரியோ என்று சோதித்துப் பார்ப்போம் எண்டிட்டு வந்தனான்.''

அவரின் இந்தப் பதில் எனக்குப் புதுமையானதாக இருக்கவில்லை. சாத்திரத்தை நம்பாமல் இருப்பது நாகரிகம் என்று நினைப்பவர்கள் பலர். சாத்திரத்தை நம்பிக்கொண்டு நம்பிக்கை இல்லையென சொல்லிக் கொள்பவர்களும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

அன்றொருநாள் நானும் இவரைப்போலவே நம்பிக்கையில்லாமல் ஆலமரத்தடிச் சாத்திரியாரைச் சோதித்துப் பார்க்க என்று போனது எனக்கு அப்படியே ஞாபகம் வருகிறது. அந்த ஆலமரத்தடிச் சோதிடரின் அற்புதமான ஆளுமைக்கு முன்னால் அவரைச் சோதித்துப் பார்க்கவேண்டும் என்ற என் ஆராய்ச்சி எண்ணங்களெல்லாம் அடியோடு அடங்கிப் போயின. அவரின் தெய்வீக மான வார்த்தைகள் என் காதில் தேனா கப் பாய்ந்தன.

''மகனே! உன் மனக்கவலைகள் நீங்கும் காலம் வந்துவிட்டது. இனி உனக்குத் தோல்வி இல்லை. நீ தொட்டதெல் லாம் துலங்கும். ஒரு பிரகாசமான எதிர்காலம் உன்னைத் தேடி வரும். எங்கும் எதிலும் வெற்றி......''

அவர் பேசிக்கொண்டே போக நான் பூரித்துப்போய் உட்கார்ந்தி ருந்தேன். நான் சிறியவனாக இருந்த காலத்திலி ருந்தே என்ன காரியத்தைத் துவங்கினாலும் அது முளைத்து மூன்று இலை விடமுன்பு முறிந்து விடும். அப்பு சொன்னது போல் அது எனது சாதகபலனாய் இருந்திருக்க வேண்டும். தோல்விதான் வெற்றியின் முதற்படி என்பார்கள். ஆனால் எனக்கு முழுப் படிகளுமே தோல்வியாய் இருந்தன. நிலைமை அப்படி இருக் கும்பொழுது இவர் இப்படிச் சொன்னால் யாருக்குத்தான் புல்லரித்துப் போகாது.

நான் கவிதை என்று சொல்லி எழுதத் துவங்கிய அந்த நாள் எனக்கு ஞாபகம் இருக்கிறது. எட்டாம் வகுப்புப் படித் துக் கொண்டிருந்தேன். பரீட்சைக்கு இரண்டு நாட்கள் இருந்தன. மனமெல்லாம் வேதனை, கொந்தளிப்பு. பரீட் சையை நினைத்து அல்ல. அது முடிந்து வரப்போகும் 'மாக்ஸ்'ஐ நினைத்து. எதுவுமே படித்து முடியவில்லை. இப்போ எதையென்று படிப்பது? என்னத்தைச் செய் வது? தலைக்குமேலே வெள்ளம். நெஞ்சின் அடித்தளத் திலிருந்து ஊற்றெடுத்துப் பொங்கி எழும் வேதனை உணர்வுகளை எழுதத் துவங்கினேன்.

தேதி பத்து வந்தால் தேர்வு நடக்குமையா — அதில்
பாசைத் தவறவிட்டால் வீட்டில் பூசை கிடைக்குமையா
தேர்வு என்றவுடன் என் தேகம் வியர்க்குதையா......

''என்னடா படிக்கிறாய்?'' என்று எட்டிப் பார்த்த அப்பாவிடம் அந்த முற்றுப்பெறாத மூன்றுவரிகளும் அகப்பட்டுப் பட்டபாடு அப்பப்பா! அச்சம்பவத்துடன் என்னிடம் இருந்த கவிதை எழுதவேண்டும் என்ற ஆசை கரைந்து போனது. காலப்போக்கில் படிப்புக்கும் படிப்படியாய் முழுக்குப் போடவேண்டிய கட்டாயம் வந்தது. இரண்டு தடவை பலசரக்குக் கடை நடத்தத்துவங்கி முதலும் இல்லாமல் முறிந்து போகவேண்டிய கட்டம் வந்தது.

எந்தத் துறையிலுமே நான் நீடிக்கமுடியாது என்று என் சாதகபலன் இருந்தபொழுது நான் என்ன செய்திருக்க முடியும்? நான் பிறந்த நேரம் 'அந்தமாதிரி' இருந்திருக்க வேண்டும். நிலைமை இப்படி இருந்தபொழுதுதான் அந்த ஆலமரத்தடிச் சாத்திரியார் அப்படிச் சொன்னார். அவரது விழிகளில் இருந்த வசீகரமும் ஆளுமையும் அவரது சாத்திரம் உண்மை என்பதை எனக்குச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரியப்படுத்தியது.

வீட்டிற்கு வந்ததும் வியாபாரம் தொடங்கும் யோசனை வந்தது. பெரிய உயர்வுகள் வருவதுபோல எல்லாம் கனவு வந்தது. கஷ்டப்பட்டு உழைக்க வேண்டிய கட்டாயம் வந்தது. கடைசியில் ஆலமரத்தடிச் சோதிடர் சொன்னதுபோலவே முன்னேற்றங்கள் பல வந்து என்னையும் ஒரு மனிதனாக்கியது.

எனது சாதக பலனின் மாற்றத்தைத் துல்லியமாகக் கணித்துச்சொன்ன அந்த ஆலமரத்தடிச் சாத்திரியாரைச் சந்தித்துப் பாராட்டி நன்றி சொல்ல நான் கொடுத்து வைக்கவில்லை. அவர் எங்கோ போய்விட்டார்.

சாத்திரத்தைப் பற்றிச் சரியாக விளங்காத ஒருவர் இங்கே இப்பொழுது முச்சந்திச் சோதிடரை சோதித்துப் பார்க்க முனைந்து கொண்டிருக்கிறார். அவரிடம் பேச்சுக் கொடுத்ததற்காக நான் என்னையே நொந்து கொள்ளுமளவுக்கு எனக்கு இலவசமாகப் புத்திமதியும் சொல்லத்துவங்கினார்.

''தம்பி! சாத்திரமெல்லாம் சுத்தப் பொய். மனிதனை ஏமாத்தும் விஷயம். உன்னுடைய உழைப்பிலும் முயற்சியிலும் நம்பிக்கை வை. அதுதான் மெய்......''

அவர் பேசிக்கொண்டேபோன விதமும் அவரின் கண்களின் அசைவும் அவரை முன்பு எங்கோ சந்தித்த உணர்வை என்னுள்ளே ஏற்படுத்தியது. இறுதியில் அவர் யார் என்பது எனக்குப் புலப்படத்துவங்கியது. ஓஹோ! இவர்தான் அந்த ஆலமரத்தடிச் சாத்திரியார்.

அவர் பேசிக்கொண்டே போக நான் ஏமாற்றப்பட்டது போல் உணர்ந்து கோபப்பட்டேன். ஆனால் நேரம் போகப் போக மறைக்க முடியாத ஒரு அப்பட்டமான உண்மை புலப் படத்துவங்கியது. ஆதரவாக அவரது வலக்கரத்தைப் பற்றினேன்.

''சாத்திரம் என்பது உண்மையோ பொய்யோ என்பது எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய உயர்வுக்கு நீங்கள்தான் முக்கிய காரணம் என்பது தெளிவாகத் தெரிகிறது. என்னிலே எனக்கு இருந்த அவநம்பிக்கையை நீக்கியதற்கு நன்றி.''

சொல்லிவிட்டு நான் வீடுநோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

# ராசி பலன்

**02.09.2001 முதல் 08.09.2001 வரை**
**சோதிடர் பொ.சந்திரன்.**

### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

சூரியன், செவ்வாய், சுக்கிரன், ராகுபோன்ற கிரகங்கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். சகோதரச் சிறப்பு உண்டு. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மனக்கிலேசம் இருக்கும். புத்திரச் சிறப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தேக சுகம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் பெரிதாக முன்னேற்றம் இல்லை. எடுத்த காரியங்கள் தாமதமாக நிறைவேறும்.

### இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2

குரு, புதன், சூரியன், கேது போன்ற கிரகங்களால் நன்மை ஏற்படும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனங்களால் நன்மையுண்டு. புத்திரச்சிறப்புண்டு. பிரயாண வாய்ப் புண்டு. திருமணப்பேச்சு நன்மையில் முடியும். தொழில் துறையில் சில பின்னடைவுகள் ஏற்படும். உடல் ஆரோக் கியம்நன்று. எடுத்த கருமங்கள் இலகுவில் வெற்றியில் முடியும்.

### மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

சுக்கிரன், சூரியன், புதன் , சனி ஆகிய கிரகங் கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு பெரிதாக வரஇடமில்லை. கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரச் சிறப்புண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில் துறை யில் சில தொல்லைகள் வர வாய்ப்புண்டு. எடுத்த காரியங்கள் இலகுவில் வெற்றியில் முடியும். மனச்சஞ்சலம் இருக்கும்.

### கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

சூரியன் , சுக்கிரன், புதன், சனி, ராகு, கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரச்சிறப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். மன அமைதி உண்டு. எடுத்த கருமங்கள் தடைப்பட்டே நிறைவேறும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழில்துறை மந்தமாக இருக்கும்.

### சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1

சூரியன், புதன், குரு, ராகு, கேது, சனி ஆகிய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பது நல்லது. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். எடுத்த செலை இலகுவில் நிறைவேற்றலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் சில பின்னடைவுகள் இருக்கும்.

### கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

புதன், சனி, குரு, ராகு, சூரியன் ஆகிய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பது நல்லது. பணம் இருக் கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதியுண்டு. வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். குழந்தைகளால் யோகம் உண்டு. எடுத்த செயலை இலகுவில் நிறைவேற்றலாம். தேகசுகம் சிறுபாதிப்புக்குள்ளாகலாம். தொழில்துறைமுன்னே றும் . பிரயாண வாய்ப்பு உண்டு. திரு மண வாய்ப்பு உண்டு.

### துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

குரு, புதன், சூரியன், ராகு, கேது , சுக்கிரன் நல்ல நிலையில் இருப்பது நலம். பணத்தட்டுப்பாடு இருக் கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண வாய்ப்பு ண்டு. திருமணவாய்ப்பு உண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. எடுத்த கருமத்தை இலகுவில் முடிப்பீர்கள்.

### விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை

சூரியன், புதன், சுக்கிரன், ராகு ஆகிய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பது நல்லது. பணத்தட்டுப் பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். மன அமைதி குன்றலாம். வீடு, வாகனம் லாபம் தரும். எடுத்த கருமங்கள் தாமதமாக நிறைவேறும். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறை முன்னேறும். வசதியான இடமாற்றம் ஏற்படும். நண்பர்களால் உதவி இருக்கும்.

### தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.

குரு, சூரியன், புதன் , சந்திரன், சனி ஆகிய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பது நலம். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனம் லாபம் தரும். மன அமைதி இல்லை. குழந்தை கள் சொற்கேட்கமாட்டார்கள். திருமண வாய்ப்பு உண்டு. எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில்துறை முன்னேறும். பதவி உயர்வு உண்டு.

### மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.

சுக்கிரன், புதன், செய்வாய், ராகு, கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதியுண்டு. தொடங்கிய செயல் தாமதமாக நிறைவேறும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத் தும். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறை முன்னேறும். புதிய தொழில் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களால் செலவு உண்டாகலாம். பிரயாணத்தடை இருக்கும்.

### கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

குரு, சூரியன், புதன், செய்வாய், கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதியுண்டு. வீடு, வாகனங்களால் செலவு ஏற்படலாம். எடுத்த செயலை இலகுவில் முடிக்கலாம். திருமணவாய்ப்பு உண்டு. தொழில் துறையில் மெதுவான முன்னேற்றம் இருக்கும். தேக ஆரோக்கியம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு.

### மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

சனி, சுக்கிரன், புதன், கேது, செவ்வாய் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி குன்ற லாம். எடுத்த செயல் தாமதமாக நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் மெதுவான முன்னேற் றம் இருக்கும். பிரயாணத்தடை இருக்கும். நண்பர்களால் செலவு ஏற்பட இடம் உண்டு.



# தலைமுறை இடைவெளி ஆபத்தானதா?

காதலித்துத் திருமணம் செய்வதை இன்றைய சமூகம் ஏற்றுக் கொண்டு விட்டதா?

ஒரு காலத்தில் காதலிப்பது பெரும் குற்றமாகக் கருதப்பட்டது. காதலிப் பவர்களை சமூகம் ஒதுக்கி வைத்தது.

காதலிப்பவர்கள் பலவிதமான சிக்கல்களையும் பிரச்சினைகளையும் எதிர்ப்புக்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. இவற்றைக் கண்டு காதலர்கள் துவண்டு விடக் கூடாது.

காதலின் வசீகரமே சின்னச் சின்னப் பிரச்சினைகளைச் சந்திப்பதும் அவற்றைத் தீர்ப்பதும்தான் என்பதைக் காதலர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பிரச்சினைகளைக் கண்டு பயம் கொள்ளாதீர்கள். அவற்றைப் பொறுமையுடன் ஆராய்ந்து தீர்க்க வேண்டியவர்கள் நீங்கள் தான். மனதில் தோன்றுவதை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இதனால் தவறுகளைத் திருத்திக் கொள்ளமுடியும். நல்லவைகளை ஏற்று நடைமுறைப்படுத்த முடியும்.

பெரும்பாலான காதல் திருமணங்களுக்குப் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவிப்பது வழக்கம். இனம், மதம், மொழி என்ற வேறுபாடுகளைக் கடந்து மலரும் உண்மைக் காதலை இன்று எத்தனை பெற்றோர் பெருமனதுடன் ஏற்கிறார்கள்?

நாம் தற்போது வாழ்ந்து வரும் சூழ்நிலை வேறு. நம்பெற்றோர் வாழ்ந்த சூழ்நிலை வேறு. பாசம், அன்பு இவற்றை எல்லாம் விட சாதிதான் பெரிது என்றுசொல்லுகின்ற தலைமுறை அவர்களுடையது. சாதி என்றால் என்ன என்று கேட்பார்கள் இன்றைய தலைமுறையினர்.

நிம்மதியைச் சாதியாலும், பணத்தாலும், நகைகளாலும் கொடுக்க முடியாது. அன்பான, புரிந்துணர்வினால் தான் கொடுக்க முடியும். இந்த உண்மையைப் பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும்

காதலிப்பவர்கள் அவமானங்களுக்கு முகம் கொடுக்கநேரிடும். காதலிக்கும் போது அவமானங்கள் எவ்வளவு அதிகமாக இருக்குமோ, அந்தளவுக்கு வெற்றியும் இருக்கும் என்று நினைத்து மன ஆறுதல் படுங்கள். ஒருமனிதன் அவமானத்திலிருந்துதான் நல்ல பாடங்களைக் கற்றுக் கொள்கின்றான்.

அன்னை திரேசா ஒருமுறை தன் அனாதைக் குழந்தைகளுக்காக ஒரு பணக்காரனிடம் கை ஏந்திய போது அவன், அன்னை திரேசாவின் கையில் எச்சில் உமிழ்ந்தான். ''அவனைப் பார்த்து, இது எனக்கு, என் குழந்தைகளுக்கு என்ன தரப்போகிறாய்..?'' என்று அவர் மீண்டும் பொறுமையுடன் கேட்டாராம்.


அவமானங்கள் மகத்தான மனிதர்களை உருவாக்கும். சாதாரண மனிதர்களையும் உயிரோட்டமுள்ளவர்களாக மாற்றும்.

வாழ்க்கை சோகங்களைக் கொடுக்கிறது. எதிர்பாராத விதமாகப் பரிசுகளையும் வழங்குகின்றது. காதலில் வெற்றியடைய அதிஷ்டம் இல்லையே என்று அங்கலாய்க்காதீர்கள். ஒரே ஒரு வெற்றிக்கு வேண்டுமானால் அதிஷ்டம் காரணமாக இருக்கலாம். வெற்றி தொடர வேண்டுமானால் திறமைதான் முக்கியம்.

சந்தேகத்தையும், பயத்தையும் வெற்றி கொள்ளுங்கள். அதிஷ்டம் என்ற ஒப்பனையை விலக்கிவிட்டு வெற்றி என்ற முகத்தைத் தேடுங்கள்– வானம் கூட எட்டிப் பிடித்துவிடும் தூரத்தில் தான் உள்ளது என்பதை உணர்வீர்கள்.




பிரதீபா – பசீனா



# மன இறுக்கம் போக்க மனம் விட்டு அழுங்கள்

''வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' என்ற கருத்தை இன்று விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்கின்றனர்.

அழுவதற்கு மட்டுமல்ல உள்ளத்தில் உள்ள எரிமலையைக் குளிர்விக்கவும் கண்ணீர் தேவைப்படுகிறது.

உரத்த சத்தத்தோடு அழுதால் மன இறுக்கத்தை ஏற்படுத்தும் 'ஹோமோன்கள்' கண்ணீரோடு வெளியேறிவிடுகின்றன.

அண்மையில் கண்களுக்கான ஆராய்ச்சி நிலையத்தில் கண்ணீர் பற்றிய ஆய்வு ஒன்று நடந்தது. சோகமான சமயங்களில் வரும் கண்ணீரையும், வெங்காயம் வெட்டும் போது வரும் கண்ணீரையும் பரிசோதித்துப் பார்த்தனர். சோகக் கண்ணீரில் தான் புரதம் அதிகமாக இருந்ததாம்.

ஸ்டேன் போர்ட் பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர் ''ஜேம்ஸ் க்ராஸ்'' ''அழுகின்றவர்களுக்கு ஆறுதலும் அரவணைப்பும் தேவை'' என்கிறார்.

ஆறுதல் சொல்லாத நிலையில் வருகின்ற கண் ணீரும், சோகமும் அமைதியடைவதில்லை. கண்ணீர் கொட்டக்கொட்டச் சோகம் அதிகமாகின்றது.

அழுகைதான் உடலில் நோயாக வெளிப்படுகின்றது. ஒருவர் படும் சோகத்தை இன்னொருவர் ஆறுதலுடன் கேட்டால் நோயின் கொடுமை தணிந்து விடும்.

எனவே கண்ணீர் விட்டு அழுபவரின் கரங்களைப் பற்றிக் கொண்டு ஆறுதலாக இதமாக ஓரிரு வார்த்தைகள் பேசுங்கள். அவர்களுக்குக் கவலை பறந்து விடும்.

# வார்த்தைகளால் வல்லுறவுக்கு ஆளாகும் பெண்கள்



''இன்று பல பெண்கள் வார்த்தைகளால் வல்லுறவுக்கு ஆளாகிறார்கள்''.

ஒரு பெண் மீது தனிப்பட்ட கோபம் இருந்தால் உடனே அவள் நடத்தை பற்றி விமர்சிக்கிறார்கள். உண்மையிலேயே அப்பெண் நல்லவளாக இருப்பாள். ஆனால் பலருக்கு முன்பாக வைத்து 'ஒழுக்கமற்றவள்' எனப் பட்டம் சூட்டப்படுகிறாள்.

பெண்களிடம் காணப்படும் பலவீனம்தான் இதற்குக் காரணம். ஒழுக்கம், நடத்தை முதலானவை பற்றி விமர்சிக்கப்படும் போது பல பெண்கள் துவண்டு விடுகின்றனர். சமுதாயம் தன் மீது பழி சுமத்துகிறது என்ற பயத்தால் களைத்துப் போகிறார்கள்.

பெண்கள் மீது வீண் பழி சுமத்துபவர்களுக்கு இது சாதகமாக அமைகிறது. பெண்களை இழிவுபடுத்தும் ஒவ்வொரு வார்த்தைப் பிரயோகத்தாலும் அவர்கள் இம்சைப்படுத்தப்படுகிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். மற்றவர்களை விமர்சிக்க எமக்கு என்ன தகுதி உண்டு என ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறான வீண் பழிகள் காரணமாகத் தற்கொலை செய்து கொண்ட பெண்கள் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறோம். இத்தகைய முடிவுகள் ஆரோக்கியமான தீர்வுகளை என்றுமே தரப்போவதில்லை.

வீண் பழிகள் வரும் போதுதான் பெண்களின் மனம் திடமாக இருக்க வேண்டும். அதிகமாக உணர்ச்சி வசப்படக் கூடாது. பொறுமையாக இருங்கள். ஆனால் கோழையாக மாறிவிடாதீர்கள்.

உங்களுக்கு எதிராக ஒருவர் கொடூரமாக செயற்படுகின்றாரா? அந்தக் கொடூரம் உங்களை அழிக்காது. அவ்வாறு திட்டம் தீட்டியவரின் மனதிலும் அதை நிறைவேற்றுபவர்களின் செய்கைகளிலும்தான் தோல்விகள் கொடூரமாகத் தாண்டவமாடும்.

பெண்களே உங்கள் பலவீனம் மற்றவரின் பலமாக அமைந்து விடும். எனவே எப்போதும் மனதிலும் செயலிலும் உறுதி உள்ளவர்களாக இருங்கள்.

# மாற்றமுறும் கலாசாரம்

பாரம்பரிய பண்பாட்டு– கலாசார விழுமியங்களைக் கொண்ட நாம் மேல் நாட்டு நாகரிகத்தை நாடிச் செல்கிறோம். மேல் நாட்டவர்களோ நம் கலாசாரங்களைக் கடைப்பிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

குறிப்பாக இங்கிலாந்தில் வாழும் பல பெண்கள் நம் நாட்டுக் கலாசாரங்களை விரும்பிக் கடைப்பிடிக்கிறார்கள்.



நம் நாட்டுப் பெண்கள் அழகு நிலையங்களுக்குச் (Beauty Parlour) செல்ல இங்கிலாந்துப் பெண்கள் யோகாசனத்திலும், பிராணயாமத்திலும் பயிற்சி பெறுகிறார்கள்.

எமது பெண்கள் தலை மயிரை வெட்டுகிறார்கள். ஆனால் மேலைநாட்டு பெண்களோ தலைமுடியை வளர்த்துப் பின்னிக் கொள்கிறார்கள்.

நாம் வெறும் நெற்றியுடன் செல்ல, அவர்களோ குங்குமப் பொட்டுடன் அழகாகத் தெரிகிறார்கள். சுரிதாரும் சேலையும் அவர்களுக்குப் பிடித்தமான உடைகளாகியுள்ளன. மேல்நாட்டில் உயர் பதவியில் இருப்பவர்கள் தொடக்கம் பாடசாலை மாணவர்கள் வரை நம்நாட்டுக் கலாசாரத்தால் அதிகம் கவரப்பட்டவர் களாகக் காணப்படுகின்றனர்.



நாம் அவர்களைப் பின்பற்றி மென்மையான நிறங்களைத் தேட, அவர்களோ சிவப்பு, பச்சை, ஊதா என்று கடுமையான நிறங்களை விரும்புகிறார்கள்.

லண்டன் நகரில் உள்ள பல கடைகளில் ஆடைகள் நம்நாட்டு வடிவமைப்பில் கிடைக்கின்றன. மேலும் பாரீஸ், நியூயோர்க் நகரங்களில் நடைபெறும் ''பஷன் ஷோ''க்களில் கீழைத்தேய உடைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

அழகிய வண்ண மணிகள் கோர்த்த மாலைகள், கண்ணாடி வளையல்கள், மெட்டி, கொலுசு போன்றவற்றை மிகுந்த விருப்பத்துடன் அவர்கள் அணிந்து கொள்கிறார்கள்.

''கீழைத்தேய உடைகளையும், அணிகலன்களையும் போட்டுக் கொள்வதனால் எங்கள் மேல் கண்ணே பட்டு விடும்என்று அஞ்சுகிறோம் என்கிறார்'' கரோல் வில்லியம்ஸ் என்ற கல்லூரி மாணவி.

நம் நாட்டுக் கலாசாரங்களைக் கடைப் பிடிக்கும் மேலை நாட்டவர்களின் தொகை வரவர அதிகரித்துக் கொண்டே போகின்றது.

## பிறர் எம்மை விரும்ப பயனுள்ள வழிகள்



நாம் பலரைச் சந்திக்கின்றோம். அவர்கள் ஒவ்வொருவருடனும் ஒட்டி உறவாடுவதில்லை. ஆனால் பிறர் எம்மை விரும்பும் முறையில் நடந்து கொள்வது அவசியம்.

*நம்முடன் தொடர்புள்ள அனைவரது பெயர்களையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

*நம்முடன் பழகும் போது மற்றவர்கள் மனதில் பயம், தயக்கம், எரிச்சல் முதலான உணர்வுகள் ஏற்படக் கூடாது.

*எந்தவிதமான சூழலிலும் உணர்ச்சி வசப்படக் கூடாது. அமைதியாக இருக்க வேண்டும்.

*'நான்' என்ற அகங்காரத்தை அழித்து விடுங்கள் அல்லது அது உங்களை அழித்து விடும்.

*எப்போதும் தாழ்மையாகவும் நேர்மையாகவும் பேச வேண்டும். கசப்பான விடயங்களைக் கூட இனிமையாகக் கூறுங்கள்.

*எம்மிடம் குறைகள் உள்ளன. அவற்றை நாமே ஆராய்ந்து அகற்ற வேண்டும்.

*மன்னிக்கும் பண்பு பல மனப்பாரங்களைக் குறைக்கும்.

*வெற்றியில் பாராட்டவும், வருத்தத்தில் மன பலத்தைக் கொடுக்கவும் தவற வேண்டாம்.

*மற்றவர்கள் எம்மைப் புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் மற்றவர்களைப் புரிந்து கொள்ளுங்கள்.

*புன் சிரிப்பையும் அமைதியான பேச்சையும் ஒரு போதும் இழக்க வேண்டாம்.

## சுடர் ஒளி தொடர் கதை

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

இதழ் — 15

மேசியின் அழகுச் சிலை மேனி இருளிலும் பளீரென ஒளிர்ந்தது. அவளது உடலைக் கட்டி அணைத்து வெளியே இழுத்து அழுது புரண்டான் டானியல். அவனது பொக்கெட்டிலிருந்து புத்தம் புதிய கரன்ஸிக் கட்டுக்கள் கொட்டுப்பட்டன.

அவனை அவளிடமிருந்து பிரிப்பதற்குள் போது மென்றாகிவிட்டது. உடனடியாக அவன் கைது செய்யப் பட்டான். அவனது அப்பாவித்தனமான செயல்கள் நடிப்பு எனவே கருதப்பட்டன. எவரிடமாவது உடலை ஒப்படைக்க அவன் கூலியுடன் காத்திருந்ததாகக் கருதப்பட்டது. அவ்வளவு பணம் பொக்கெட்டில் இருந்தமைக்கான விளக்கத்தை அவனால் கொடுக்க இயலவில்லை.



விசாரணையின் போதும், கோர்ட்டிலும் அவனது வாதங்கள் அடிபட்டுப் போயின. ஆயுள் தண்டனைதான் அவனுக்குப் பரிசாகக் கிடைத்தது. அவனுக்காக வாதாடியவர்களால் எதனையும் சாதிக்க இயலவில்லை.

***

பத்திரிகையில் வெளியான நீதிமன்ற விவாதங்கள் பற்றிய பக்கங்களை அரச சட்டத்தரணி றோமன் வழமைபோல வாசித்துக் கொண்டிருந்தான். அதில் ஏதாவது கேஸ்கள் அவனுக்குக் கிடைக்கும். மேசியின் கொலை றோமனின் மனதை நெருடி இருந்தது. இதில் 'டானியல்தான் கொலையாளி என்கிற தீர்ப்பில் தவறு இருக்கலாம்' என அவன் கருதினான்.

சிறையில் டானியலைச் சந்தித்த றோமன் பல மணித் தியாலங்கள் அவனோடு விரிவாக விடயங்களைப் பேசிக் கொண்டான். மேசி தன்னோடு கதைத்துக்கொண்ட பல இரகசியங்களை அவன் அப்போது புட்டுவைத்தான். அதனால் மைக்கேலிடமிருந்து தனக்கு அச்சுறுத்தல் வரலாம் என்கின்ற ஏக்கம் பிறந்தது உண்மைதான். ஆயுள் தண்டனையைவிட அதை எதிர்கொள்வது பரவாயில்லை என்கின்ற டானியலது நிலைப்பாடு வெளிப்பட்டுக் கொண்டது.

பொலிஸார் மைக்கேலின் யு5 அலுவலகத்தைத் தேடி வலைவிரித்தனர். அங்கே எந்தத் துரும்பையும் ஆதாரமாக எடுக்க இயலவில்லை. அப்படியோர் அலுவலகம் அங்கு இயங்கியதற்கான அறிகுறிகளும் கிடைக்கவில்லை.

எனினும் டானியலின் ஆணித்தரமான வாக்குமூலம் பொலிஸாரை சிந்திக்க வைத்தது. மீண்டும் மோப்ப நாய்கள் சகிதம் பொலிஸார் கட்டடத்தை வளைத்தபோது அந்த மோப்ப நாய்கள் பரபரப்பாகக் காணப்பட்டன. மங்கலான சில நாட்பட்ட இரத்தக் கறைகள் அகப்பட்டன. மீண்டும் ஆய்வுகூடப் பரிசோதனைகள் முடுக்கிவிடப்பட்டன. முடிவில் மேசி கொலையுண்ட இடம் அதுதான் என்கின்ற முடிவு தெளிவானது. மேசியின் இரத்தக் கறைகள்தான் அவை என்பதுவும் அவற்றின் காலம், அவள் கொலையுண்ட காலத்துடன் ஒத்துப் போவதாகவும் கணிக்கப்பட்டன.

மீண்டும் அவளது உடல் அகழ்ந்து எடுக்கப்பட்டு ஆய்வு கூடத்திற்கு எடுத்துவரப்பட்டது. அவளது நகக் கண்களில் டானியல் அல்லாத அன்னியன் ஒருவனின் தோல் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை யாருடையவை? என்கின்ற கேள்வி எழுந்தது. தகவல்கள் அனைத்தும் இரகசியமாகவே பேணப்பட்டன. நிச்சயமாக அவை மைக்கேலுடையதாகத்தான் இருக்கும் என்பதனை றோமன் ஊகித்திருந்தான். இனிச் சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் அதனை ஊர்ஜிதம் செய்தாக வேண்டும்.

மைக்கேல் கலந்துகொண்ட கேளிக்கை விருந்தொன்றில் றோமன் அவனிடம் நெருங்கிப் பழகினான். இருவரும் ஏற் கெனவே சற்று அறிமுகம் ஆனவர்கள்தான். இருவரும் சேர்ந்து குடித்தபோது கடும்போதை ஏறிவிட்டவன்போல றோமன் நடித்தான். அவனது கிளாஸ் தட்டுப்பட்டு உடைந்தது. உடைந்த பின்பும் அதை நிரப்பி வாயருகே கொண்டு போனான் றோமன். அதன் விளிம்புகள் கூராகக் குத்தக் காத்திருந்தன.

அந்த கிளாஸைப் பறிக்க முயன்று போராடினான் மைக்கேல். அது அவனது கையையும் பதம் பார்த்துவிட்டது. வெயிட்டர்கள் ஓடிவந்தனர். இரத்தம் சொட்ட நின்ற மைக்கேலுக்கு முதலுதவிப் பிரிவினர் கட்டுப்போட்டனர். இரத்தம் தோய்ந்த துணிகளும் கிளாஸ் துண்டுகளும் ஹோட்டலின் குப்பைக் கூடைக்குள் புகுந்து கொண்டன.

மறுநாள் அந்தக் குப்பைக் கூடையின் உள்ளடக்கங்கள் ஆய்வுகூடத்தில் ஆராய்ச்சிக்காக வந்திருந்தன. கிளாஸில் இருந்த சிறு சதைத் துண்டமும் இரத்த மாதிரிகளும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவை மேசியின் நகத்தில் காணப்பட்ட மாதிரிகளுடன் நூறு வீதம் ஒத்திருக்கக் காணப்பட்டன.

மேசியைக் கொலை செய்தவன் மைக்கேல்தான் என்பதற்கான ஆதாரங்களுடன் றோமன் வழக்கைத் தாக்கல் செய்யத் தயாரானான். சந்தேகத்தின் பேரில் மைக்கேல் கைது செய்யப்பட்டிருந்தான். வழக்கில் மைக்கேலுக்காக சுமரா ஆஜராகி இருந்தாள். சுமராவைத் தனக்காக வழக்காட இணங்க வைத்ததையே ஒரு பெரிய சாதனையாகக் கருதினான் மைக்கேல்.

மைக்கேல் பற்றிய பல வதந்திகள் நகரில் உலவுகின்றன தான். ஆனால் எவையும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. அவன் சமுதாயத்தில் ஒரு கௌரவமான மனிதனாகவே தென்பட்டான். அவனை ஒரு கிரிமினலாகக் கற்பனை பண்ணப் பலரால் இயலவில்லை. அவன் பக்கம் இருக்கும் நியாயத்தை வெளிக் கொண்டுவரவே சுமரா விரும்பினாள்.

மைக்கேலுக்காக ஏற்கெனவே பல சிவில் கேஸ்களில் சுமரா வாதாடி வந்திருக்கிறாள். அவனோடு பழகியதில் அவன் ஒரு பெருமையே இல்லாத கோடீஸ்வரன் என்பது சுமராவுக்குத் தெரிந்திருந்தது. எரிச்சல், பொறாமையில் பலரும் அவன் மீது குற்றங்களைச் சுமத்திவிடுகிறார்கள் என்றுதான் அவள் நினைத்தாள்.

சுமரா தனது கிளையன்றுக்காக கோர்ட்டில் வாதாடினாளே தவிர அவனது நடத்தை பற்றித் துப்பறிய முனையவில்லை. அது அவளது தொழி லுக்கு அப்பாற்பட்ட விடயமாகவே அவளுக்குப்பட்டது.

வழக்கின்போது றோமனால் குற்றச்சாட்டுக்கள் எதனையும் உறுதிசெய்யக் கடைசி நேரத்தில் இயலாமற் போய்விட்டது. வழக்கு தீர்ப்புச் சொல்லப்படாமலே ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அதற்கிடையில் சுமரா மயக்கம் போட்டு விழுந்திருந்தாள்.

(தொடரும்)

## காத்திருப்பின் எல்லை

நெருங்க முடியாத தடை
நுழைய முடியாத குகை
தென்றலையும் விசாரித்தனுப்பும் படை!
''எலிகளே நுழைய முடியாத இடத்தில்
புலிகள் எப்படி நுழையும்?''
இறு மார்ந்த பார்வை!
அர்த்தமுள்ள காத்திருப்பை பலவீனமாக
அர்த்தப்படுத்திய வேளை
பலவீனங்களின் பாதையே
சமாதானப் பேச்சென்று
வாதம் வலுப்பட்ட நேரம்
பொறுமைக்கு எல்லை வரையப்பட்டது!
பாயும் இலக்கு குறிக்கப்பட்டது!
அங்கா இங்கா எனப் பார்த்திருக்க
அருகே எழுந்தது எரிமலை!
சாவினை முதுகில் சுமந்து
வந்தவர்களுக்கு
விமானங்கள் விளையாட்டுப்
பொருட்களாயின!
வந்தவர்கள் வந்தகாரியம் முடித்து
வாகையோடு திரும்பிவிட
நண்பகலிலோர் அறிவிப்பு
''வெற்றிகரமாக முறியடிப்பு''
''கோழைத்தனமான செயல்'' என்றனர்!
அப்படியானால்,
காவலரனுள் வல்லுறவு கொள்வது
கூட்டம் கூடி ஆட்டம் போடுவதும்
கண்டபடி கைது செய்வதும்
காணாதபடி கை யூட்டுப்
பெறுவதும்தான் வீரச் செயல்களா?
சிங்கத்தின் குகைக்குள் புகுந்து
அதன் பிடரியை பிடித்துலுக்கியதில்
பலருக்குப் பொறி கலங்கி விட்டது!
அதனால்தான் விதவிதமான
அறிவிப்புகளும் அறிக்கைகளும்!
பொறுமையைச் சீண்டியதன் பலன்
பொலபொலத்துப் போனது நாட்டின்
பொருளாதாரம்! இனியேனும்,
வேதாளம் இறங்கி வருமோ....?

— ஜெனா



## எண்ணிப்பாரு!

வெள்ளம் வருமுன்பு
அணையைக் கட்டு
விபரீதம் வருமுன்பே
தடுத்து நிறுத்து
கொள்ளை போகுமுன்பே
பாதுகாரு
குழந்தை கெடு முன்பே
ஒழுக்கம் சேரு
கள்ளால் தீமையென்று
கழித்துவிடு
பொதுக் கடமை பெரிதாக
மதித்து வாழு!
உள்ளும் புறமும்
சுத்தம் தேடு
உண்மையே
உனை உயர்த்தும்
எண்ணிப்பாரு!

— அ.அரசரத்தினம்

## வாடும் மலர்

தென்றல் தழுவும் மலரில்
தேன் பொங்கி வழியும்
வழியும் தேனை குடிக்க
வண்டு பல்லை கடிக்கும்

தேனைக் குடிக்க வண்டு
கவிதை ஒன்று படிக்கும்
வண்டு வடித்த கவியில்
மலரின் உயிர் துடிக்கும்

வண்டைக்கண்ட மலரோ
வெட்கம்போல் நடிக்கும்
நடிக்கும் மலரின் இடையே
வண்டு மெல்ல இடிக்கும்

இடியை வாங்கிய மலரோ
காதல் என்று நினைக்கும்
இதழில் சிந்திய தேனை
இசையாய் வண்டுக்கு கொடுக்கும்

தேனை குடித்த வண்டோ
மெல்ல எழும்பிப் பறக்கும்
வண்டை நம்பிய மலரோ
நாளை வாடிக்கிடக்கும்

இ.யாதன், நல்லூர்.

## அதிர்ச்சிப் புயல்

திரும்பி பார்க்கிறேன்
தூரத்தில் கேட்ட வெடி ஓசை
என் காதை
ஒரு கணம்! திகைக்க வைத்தது
நடந்தது என்னவென
பக்கத்து வீட்டு பாலையாவை
வினாவ எடுத்த மறு கணம்!
தீச் சுவாலை கண்ணைக்
குருடாக்கிவிட்டது
செய்தி கேட்டால் புதினம் தெரியுமென
தம்பியின் சின்ன ரேடியோவை
சுழற்றினேன், ம்................
அங்கு நேரடி ஒலிபரப்பல்லவா?
உள் மனம் ஒரு கணம்!
நெகிழ்ந்து போனது
சுற்றும் சூழல்
எப்படி சத்தமில்லாமல்
செத்த பாம்பைப் போல்
படுத்துறங்கின?
நானும் அக் கணம்!
நித்திரைப் பாயைத் தட்டி விரித்து
என் கையிலிருந்த சுருட்டை
வாயிலே வைத்து
சுவாசத்தை உள் நோக்கி இழுக்கிறேன்!

முல்லையூர் ஜெயசிவா,
குருமண்காடு.

## கற்றவன் நீ

படிப்பானேன்?
படித்துப் பட்டம் பெறுவானேன்?
வேலையின்றித் தினம் தினம்
துடிப்பானேன்.
ஊனினை ஒறுத்து உணவினை வெறுத்து
தா... தா... எமக்கொரு
வேலை தாவென பிச்சை எடுப்பானேன்?
உரிமைக் குரல் எழுப்பினாயே!...
அவை வெறும் பேச்சிலா?
வாக்குறுதிகளை வாரி இறைத்தாரே!...
எங்கே அவையிப்போ காற்றிலா?
உரிமையை உரத்துக்கேட்ட — உன்
உணர்வுகள் இப்போ மூச்சில்லா
தீர்வுப் பொதியினைப் போல்.
பார் தம்பி ஆச்செல்லா?
கற்றவன் நீ
கல்லிலும் கனி செய்ய
நல்லறிவு பெற்றவன் நீ
காலம் வருமென நீ காக்காதே
காலம் உனைத் தேடும்
வீண் பொழுது போக்காதே
உள்ளத்தில் உவகை கொண்டு உழை
உலகம் உனைத் தேடும்
உன் காட்டில் பெய்யும் மழை!

— சிற்றுளி

## போராட்டம்

உன் இதழ்களில் நெளியும்
புன்னகை மலருக்காய்
என் இதய பூமி
ஏன் தவம் செய்கிறது?
வெண்ணிலவே
உன் வருகை இன்றேல்
என் வாழ்வெனும் ஆகாயம்
ஏன் வெறிச்சோடிக் கிடக்கிறது?

— காதல் வைரஸ்

## எதற்கேனும் வேண்டும் அவகாசம்!

புலரும் பொழுதுகளில்
மலரும் சமாதானம் '!'
அதிலும் நிச்சயமற்றதாய்
அலையும் மனசு!
எதற்கும் எழுது நீயும்
எனையே தழுவும் தென்றல்!

***

சொன்னது காற்று சேதி
சொத்துக்கள் அழிந்ததாய்....
எனினும், உன் சுகமறிய ஆவல்!
எனக்கென்றால் நீயே ஆவி!
காட்டுக்குள் நடந்திடும் போழ்து
கால்களில் வலியுமில்லை!

***

மனசெங்கும் மணமாய் வீசும்
மல்லிகைச் சரமாய் நீளும்!
பெண்மையை விரும்புகின்ற
போராட்ட வீரனானோ?
என்னதானிருந்தாலும் நான்
ஏங்கியே போனேன் மயிலே!

***

துப்பாக்கி ரவைகள் மாற்றும்!
துர்ப்பாக்கிய நிலையே போதும்!
தப்பாதென் குறியும் உன் மேல்
தப்பி நீ போக மாட்டாய்!
என்று தான் எண்ணுகின்றேன்!
என்றும் நான் பங்கருக்குள்!

***

உண்மையாய்ச் சொல்லுகின்றேன்!
உணர்வுகள் உறங்கவில்லை!
'வெண்புறா' பறக்கும் வானில்!
வேகமாய் வந்து சேர்ந்தால்
என்னையே தழுவி நிற்பாய்!
எதற்கேனும் வேண்டும் ''அவகாசம்!''

— ஸஹீனா ஸலாம், கிண்ணியா.

# சந்நிதிச் செல்வம் ஒரு சிறந்த கருவூலம்




வல்லை ந.அனந்தராஜ் எழுதிய சந்நிதிச் செல்வம் எனும் வரலாற்று ஆய்வு நூல் அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

செல்வச்சந்நிதியின் அமைவிடம், தோற்றம், பூசை முறைகள், சடங்குகள், பாரம்பரியங்கள் என அதன் அனைத்துப் பெருமைகளினதும் வரலாற்று ஆய்வாக சந்நிதிச் செல்வம் அமைந்துள்ளது.

கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்களின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அருமையான கவிதை வரிகளால் நெய்த பாவினைக் கொண்டு வந்தோரை வரவேற்றார் உதவிக்கல்விப் பணிப்பாளர் நெடுந்தீவு மகேஸ்.

இந்நிகழ்வுக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமை தாங்குவதாக இருந்த போதும் அவரால் சமுகமளிக்க முடியாமல் போனதால் எஸ்.தில்லைநடராஜா நிகழ்விற்கு தலைமை தாங்கினார்.

இவர் தனது தலைமையுரையில் ''எமது இளம் சந்ததியினரிடையே நூல்களை வாங்கி வாசிக்கும் பழக்கத்தை ஊக்கு விக்க வேண்டும்'' எனக் கூறினார்.



''வல்லை ந.அனந்தராஜை நான் சிறுவயதிலேயே இனம் கண்டு கொண்டேன். இவரது பணி தொடர வேண்டும்'' எனத் தனது சிஷ்யனின் நூலுக்கு ஆசியுரை வழங்கினார் ஓய்வு பெற்ற ஆசிரியர் கா.நீலகண்டன்.

கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்ற செயலாளர் க.நீலகண்டன் சிறப்புரை ஆற்றியபோது, ''ஆகம முறைகளில் இருந்து விடுபட்டு சாதாரண மக்களால் சந்நிதி கோயிலில் பூசைகள் மேற்கொள்ளப்படுகின்றன. – சந்நிதிக் கந்தன் பழைய கட்டுத் தேரில் திரு விழாக் காலங்களில் வீதியுலா வருவதும் – நாளாந்தம் அடியவர்கள் தம் கணக்கு வழக்குகளை சந்நிதி முருகனிடம் முறையிடுவதும்,

முருகனிடமே. ''ஏன் இப்படிச் செய்கிறாய்'' என்று பக்திப் பரவசப்பட்டு கேட்பதும் வார்த்தைகளுக்குள் அடக்க முடியாத சிறப்புக்கள்'' என்றார்.

நூல் வெளியீட்டின்போது உரையாற்றிய எஸ்.தில்லை நடராஜா, ''நூலாசிரியருக்கும் சந்நிதிக்குமான தொடர்பு மிக நெருக்கமானது. இவர் சிறு வயதில் இருந்தே ஆலயப் பணிகளில் அதிக சிரத்தையுடன் ஈடுபட்டவர். இதனாலேயே இவரால் சந்நிதியின் சிறப்புக்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி சந்நிதிச் செல்வ மாகத் தரமுடிந்தது'' என்றார்.

வெளியீட்டுரையை டாக்டர் எம்.கே.முருகானந்தனும் நய வுரையினை கிழக்குப் பல் கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி செ.யோக ராஜாவும் நிகழ்த்தினர்.

இவர்களுடன் கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவர் கலாநிதி அம்மன் கிளி முருகதாசும் நூலினை விதந்துரைத்தார்.

— கருடன்

## நூல் நயம் காணப்பட்ட சிவசேகரத்தின் 'விமர்சனம்'

பேராசிரியர் சி.சிவசேகரத்தின் 'விமர்சனம்' என்னும் நூல் அண்மையில் வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஈழத்து எழுத்தாளர்களையும், நூல்களையும் அறிமுகம் செய்து ஊக்குவிக்கும் முகமாக 'நூல் நயம் காண்போம்' நிகழ்வை நடத்தி வருகின்றது.

இந் நிகழ்வில் 'விமர்சனம்' நூல் நயம் காணப்பட்டுக் கருத்துரைகள் நிகழ்த்தப்பட்டன. விமர்சனப் பணியில் முன்னணியில் நிற்கும் வெகு சிலரில் சி.சிவசேகரமும் ஒருவர். அவரது விமர்சனங்களில் நாம் பல படைப்பாளர்களின் படைப்புக்களைப் படிக்கலாம், விவாதிக்கலாம்.

இந்நூல்நய நிகழ்வுக்குத் தலைமை வகித்த பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி உப அதிபர் ரி.இராஜரத்தினம், ''குற்றங்களையும் குறைகளையும் நடுநிலை நின்று நோக்கும் பண்பு விமர்சகர்களுக்குத் தேவை. ஆக்கங்களை இனம் காணும் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், விமர்சனம் செய்பவர் பரந்த அறிவுடையவராகவும் இருக்க வேண்டும். ஆக்கியவர் எவ்வாறு வாசகர்களுக்குப் புரிய வைக்கின்றார் என்பதை விமர்சகர் தெரிவிக்க வேண்டும்'' என்று கூறினார்.

'மூன்றாவது மனிதன்' ஆசிரியர் எம்.பௌஸர் 'விமர்சனம்' பற்றி உரை நிகழ்த்துகையில், ''விமர்சனம் மூலம் ஒரு வித்தியாசமான பார்வையை வெளிப்படுத்த முடியும். காலத்தையும், விமர்சனம் செய்பவரின் அரசியலையும் புறக்கணித்துவிட்டு விமர்சனத்தைப் படிக்க முடியாது. ஈழத்து விமர்சகர் மரபில் கைலாசபதி, சிவத்தம்பி, ஏ.ஜே.கனகரட்ணா என்போர் வரிசையில் சிவசேகரமும் ஒருவராவார்'' என்றார்.

# முற்றத்து நிலவினிலே...

சக்தி எப்.எம்.மில் புதிய சஞ்சிகை நிகழ்ச்சி ஒன்று சமீபத்தில் இடம்பெற்றது. ''முற்றத்து நிலவினிலே...'' என்று பெயரிடப்பட்ட இந்த நிகழ்ச்சி, பௌர்ணமி இரவு சிறப்பு நேரடி நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகியது. பௌர்ணமி தினங்களில் இரவு 8.30 மணி முதல் 10.00 மணி வரை இந்நிகழ்ச்சி ஒலிபரப்பாகவுள்ளது.

பரீட்சார்த்த முயற்சியாக இடம் பெற்ற ''முற்றத்து நிலவினிலே...'' நிகழ்ச்சியில் நம் நாட்டுக் கலைஞர் கருப்பையாபிள்ளை பிரபாகரனின் 'நிலாக்ஸ்' இசைத் தொகுப்பு பற்றிய அறிமுகமும் இடம்பெற்றது.

## சக்தியின் ஜாலி நிகழ்ச்சி

அவர் இசையமைத்திருந்த பாடல்களை நம்நாட்டுப் பிரபல பாடகர்கள் பாடியிருந்தார்கள். இளம் கவிஞர் சிவகுமார் எழுதியிருந்த உயிரோட்டமான கவிதை வரிகளைத் தனது இசையமைப்புச் சிதைத்து விடாமல், மெட்டமைத்து, இசைவடிவம் கொடுத்திருந்தார் கருப்பையாபிள்ளை பிரபாகரன்.

'நிலாக்ஸ்' இசைத்தொகுப்பை வெளிக்கொணர்வதற்குத் தான் எதிர்கொண்ட சவால்கள், தடைகளைப் பற்றியும், அவற்றை நண்பர்களின் பக்கபலத்துடன் எவ்வாறு வெற்றி கொண்டார் என்பது பற்றியும் விளக்கினார்.

இசைத்தொகுப்புக்களை வெளியிட முனைந்து கொண்டிருக்கும் இளம் இசையமைப் பாளர்களுக்கு இக்கருத்துக்கள் நிச்சயம் பயனளித்திருக்கும்.

இது தவிர நம் நாட்டுக் கலைஞர்களான நிலுக்ஷி ஜெயவீரசிங்கம், ராஜ் பிரதாபன் ஆகியோர் பங்குகொண்ட நேரடி இசை நிகழ்ச்சி காற்றலைகளில் தவழ்ந்து நேயர்களை மகிழ்வித்தது.

சக்தி எப்.எம்.மின் பணிப்பாளர் எஸ்.எழில்வேந்தனின் வேண்டுகோளுக்கிணங்க மிகக் குறைவான வாத்தியங்களே நிகழ்ச்சியில் இசைக்கப்பட்டன.

இசையினால் மூழ்கடிக்கப்படாத பாடல்வரிகள் முழு நிலா நாள் இரவுப் பொழுதில் தேனாக இனித்தன. அமைதியான திரை இசைப்பாடல்களும் நம் நாட்டுப் பாடல்களும் இணைந்து – இசைந்து – கைகோத்து வந்து கேட்டவர் நெஞ்சங்களைக் குளிர்வித்தன.

இசை நிகழ்ச்சியினிடையே எழுத்தாளர்கள் சிலரது புதிய வெளியீடுகளும் அறிமுகம் செய்யப்பட்டன. மொத்த நிகழ்ச்சிக்கான நேரம் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் நூல்கள் ஆய்வு செய்யப்படாமல் மேலோட்டமாக அறிமுகம் மட்டுமே செய்யப்பட்டன. நூல்களின் பெயர், எழுத்தாளர், பிரசுரகர்த்தா போன்ற விவரங்களை நூல் அறிமுக நிகழ்ச்சியினூடாக அறிந்து கொள்ள முடிந்தது.

நேயர்கள் சிலரும் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு தமது வாழ்வில் மறக்க இயலாத பௌர்ணமி நாள் நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டார்கள். ஒவ்வொரு நேயரினதும் வித்தியாசமான அனுபவங்கள் இந்நிகழ்ச்சிக்குச் சுவை ஊட்டுவனவாக அமைந்தன.

சக்தியின் அறிவிப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டு இந்த ஒன்றரை மணிநேர நிகழ்ச்சியைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்கள். இசைப்பதிவுக் கூடத்துக்கும், ஒலிபரப்புக் கலையகத்திற்குமாக மாறி மாறி இணைப்பை ஏற்படுத்தி நிகழ்ச்சியை ஒலிபரப்பிய விதம் வெளிக்கள நிகழ்வுகளை நேரடியாகத் தொகுத்து வழங்கும் உணர்வை ஏற்படுத்தியது.

இனிவரும் காலங்களில் ''முற்றத்து நிலவினிலே...'' நிகழ்ச்சி மேலும் பல சுவையான அம்சங்களைத் தாங்கிவர வேண்டும்.

— செவியின்பன்

## கறுப்பு ஜூலையில் நடந்தது இனக்கலவரம்தானா என்று சர்ச்சை

ஜூலை இனக்கலவரம் நாட்டிலே வன்முறைக் கலாசாரத்தை உருவாக்கியது. வன்முறைக் கலாசாரம் துப்பாக்கிக் கலாசாரத்தைத் தோற்றுவித்தது. துப்பாக்கிக் கலாசாரம் பழிக்குப்பழி வன்செயல் நடவடிக்கைகளுக்குக் களம் அமைத்தது.

''கறுப்பு ஜூலை ஈழத்துப் பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம்'' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் மேற்கண்டவாறு கூறினார் கலாநிதி செல்வி திருச்சந்திரன். அவரே கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினார். வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் கருத்தரங்கு நடந்தது.

கருத்தரங்கில் பேசிய சோ. தேவராஜா கறுப்பு ஜூலை என்று சொல்லப்படும் 1983 ஜூலையில் நடந்ததை இனக் கலவரம் என்று ஒப்புக் கொள்ளவில்லை. இனக்கலவரம் என்றால் இனங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டனவா? இல்லையே. ஆட்சியில் இருந்த அரசியல் தலைவர்களில் சிலர் காடையர்களையும் குண்டர்களையும் ஏவி விட்டு வரலாறு காணாத வகையில் தாக்குதல் சம்பவங்கள் நடக்க வைத்தார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதும் நடந்தது மனிதாபிமானமற்ற மிலேச்சத்தனமான செயல் என்பதும் தான் உண்மை.

இப்படிச் சோ.தேவராசா கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; அந்நாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன, மற்றும் தேசிய பாதுகாப்பு பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் சூட்டோடு சூடாக ஆற்றிய உரைகளும் கருணைக் கடலான புத்தர் பெருமானைச் சேவிக்கும் பௌத்த பிக்குகள் இட்ட தூபமும் வன் செயல்களைக் கொழுந்து விட்டு எரியச் செய்தன என்றார்.

இந்த வன்செயல்களால் தமிழர்கள் அகதிகளாகிப் புலம்பெயர்ந்த நிலைமையையும் தேவராஜா குறிப்பிட்டு இவற்றால் எல்லாம் ஈழத்துப் பண்பாட்டில் பெரும் தாக்கம் ஏற்பட்டது என்று கவலை தெரிவித்தார்.

''யாழ்ப்பாணம் அழுகிறது'' என்ற நூலின் ஆசிரியர் எஸ்.ஜி.புஞ்சிஹேவா கருத்தரங்கில் பேசுகையில்; 1983 ஜூலையில் தமிழர்கள் கொல்லப்பட்ட போதும் அவர்களின் உடைமைகள் எரிக்கப்பட்டபோதும் பாதுகாப்புப் படையினர் அவற்றைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்து ரசித்துக்கொண்டிருந்தனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டபோதும் தாக்கப்பட்ட போதும் கூட பாதுகாப்புப் படையினரோ பொலிஸாரோ சிறை அதிகாரிகளோ தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல் சும்மா பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிரான இந்த அட்டூழியங்கள் சிங்கள மக்களால் என்றைக்குமே நியாயப்படுத்த முடியாதவை என்றாலும் சாதாரண சிங்கள மக்கள் இன்று சிறுபான்மை மக்களான தமிழர்களுக்கு எதிரான இந்தக் கொடுமைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றே விரும்புகிறார்கள் என்றார் புஞ்சி ஹேவா.

ரீ.கைலாயர், க.தேவதாசன், ஈழவேந்தன் முதலானோர் சில கேள்விகளைக் கேட்கவே கருத்தரங்கு கலகலப்பாகக் களை கட்டியது.

1983 ஜூலையில் திட்டமிட்டுத் தமிழர்களுக்கு எதிராகச் சிங்களவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வன் செயல்களில் ஈடுபட்டார்கள். இது சிறுபான்மையினருக்கு எதிராகப் பெரும்பான்மையினர் நடத்திய இன ஒழிப்பு நாசகாரச் செயல். இதை இனக் கலவரம் என்று சொல்வதே சரி என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டன. தமிழ் மக்களின் கலாசாரத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகளும் சுட்டிக் காட்டப்பட்டன.

## கலையமுதம்

# அண்மைக் கால அறுவடைகள்

''அண்மைக்கால அறுவடைகள்'' என்ற தலைப்பில் ஆ.இரத்தினவேலோன் எழுதிய திறனாய்வு நூல் அண்மையில் வெளிவந்துள்ளது. தொண்ணூறுகளில் வெளிவந்த ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள் இருபதின் மீதான விமர்சனக் கண்ணோட்டமே இந்நூல் என்கிறார் நூலாசிரியர்.

தொண்ணூறுகளிலும், இந் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வெளிவந்த சிறு கதைகளின் ஆய்வு என்பதால் இந் நூலுக்கு ''அண்மைக்கால அறுவடைகள்'' என்று தலைப்பிட்டுள்ளார். வாசகர்களால் விரும்பிப் படிக்கத்தக்கதாக இந்நூலின் உள்ளடக்கம் விளங்குகின்றது.

பல ஆண்டுகள் கடந்த நிலையில் எம் வழித் தோன்றல்கள் இந்நூலைப் படிக்கின்ற போது ''அண்மைக்கால அறுவடைகள்'' என்ற தலைப்பு குழப்பத்தை ஏற்படுத்தக் கூடும். பல ஆண்டுகள் உருண்டோடிய நிலையில் இந்நூல் படிக்கப்படுகின்ற போது அண்மைக் காலம் என்ற தலைப்பு பொருள் இழந்ததாகவே கொள்ளப்படும்.

இந்நூலுக்கு ஆசியுரையை மண்டூர் அசோகாவும், அணிந்துரையைக் கோகிலா மகேந்திரனும் 14 பக்கங்கள் கொண்ட நீண்ட முன்னுரையை டாக்டர் எம்.கே. முருகானந்தமும் தந்துள்ளனர்.

அணிந்துரை வழங்கிய கோகிலா மகேந்திரன் இரத்தின வேலோனின் சிறுகதைகளின் சிறப்பையும் திறனாய்வின் திறனையும் வெளியீட்டுத் துறையில் இவரது ஆர்வத்தையும் பாராட்டி உள்ளார்.

இந்நூலாசிரியர் பற்றித் தனது முன்னுரையில் டாக்டர் முருகானந்தம், ''உதிரத்து தமிழ் உணர்வும், உள்ளம் நிறைய இலக்கிய வேட்கையும் கொண்ட இவர் தொழிலால் கணக்குத் துறையோடு இணைய நேர்ந்தது. கணக்கோடு மாரடித்தாலும் இவர் இரசனை உணர்வு மரத்துப் போய்விடவில்லை'' என்று கூறுகிறார்.

இந்நூலில் நூலாசிரியரின் தமிழ் மண் பற்று தலை தூக்கி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இனக் கலவரத்தினால் இன்னலுறும் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வை நெஞ்சைத் தொடும் முறையில் திறனாய்வு செய்திருக்கிறார்.

''அண்மைகால அறுவடைகள்'' என்ற தலைப்பில் அழகான அட்டையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நூல் ஏறக்குறைய 120 பக்கங்களைக் கொண்டுள்ளது. அச்சேற்றிய பாங்கிலும் கவர்ச்சி உண்டு. நூலின் விலை 150ரூபா இரத்தின வேலோனின் ''அண்மைக் கால அறுவடைகள்'' என்ற நூல் சிந்தனைக்கு விருந்தளிக்கும் நூலாக விளங்குகிறது. காலத்தின் கருத்தோட்ட வளர்ச்சிக்கு ஏற்ப தமிழுக்கு கிடைத்த வரவாக இதனை நாம் கொள்ளலாம்.

— ஈழவேந்தன்







## எனக்குத் தெரிந்த பாரதி

இந்தியா பல நூற்றாண்டுகளாக அந்நியரின் ஆட்சியில் அடிமைத்தளையில் கட்டுண்டு இருந்த காலகட்டத்திலே சின்னச்சாமி ஐயருக்கும் லக்ஷ்மி அம்மாளுக்கும் அருந்தவப் புதல்வனாகவும், அடிமை வாழ்விலே மனம் தோய்ந்து பழகிவிட்ட தமிழ் மக்களைத் தட்டியெழுப்பி, சுதந்திர ஆர்வத்தை ஊட்டி, தமிழ்ப்பற்றை ஊட்டிவிடவும் வரகவி சுப்பிரமணிய பாரதியார் தோன்றினார்.

பாரதி ஐந்து வயதிலே தாயை இழந்து தந்தையின் அரவணைப்பிலேயே வளர்ந்து வந்தார். சிறு வயதிலே கல்வியில் சிறந்து விளங்கினார். எனினும் பள்ளிப் படிப்பில் பாரதிக்குப் பற்று இல்லை. இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிப்பதிலேயே பொழுதைப் போக்கினார். கற்பனா சக்தி இருந்ததனால் பாரதி இளமையிலே கவிதை பாடத் தொடங்கினார். பதினான்கு வயதிலே செல்லம்மாள் என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். பின்பு தந்தையாரையும் இழந்தார் பாரதி. இதனால் பாரதியார் கல்விக்கு தடை உண்டாயிற்று. எனினும் சளைக்காத பாரதி தனது அத்தையின் உதவியுடன் சர்வகலாசாலையில் உயர் கல்வி கற்று ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகியவற்றில் சித்தியடைந்தார்.

பின்பு சென்னைக்குச் சென்ற பாரதி 'சுதேச மித்திரன்' என்னும் தமிழ்ப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்பு சுயமாக 'இந்தியா' என்ற பத்திரிகையை நடத்தலானார். பாரதியார் தமது பாடல்களாலும், கட்டுரைகளாலும் மக்களைத் தட்டி எழுப்பினார். வளர்க பாரதி புகழ்!

இ .செந்தூரன்,
தரம் — 11,
யாழ்ப்பாணக்கல்லூரி.

## இலங்கையின்....

* தேசிய மலர்:— நீல அல்லி
* தேசிய மரம்:— நாகா
* தேசிய பறவை:— காட்டுக்கோழி
* தேசிய மிருகம்:— யானை

இ.ஜீவனா,யா/இந்து மகளிர் கல்லூரி.

## சிரிப்பு!

வெள்ளைக்காரன் ஒருவன் தமிழ் இளைஞன் ஒருவனைச் சந்தித்தான். அப்போது,

வெள்ளைக்காரன்:— எங்கட ரோட்டில சோறு போட்டுச் சாப்பிடலாம்.

தமிழன்:— எங்கட ரோட்டில சோறோட சொதியும் விட்டுச் சாப்பிடலாம். ஏன் என்றால் எங்கட ரோட்டுல பள்ளங்களும் உண்டு.

ச.பிரதீபன்,தரம் — 9[A], அக்கராயன் ம/வி,கிளிநொச்சி.



ஷர்மிலா

## விளையாட்டுப்போட்டி



பலாங்கொடை ஒக்ஸ்போர்ட் சர்வதேச பாடசாலையின் விளையாட்டுப் போட்டியின் போது மழலைகள் முயலோட்டம் ஓடுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: இரத்தினபுரி மாவட்ட செய்தியாளர்)

## றோசாப்பூ

வண்ண வண்ண றோசாப்பூ
வடிவு தரும் றோசாப்பூ
சின்னச் சின்ன றோசாப்பூ
கொத்துக் கொத்து றோசாப்பூ

பூக்களிலே சிறந்த றோசாப்பூ
பூக்கும் நல்ல றோசாப்பூ
பற்பல நிற றோசாப்பூ,
மங்கையருக்குப்பிடித்தறோசாப்பூ

பூத்துக் குலுங்கும் றோசாப்பூ
வடிவழகு றோசாப்பூ
எமக்குப் பிடித்த றோசாப்பூ
என்றுமுள்ள றோசாப்பூ.



கு. ருத்திரநாத்,
தரம் — 8,
யா/இந்துக் கல்லூரி.

## வாழிய தமிழ்மொழி!

நாம் தமிழர். நமது தாய் மொழி தமிழ். அது தேனினும் இனியது. இதனால்தான் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாரதியாரும், ''தமிழுக்கு அமுதென்று பேர் அந்த தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்று பாரதிதாசனும் பாடியுள்ளார்கள். உலகில் உயிருக்கு மேலானது எதுவுமே இல்லை. அந்த உயிரினும் மேலானது தமிழ் என்னும்போது நாம் மிக்க பெருமையடைகிறோம்.

உலகின் பொய்யாமொழிப் புலவர் என்று போற்றப்படும் திருவள்ளுவர் பாடிய திருக்குறளும் தமிழே. கம்பன், காளிதாசன், இளங்கோ பாடிய காவியங்களும் தமிழே. மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அரும்பாடு பட்டு வளர்த்ததும் தமிழையே. சிறியோர் முதல் பெரியோர் வரைக்கும் அறிவுரை கூறிய ஒளவையார் பாடியதும் தமிழ் மொழியிலேயே. எமது நாயன்மார் பாடிய தேவார திருவாசகங்களும் தமிழே. எம் நாட்டுப் பெரியார்கள் ஆறுமுக நாவலர், சோமசுந்தரப் புலவர், விபுலானந்தர் போன்றோர் போற்றி வளர்த்ததும் தமிழே. நாமும் தமிழைக் கற்று மகிழ்வோம். தமிழ் வாழ்க, வளர்க என வாழ்த்தி நிற்போம்.

வி.விஜயசுமன்,
யா/ இந்துக்கல்லூரி.

## சிறுவர் கைவண்ணம்



எஸ்.எஸ். ராஜ்குமார்
ஆண்டு — 10
யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை



ஜெ.சங்கீதா
தரம்—9
பாண்டியன் குளம் ம.வி

## நான் ஒரு ஆசிரியரானால்...!

இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள். இந்தக் குழந்தைகள் மேல் அன்பைச் சொரிந்து அறிவைப் புகட்டி பக்குவப்படுத்தி பாரிய சுமைகளை சுமக்கக்கூடிய தலைவர்களாக மாற்றுவது ஆசிரியனே.

எதற்கும் அத்திபாரம் கல்வி. கல்வி கற்ற பின்னரே அரசனாகவோ, அமைச்சனாகவோ, அதிகாரியாகவோ, வைத்தியனாகவோ வருவார்கள். எத்தொழிலுக்கும் அத்திபாரம் இடுபவர்களே ஆசிரியர்கள்.

நானும் ஒரு ஆசிரியனானால் பிள்ளைகளுக்கு அன்பு வார்த்தைகள் கூறி அரவணைப்பேன். விகடப்பேச்சின் மூலமாகவும், விநோதக் கதைகள் மூலமாகவும் அறிவை விருத்தியடையச் செய்வேன். சுவாரஸ்யமாகக் கல்வியைப் புகட்டுவேன். மாணவர்கள் ஆசிரியர்களை தெய்வமெனப் போற்றப் பழக்குவேன். கல்வி என்பது கசப்பானதல்ல, இனிப்பானது என்பதை விளக்குவேன்.

கல்வியினால் வரும் இன்பத்தை எடுத்துச் சொல்வேன். எல்லாச் செல்வத்திலும் கல்விச் செல்வம் சிறந்தது என்பதை விளக்குவேன். கல்விச் செல்வம் எக்காரணிகளாலும் அழியாது என்பதை விளக்குவேன்.

சு.தர்சன்,
தரம் — 7[A],
கிளி/ ஐயனார்புரம் அ.த.க பாடசாலை.

## கம்பியூட்டரில் ஸ்பைடர் மேன்!



* ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு — காளைச் சண்டை.
* உலகிலேயே அதிகமாகக் கிடைக்கும் உலோகம் — அலுமினியம்.

''ஸ்பைடர் மேன்'' என அழைக்கப்படும் இயந்திர மனிதன் ஆண்டாண்டு காலமாக ''கார்ட்டூன்'' கதைகளில் வரும் ஒரு வீரமான பாத்திரம்.

இந்த ''ஸ்பைடர் மேன்'' இப்போது இந்த நவீன கம்பியூட்டர் யுகத்தில் ஒரு கம்பியூட்டர் பாத்திரமாகவும் மாறிவிட்டது.

கம்பியூட்டர் விளையாட்டு என்றால் சிறுவர்கள் நேரம் போனது தெரியாமல் அதில் மூழ்கி விடுவார்கள். ''சொனி'' நிறுவனம் தயாரித்துள்ள புதிய கம்பியூட்டர் விளையாட்டில் ''ஸ்பைடர் மேன்'' வந்து அசத்துகிறார். சிறுவர்கள் தாம் விரும்பியவாறெல்லாம் ஸ்பைடர் மேனை ஆட்டிப் படைக்க இந்த விளையாட்டில் வழி இருக்கிறது.

* பேரீச்சம்பழம் — 'பாலைவன ரொட்டி' என்றும் அழைக்கப்படுகிறது.
* டென்மார்க் நாட்டின் தேசியப்பறவை — வானம்பாடி.
* ராய்ட்டர் என்ற செய்தி ஸ்தாபனத்தை உருவாக்கியவர் — பரோன்பால் ஜூலியஸ்வான் ராய்ட்டர்.

## உங்களுக்குத்தெரியுமா?

* கடல் நீர் உப்புச் சுவையுடையது. இதற்குக் காரணம் இதில் அடங்கியுள்ள மூலகங்களே — இது நீங்கள் அறிந்த விஷயம். ஆனால் உலகிலுள்ள கடல்களிலேயே பால்டிக் கடல்தான் குறைந்தளவு உப்புச் சுவையுடையது என்பது உங்களுக்குத் தெரியுமா?
* அருங்காட்சியகத்தை ரயிலில் அமைத்துள்ள நாடு — கனடா.
* 'முட்டாள்த்தங்கம்' என்று கூறப்படும் தாதுப்பொருள் இரும்பு பெரைட். தங்கத்தை அகழ்ந்து எடுக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்கம் போலவே மின்னும் இரும்பு பெரைட்டினைக் கண்டு தங்கம் என்று எண்ணி ஏமாந்து விடுகிறார்கள்.



## நெப்டியூன்



சூரியனிலிருந்து தொலைவிலுள்ள கோள். டெலஸ்கோப்பினால் பார்க்க முடியாது. 49,500 கிலோ மீற்றர் பருமன் கொண்டது.

தன்னைத்தானே சுற்றுவதற்கு 16 மணித்தியாலங்களும் சூரியனைச் சுற்றி வருவதற்கு 165 புவி வருடங்களும் எடுக்கின்றன.

ஐதரசன், ஈலியம் போன்ற வாயுக்களினாலான வாயுப்பந்து என்று நெப்டியூனைக் கருதினாலும் இதன் மத்தியில் இரும்புப் பாறைகளும் உள்ளன. இவற்றைச் சூழ மெதேன் வாயுவினாலான முகில்கள் உள்ளன.

உரோமானியர் காலத்தில் நெப்டியூன் கடலின் கடவுளாகக் கருதப்பட்டது.

# கண்ணியம் மிக்க தொழிலை களங்கப்படுத்தும் கனவான்கள்

## அவமானச் சின்னங்களாக இன்று மலையகத்தில் ஒரு கும்பல்

மலையகத்தில் கேவலமாக நடந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு அரசியல் வாதிகள் அடைக்கலம் கொடுக்கக் கூடாது. கல்வி பயில வரும் மாணவியரின் கற்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஆசிரியர்களை இனம் கண்டு தண்டிக்க வேண்டும். சமுதாயத்தில் இருந்தே அவர்களைத் தூக்கி எறிய வேண்டும்.

வடக்கு – கிழக்கில் படையினரும், கொழும்பில் பொலிஸாரும் பிற இடங்களில் காடையர்களும் நடந்து கொள்வது போல் இன்று மலையகத்தில் சில ஆசிரியர்களும் நடந்து கொள்கின்றனர். இது வேதனைக்குரியது. வெட்கப்படக் கூடியது.

கடந்த சில வாரங்களாக மலையகத்தில் மாணவிகள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பல மட்டத்தினரும் இப்படியான சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

இவர்கள் தமது பதவியையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி அப்பாவி மாணவிகளை தமது இச்சைக்கு இரை யாக்கிக் கொள்கின்றனர்.

கண்டிப் பிரதேசத்தில் கல்வி அதிகாரி ஒருவரின் மனைவியிடம் பாடம் கேட்கச் சென்ற பருவமடையாத மாணவியை அந்த அதிகாரி நாசப்படுத்தி உள்ளார்.

ஆத்திரம் கொண்ட ஊர் மக்கள் அவரையும் தாக்கி, வீட்டையும் நொருக்கி அவரை ஊரைவிட்டே விரட்டி விட்டனர். தொழிலும் போய் மரியாதையும் கெட்டு, வெட்கித் தலை குனிந்து அவர் மறைந்து வாழ்கிறார்.

பொகவந்தலாவையில் ஒரு பாடசாலை, நோர்வூட்டில் ஒரு பாடசாலை, கொட்டகலையில் இரண்டு பாடசாலைகள், பசறையில் ஒரு பாடசாலை, புசல்லாவையில் ஒரு பாடசாலை எனப் பல பாடசாலை களில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இவை வெளியில் தெரிந்தவை. வெட்கத்தினாலும் தமது எதிர்காலம் பாதிக்கப் பட்டு விடுமோ என்ற அச்சத்தினாலும் மூடிமறைக்கப்பட்ட சம்பவங்கள் பல.

மாணவிகள் மட்டும்தான் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்றில்லை. சில ஆசிரியைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வசதியான பாடசாலைக்கு இடமாற்றம் பெறவும், தமது பிள்ளைகளை உயர்தர பாடசாலைகளில் சேர்க்கவும் உயர் அதிகாரிகளின் உதவியை இந்த ஆசிரியைகள் நாடுகின்றனர்.

அதிகாரிகளோ கைமாறாகத் தம்மை சந்தோஷப்படுத்தும்படி கேட்கின்றனர். உடன்பட்டால் சரி. உடன்படாவிட்டால் பழி வாங்கல் தான்.

சமீபத்தில் ஓர் ஆசிரியைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. கல்வி அதிகாரிக்கு சந்தோஷம் கிடைக்கவில்லை. இரண்டே வாரத்தில் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது. அந்த ஆசிரியை பழைய பாடசாலைக்கே திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றார்.

மற்றொரு சம்பவத்தில் உயரதிகாரி ஒருவர் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது பெரும்பான்மை இன மாணவி ஒருவரிடம் முறைகேடாக நடந்து கொண்டாராம்.

அதனை சகித்துக் கொண்டிருந்த அந்த மாணவி வீட்டுக்குப் போய் நடந்ததை தந்தையிடம் கூறினார்.

அப்பொழுது மதுபோதையில் இருந்த தந்தை சம்பந்தப்பட்ட அதிகாரியைத் தேடிச் சென்று அவர் கும்பிடக் கும்பிட விசேட பூஜை நடத்தினாராம்.

இந்த அதிகாரி இப்போது ஊர் பக்கமே தலை வைத்துப்படுப்பதில்லை. தனது வாகனம் உடைந்து போனாலும் நடந்து போவாரேயன்றி பஸ்ஸில் ஏறவே மாட்டார்.

தாம் தோட்டவேலை செய்தாலும் தமது பிள்ளைகளையாவது படிப்பிக்க வேண்டும், தமது பிள்ளைகள் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடனேயே பலரும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர்.

நாள் கூலிக்கு வேலை செய்யும் இவர்கள் அரைப் பட்டினியும் கால்பட்டினியுமாகக் கிடந்து பிள்ளைகளின் படிப்புக்குப் பணம் செலவிடுகின்றனர்.

பாடசாலை வசதிக்கட்டணம், ரியூசன் கட்டணம், விளையாட்டுப் போட்டி, மாணவர் மன்றம், இலக்கிய விழா, கட்டடநிதி என பலவழிகளிலும் வசூலிக்கப்படும் பணத்தையும் இவர்கள் தவறாமல் செலுத்துகின்றனர்.

பெற்றோரின் கஷ்டத்தை உணர்ந்து பிள்ளைகளும் படிக்கின்றனர். பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்காக தமது பிள்ளைகளை பின்னேர வகுப்புகளுக்கு பெற்றோர் அனுப்புகின்றனர்.

பாடசாலை முடிந்தவுடன் வீட்டுக்குச் செல்லாமல் வயிற்றுப் பசியுடன் இந்தப் பிள்ளைகள் இருந்து படிக்கின்றனர். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருப்போர் தமது உடற்பசிக்கு இவர்களை இரையாக்கி விடுகின்றனர். துணிச்சலாக கன்னத்தில் அறைந்தவர்களும் இருக்கின்றனர். நிலைமை எல்லை மீறியதால் பொலிஸ் நிலையம் வரை சென்றவர்களும் உண்டு.

கடவுளுக்கு அடுத்த படியில் வைத்து மதிக்கப்படுபவர்கள் ஆசிரியர்கள். எல்லோராலும் மதித்து கௌரவிக்கப்படும் ஒரு தொழில் ஆசிரியர் தொழில். கண்ணிய மிக்க இப்பணியை களங்கப்படுத்தும் வகையில் சில ஆசிரியர்கள் கேவலமாக நடந்து கொள்கின்றனர்.

விஷயம் வெளிப்பட்டதும், இந்த ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாணவியின் மீது அபாண்டமான கட்டுக் கதைகளை பரப்பி விடுகின்றனர். அநாமதேய அச்சுறுத்தல்களை விடுக்கின்றனர். அதோடு நின்று விடுவதில்லை. அரசியல்வாதிகளின் உதவியை நாடி முறைப்பாடுகளை அப்படியே அமுக்கி விட முனைகின்றனர்.

மலையகத்தில் அவமானச் சின்னங்களான இந்தச் சிறு கும்பலினால் முழு ஆசிரியர் வர்க்கமுமே தலைகுனியும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த சமூகத் துரோகிகளுக்கு அரசியல்வாதிகள் அடைக்கலம் அளிக்கக் கூடாது. இவர்களை இனம் கண்டு தூக்கி எறிய வேண்டும். பாரபட்சமின்றி கடுமையான தண்டனை வழங்க வேண்டும். இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை மற்றவர்களுக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

# சேமநலத் திட்டம் நடைமுறை தாமதம்

## கம்பனிகளுக்கு ஆறுமுகம் எச்சரிக்கை

தோட்டத் தொழிலாளர்களின் சேமநலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முட்டுக் கட்டையாக இருக்கும் தோட்டக் கம்பெனிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி கால் நடை அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்புகள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"இ.தொ.கா.வின் நீண்டகாலப் போராட்டத்தின் பயனாகவே தோட்டத் தொழிலாளர்களுக்கு சுய வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஒன்றரை லட்சம் வீடுகளை உருவாக்கும் திட்டம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென 60 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வருட இறுதிக்குள் இரண்டாயிரம் வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டும்.

ஆனால் தற்பொழுது தோட்டங்களை, நிர்வகிக்கும் தோட்டக் கம்பெனிகள் வீடமைப்புக்குப் பொருத்தமான காணிகளை வழங்குவதில் வீண் தாமதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

நிர்வாகப் பொறுப்புகள் மட்டுமே கம்பெனிகளுக்கு உரித்துடையவை. தோட்டக் காணிகள் அரசாங்கத்துக்கே சொந்தமானவை. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தோட்டங்கள் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதை தோட்டக் கம்பெனிகள் மறந்து விடக் கூடாது.

தொழில் உறவுகள் கட்டளைச் சட்டத்தின் படி கணவன் மனைவியுடன் 12 வயதுக்கு உட்பட்ட இரண்டு பிள்ளைகள் உள்ள ஒரு



அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பொகவந்தலாவையில் சமூக அபிவிருத்தி நிலையம் ஒன்றைத் திரைநீக்கம் செய்து திறந்து வைக்கிறார்.

குடும்பத்துக்குத் தனியான ஒரு வீடு வழங்க வேண்டும்.

இதனைத் தோட்ட உரிமையாளர்களும் செய்யவில்லை. அரசாங்கமும் செய்யவில்லை. தோட்டத் தொழிலாளர் களின், நலன்புரித் திட்டங்களுக்கும், வீடமைப்பு சேமநலத் திட்டங்களுக்கும் தோட்டக் கம்பெனிகள் காணிகளை வழங்கி முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப் பட்டது. ஆனால் இப்பொழுது தோட்டக் கம்பெனிகளின் போக்கு வரவேற்கத் தக்கதாக இல்லை.

எனவே தோட்டக் கம்பெனிகள் தொழிலாளர்களின் வீடமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான காணிகளை உடன் வழங்க வேண்டும். இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் தோட்ட உற்பத்தி சீராக நடைபெறுவதற்குத் தோட்டத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது.

வீடு இல்லையென்றால் வேலையும் வேண்டாம் என்ற நிர்ப்பந்தத்திற்குத் தோட்டத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் தோட்டத்துறையில் ஏற்படும் பாதிப்புகளுக்கு தோட்டக் கம்பெனிகளே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்."

இப்படி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மேலும் கூறினார்.

### மலையகக் கண்ணோட்டம்

இரா.புத்திரசிகாமணி

# மண்டிக்கிடக்கும் ஊழல்கள் தினமும் குவியும் முறைப்பாடுகள்

## கோயில் நிர்வாகம் குறித்து திணைக்களம் விசாரணை

மலையகக் கோயில்களில் மண்டிக் கிடக்கும் ஊழல்கள், நிர்வாகச் சீர்கேடுகள், கையாடல்கள் தொடர்பான முறைப்பாடுகள் தினமும் வந்து குவிகின்றன.

கோயில்களை வருமானம் தேடித் தரும் ஒரு நிறுவனமாக மாற்ற சிலர் முனைகின்றனர். கோயிலின் புனிதம் கெடக் கூடாது. நீதியான நிர்வாகம் தேவை என்று வாதிடுகின்றனர் பலர்.

இப்படியான முறைப்பாடுகள் தொடர்பாக இந்து கலாசாரத் திணைக்களம் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றது.

இதனை திணைக்கள உயரதிகாரி ஒருவரே 'சுடர்ஒளி'க்குத் தெரிவித்தார்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கு அமைய, இன்று மலையகத்தில் கோயில்கள் இல்லாத தோட்டங்களே இல்லை. பல தோட்டங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட கோயில்கள் இருக்கின்றன.

பிள்ளையின் படிப்புச்செலவுக்குப் பணம் செலவிடத் தயங்குபவர்கள் கூட கோயிலுக்கு நிதி வழங்கத் தவறுவதில்லை.

கோயில்கள் பொதுச் சொத்து. அவற்றை முறையாக நிர்வகிப்பது ஒரு விஷப் பரீட்சை. எவ்வளவு தான் நேர்மையாக செயற்பட்டாலும் கோயில் நிர்வாகிகள் நல்ல பெயர் கேட்டது இல்லை.

சில கோயில்களில் நிர்வாக சபைகள் பெயரளவிலேயே இயங்குகின்றன. ஒரு சிலர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றனர். அதேவேளை பதவிகளை ஏற்றுக் கொண்டவர்கள் கோயில் பக்கமே வருவதில்லை. ஒரு சிலர் மட்டுமே எல்லாவற்றையும் செய்ய வேண்டி இருக்கின்றது. ஆனால் அப்படி செயற்பட்டாலும் கூட நல்ல பெயர் கிடைப்பதில்லை என்று கூறுகின்றனர் மறுசாரார்.

இப்படியான சந்தர்ப்பங்களில் கோயிலும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் என்று உதறித் தள்ளி விட்டுப் போனவர்களும் உண்டு. எல்லா எதிர்ப்புகளையும் சமாளித்து எடுத்த காரியத்தை சிறப்பாக முடித்தவர்களும் உண்டு. இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பக்தர்கள் காணிக்கை செலுத்துகின்றனர். நன்கொடை வழங்கு கின்றனர். திருவிழாக் காலங்களில் பூஜைகள் செய்கின்றனர். அதோடு சரி.

ஆனால் அங்கு ஏற்படும் சிக்கல்கள் எல்லாம் அந்தக் கோயிலின் நிர்வாக சபைக்குள் தான். பொறுப்புகளை ஏற்றுக் கொண்டவர்கள் கணக்கு வழக்குகளை சமர்ப்பிப்பதில்லை. கேட்டால் அடிதடிக்கு வருகின்றனர். இதனால் நிர்வாக சபைக்குள் குத்து வெட்டு.

இப்படியான சந்தர்ப்பத்தில் சபைக்குள் இருப்பவர்களே வெளியாட்களைத் தூண்டி விட்டு, பெட்டிஷன் போடவும், குழப்பங்களை விளைவிக்கவும் முனைகின்றனர். இதனால் இன்று பெரும்பாலான கோயில்கள் சீரழிந்த நிலையில் இருக்கின்றன.

கோயில்கள் புனிதமானவை. ஒரு சிலரால் அந்த புனிதத்தன்மை கெட்டு விடக் கூடாது. கோயில்களை வருமானம் தேடித் தரும் நிறுவனங்களாக மாற்றி விடக் கூடாது.

தற்பொழுது கோயில்கள் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வரும் இந்து கலாசாரத் திணைக்களம் இவ்விடயங்களை நன்கு பரிசீலனை செய்ய வேண்டும்.

கோயில்களின் புனிதம் கெடாமல் உரிய நடவடிக்கை எடுத்து மலையகக் கோயில்களைப் பாதுகாக்க வேண்டும்.

# இந்திய-பாக். டெஸ்ட்: ஐ.சி.சி. தலையிடக் கோரிக்கை

இந்திய அணி பாகிஸ்தானுடன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அனுமதி அளிக்க இந்திய அரசாங்கம் மறுத்துள்ளது.

இதனால் திட்டமிட்டப்படி ஆசிய டெஸ்ட் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நடைபெறுவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

ஆசிய டெஸ்ட் போட்டிகளில் இந்தியா பங்குபற்றாவிட்டால் அதனால் போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு பெருமளவு நிதி இழப்பும் ஏற்படும். இவ்வாறு ஆசிய கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

''எனவே இவ்விடயத்தில் சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) தலையிட வேண்டும்.'' இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் தாரிக் ஸியா கோரிக்கை விடுத்துள்ளார்.

''ஐ.சி.சி. தனது அதிகாரத்தை முழுமையாகப் பிரயோகிக்க வேண்டிய தருணம் இதுவாகும். அப்படியானால் மாத்திரமே சர்வதேச ஒலிம்பிக் குழு, சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் போன்று உயர் மதிப்பு கொண்டதாக ஐ.சி.சியும் திகழ முடியும்.

தற்போது ஐ.சி.சி. செயற்படாவிட்டால் ஐ.சி.சி நொக்அவுட் போட்டிகளுக்கும் அதன் 10 வருட டெஸ்ட் கிரிக்கெட் திட்டத்திற்கும் ஆபத்து ஏற்பட்டுவிடும். இவ்வாறு தாரிக் ஸியா கூறியுள்ளார்.

இந்திய பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சர் உள்துறை அமைச்சர் ஆகியோர் கலந்தாலோசனை நடத்தி பாகிஸ்தானுக்கு இந்திய அணியை அனுப்புவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்.

''விளையாட்டை விட நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை முக்கியமானது.'' இவ்வாறு இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் உமா பாரதி கூறியுள்ளார்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# வெளிநாட்டு மண்ணில் இந்தியாவின் 16ஆவது வெற்றி

இந்திய இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 7 விக்கட்டுகளால் வென்றுள்ளது.

கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை முதல் இன்னிங்ஸில் 274 ஓட்டங்களைக் குவித்தது. மஹேல ஜயவர்தன அபாரமான சதமொன்றைக் குவித்தார்.

இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 232 ஓட்டங்களைப் பெற்றது.


கங்குலி திராவிட்

அதிகபட்சமாக சடகோபன் ரமேஷ் 47 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை 157 ஓட்டங்களில் 9 விக்கட்டுகளை இழந்தது. எனினும் பின்வரிசை துடுப்பாட்ட வீரர் முரளி 67 ஓட்டங்களைப் பெற்றார். இதனால் அணியின் மொத்த எண்ணிக்கை 221 ஆக உயர்ந்தது.

வெற்றி பெறுவதற்கு 264 ஓட்டங்கள் தேவையான நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது இந்தியா.

இரண்டு நாட்களுக்கு மேல் அவகாசமிருந்த நிலையில் இந்திய அணி நம்பிக்கையுடன் துடுப்பெடுத்தாடியது. போட்டியின் நான்காவது நாளன்று 3 விக்கட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது இந்திய அணி.

அணியின் உப தலைவர் ராகுல் திராவிட் 75 ஓட்டங்களைப் பெற்றார். அணித்தலைவர் கங்குலி ஆட்டமிழக்காமல் 98 ஓட்டங்களைப் பெற்றார். வெற்றி பெறுவதற்கு 4 ஓட்டங்கள் தேவையான நிலையில் எதிர் முனையிலிருந்த முஹமட் கைஃப் 'பவுண்டரி' அடித்துவிட்டார். இதனால் கங்குலி சதம் குவிக்கும் வாய்ப்பு நழுவியது.

இந்திய அணி தற்போது பெற்றுள்ள வெற்றி அவ்வணி வெளிநாடுகளில் பெற்ற 16ஆவது டெஸ்ட் வெற்றியாகும். (விவரம் அட்டவணையில்)

காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட்போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது. கண்டி டெஸ்ட்டில் தோல்வியடைந்துள்ளது. இதற்குமுன் இறுதியாக நடைபெற்ற தென்னாபிரிக்கா இங்கிலாந்து அணிகளுடனான தொடர்களிலும் இலங்கை அணி காலியில் வெற்றி பெற்றபோதும் கண்டியில் தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.

### இந்திய அணி வெளிநாடுகளில் பெற்ற டெஸ்ட் வெற்றிகள்

| வெ. | போ. | திகதி | எதிர் | இடம் | வெற்றி |
|---|---|---|---|---|---|
| 1. | 44 | 15-20.பெப்.1968 | நியூஸி | டனிடின் | 5விக் |
| 2. | 46 | 29பெப்.-4மார்ச்1968 | நியூஸி | வெலிங்டன் | 8விக் |
| 3. | 47 | 07-12மார்ச்1968 | நியூஸி | ஒக்லாண்ட் | 277ஓட் |
| 4. | 49 | 6-10மார்ச்1971 | மே.இ | போட்ஒப் ஸ்பெயின் | 7விக் |
| 5. | 55 | 19-24ஆகஸ்.1971 | இங்கி. | ஓவல் | 4விக் |
| 6. | 59 | 24-28.ஜன.1976 | நியூஸி | ஒக்லாண்ட் | 8விக் |
| 7. | 64 | 07-12.ஏப்ரல்1976 | மே.இ | போட் ஒப்ஸ்பெயின் | 6விக் |
| 8. | 68 | 30டிச.77-04 ஜன.78 | அவுஸ் | மெல்போன் | 222ஓட் |
| 9. | 69 | 07-12ஜன.1978 | அவுஸ் | சிட்னி | இனிங்ஸ்,2ஓட் |
| 10. | 80 | 07-11பெப்.1981 | அவுஸ் | மெல்போன் | 59ஓட் |
| 11. | 105 | 05-10ஜூன்1986 | இங்கி | லோட்ஸ் | 5விக் |
| 12. | 107 | 19-23 ஜூன்1986 | இங்கி | லீட்ஸ் | 279ஓட் |
| 13. | 134 | 27ஜூலை1ஆக.1993 | இலங் | எஸ்.எஸ்.சி | 235ஓட் |
| 14. | 157 | 10-13நவ.2000 | ப.தேஷ் | டாக்கா | 9விக் |
| 15. | 158 | 07-10ஜூன்2001 | ஸிம். | புலாவாயோ | 8விக் |
| 16. | 181 | 22-25 ஆகஸ்.2001 | இலங் | கண்டி | 7 விக் |

(போட்: இந்தியா வெளிநாடுகளில் விளையாடிய போட்டிகளின் எண்ணிக்கை, திகதி: போட்டி நடைபெற்ற திகதிகள், எதிர்: எதிரணி, வெற்றி: வெற்றிபெற்ற விதம்)

# சாதனை வீரர் முரளி மாப்பிள்ளையாகிறார்


செய்துள்ளார் முத்தையா முரளிதரன்.

விழமையாகத்தனது பந்துவீச்சினால் சாதனைபடைக்கும் முத்தையா முரளிதரன் இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட்டின்போது துடுப்பாட்டத்திலும் சாதனை படைத்தார். போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 65 பந்துவீச்சுகளில் 3 சிக்ஸர்கள் உட்பட 67 ஓட்டங்களைக் குவித்தார் முரளி. இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கையின் சார்பில் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர் முரளிதரனே. முரளி தனது முதலாவது டெஸ்ட் அரைச் சதத்தை இப்போட்டியில் 48 பந்துவீச்சுகளில் பெற்றார்.

இறுதி விக்கட்டுக்காக முரளியும் ருச்சிர பெரேராவும் இணைந்து 64 ஓட்டங்களைப் பெற்றனர். (முரளி 58, ருச்சிர 6) இது 10 ஆவது விக்கட்டுக்கான இலங்கையின் புதிய சாதனையாகும். 1986/87இல் நாக்பூரில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ருமேஷ் ரத்னாயக்காவும் அசோக டி சில்வாவும் இணைந்து 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தமையே முந்தைய சாதனை.

இந்திய கிரிக்கெட் அணியை தனது பந்து வீச்சினால் பல தடவை துவம்சம் செய்துள்ளார் முத்தையா முரளிதரன்.

எனினும் எதிர்காலத்தில் முரளியைப் பற்றி இந்தியர்களும் பெருமைப்படுவர்.

காரணம் முரளிதரன் இந்திய மாப்பிள்ளையாகப் போவதே. தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவரை முரளி திருமணம் செய்யப் போவதாக 'சுடர் ஒளி'க்குத் தகவல் கிடைத்துள்ளது.

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியில் இடம் பெற்ற வீரர்களில் முரளி மாத்திரமே இன்னும் திருமணம் செய்து கொள்ளாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'எல்லே' சம்மேளனத்திற்கு புதிய அலுவலகம்

இலங்கை 'எல்லே' சம்மேளனத்தின் புதிய காரியாலயம் கொழும்பு 07 ரீட் அவனியூவிலுள்ள ரேஸ் கோர்ஸ் மைதானவளாவில் தற்போது அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் நிர்மாண வேலைகள் இம்மாத இறுதியில் பூர்த்தியாக்கப்படவுள்ளது என எல்லே சம்மேளனத்தின் தலைவரும் மீன்பிடி நீரியல்வள அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ 'சுடர் ஒளி'க்கு தெரிவித்தார்.

இப்புதிய காரியாலயத்தின் திறப்பு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, மஹிந்த ராஜபக்ஷ, இளைஞர் விவகார அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

-அருள்



சாம்பியன்களான அம்பலந்துவ முஸ்லிம் வித்தியாலய வீரர்களுடன் விளையாட்டுத்துறை அமைச்சர் கிரியெல்ல, அமைச்சின் செயலாளர் பி. ராமானுஜம், ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளன உபதலைவர் மணிலால் பெர்னாண்டோ, இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் போதி லியனகே, உபதலைவர் காமினி ரந்தெனிய, விளையாட்டுத் திணைக்கள இயக்குநர் நாயகம் மில்டன் அமரசிங்க ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

# அம்பலந்துவ முஸ்லிம் வித்தியாலயம் அகில இலங்கைச் சாம்பியன்

பாடசாலைகளுக்கிடையிலான கனிஷ்ட பிரிவு கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாணந்துறை அம்பலாந்துவ முஸ்லிம் வித்தியாலயம் சாம்பியனாகியுள்ளது.

கல்வியமைச்சு, விளையாட்டுத் துறை அமைச்சு ஆகியவற்றின் ஆதரவுடன் இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இப்போட்டிகள் நடைபெற்றன. சங்ஸ்தா சீமெந்து நிறுவனம் இதற்கு அனுசரணை வழங்கியிருந்தது.

13 வயதுக்குட்பட்ட பிரிவிற்கான இச்சுற்றுப்போட்டி கடந்த ஜூலை 13ஆம் திகதி ஆரம்பமானது. நாடெங்கிலுமிருந்து 516 பாடசாலைகள் இதில் பங்குபற்றின.

இறுதிச்சுற்றுக்கு 26 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இவ் இறுதிச்சுற்றுப் போட்டிகள் கொழும்பு ரீட் அவெனியு விலுள்ள ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடைபெற்றன.

தொடரின் அரையிறுதிப் போட்டியொன்றில் கொழும்பு இஸிபத்தன கல்லூரி கம்பளை விக்கிரமபாகு வித்தியாலயத்தை 3-0 கோல்களால் வெற்றி கொண்டது.

மற்றொரு அரையிறுதியில் அம்பலாங்கொடை அபேதிஸ்ஸ வித்தியாலயத்தை பாணந்துறையிலுள்ள அம்பலந்துவ முஸ்லிம் வித்தியாலயம் 7-1 கோல்களால் தோற்கடித்தது. எம்.எம்.ஐ. ஹஸன் 6 கோல்களை அடித்தார்.

இறுதிப் போட்டி கடந்த 19ஆம் திகதி மாலையில் நடைபெற்றது. மிகவும் விறுவிறுப்பான இப்போட்டியின் 23 ஆவது நிமிடத்தில் முஸ்லிம் வித்தியாலய வீரர் எம்.எம்.ஐ. ஹசன் போட்டியின் முதலாவது கோலை அடித்தார். இடைவேளையின் பின் 7 ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலையும் ஹசன் அடித்தார்.


அணித்தலைவர் எம்.என்.எம். பஸால் அமைச்சர் கிரியெல்லவிடமிருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெறுகிறார்.

இதன் மூலம் 2-0 கோல்களால் அம்பலந்துவ முஸ்லிம் வித்தியாலயம் வெற்றி பெற்றது.

தேசிய ரீதியிலான கனிஷ்ட பிரிவு கால்பந்தாட்டப் போட்டியொன்றில் இப்பாடசாலை பங்குபற்றியமை இதுவே முதல்தடவையாகும். முதலாவது தொடரிலேயே இப்பாடசாலை அணி வெற்றியீட்டியுள்ளது.

இவ்வணியில் ஓரிருவர் தவிர பெரும்பாலானோர் பாதணி இன்றியே விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

சுற்றுப்போட்டியின் சிறந்த வீரராக அம்பலந்துவ முஸ்லிம் வித்தியாலய அணித் தலைவர் எம்.என்.எம்.பஸால் தெரிவானார்.

அதிக கோல்களை (17) அடித்த வீரருக்கான விருதை இதே பாடசாலையைச் சேர்ந்த எம்.எம்.ஐ. ஹஸன் பெற்றுக்கொண்டார்.

சிறந்த கோல் காப்பாளராக ரோயல் கல்லூரி வீரர் சமிந்த தில்ஷான் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த ஒழுங்குடன் விளையாடிய அணிக்கான பரிசு குருணாகலை மாலியதேவ கல்லூரி அணிக்கு வழங்கப்பட்டது. சுற்றுலா விளையாட்டுத்துறை அமைச்சர் பிரதம அதியாகக் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

# மாவட்ட வலைப்பந்தாட்டம்: போட்டிகள் மாத்தறையில்

மாவட்டங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் மாத்தறையில் நடைபெறவுள்ளன. செப்டெம்பர் 1, 2ஆம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறும். 21 வயதுகுட்பட்ட பிரிவு, பகிரங்கப் பிரிவு, ஒன்றிணைந்த 21 வயதுக்குட்பட்ட பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அம்பாறை, திருகோணமலை உட்பட நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த 48க்கு மேற்பட்ட அணிகள் இதில் போட்டியிடவுள்ளன. சுமார் 5 லட்ச ரூபா செலவில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. ஆரம்பச்சுற்று லீக் முறையிலும் இரண்டாவது சுற்று நொக்அவுட் முறையிலும் நடத்தப்படும்

இச்சுற்றுப்போட்டியின் ஆரம்ப வைபவத்தில் வனவள, சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த சமரசேகர பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

# நுவரெலியாலீக்கின் கால்பந்தாட்டப் போட்டிகள்

நுவரெலியா மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் கழகங்களுக்கிடையிலான சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

'சி' டிவிசன் 'ஏ' குழுவில் சன் போர்ட்ஸ், சன்ஸ்டார், ஹைபொரஸ்ட், வன்னி, ரெட் மூன், யங் ஈகிள் ஆகிய கழகங்கள் பங்குபற்றுகின்றன.

'சி' டிவிசன் 'பீ' குழுவில் சின்டா, நானுஓயா, சமர்ஹில், டே ஸ்டார், ஹொலி ட்ரினிட்டி ஆகிய கழகங்கள் விளையாடுகின்றன.

'ஏ' டிவிசனில் மாநகரசபை, யங்போர்ட்ஸ், சென்.அன்ரூஸ், ரெட்விங்ஸ், நெஸ்பி, லேக் ஸைட், கிராண்ட் ஹோட்டல், இன்கோ, ஹல் கிளப் ஆகிய கழகங்கள் பங்குபற்றுகின்றன. சகல போட்டிகளும் நுவரெலியா மாநகரசபை மைதானத்தில் நடைபெறு கின்றன.



இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாம் வாழும் நாடுகளைப் பிரநிதித்துவப்படுத்தும் வகையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று அண்மையில் சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்றது.

கனடாவிலிருந்து சென்ற தமிழர் அணி இச்சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டியது. அவ்வணி வீரர்கள் கனடாவுக்குத் திரும்பிய போது அளிக்கப்பட்ட மேளதாளத்துடன் வரவேற்கப்படுவதையே படத்தில் காண்கிறீர்கள்.

# மெதமஹாநுவர முருகாமலை ஸ்ரீ முருகன் தேர்-தீர்த்தோற்சவ மலர்

## உலகம் உய்ய வந்து உதித்த திருமுருகன்

அமரர்கள் அனைவரும் துன்பமுற்று, மேருமலையினின்றும் புறப்பட்டு அரக்கர்களின் கொடுமையால் கைலையை அடைந்து, திருநந்தி தேவரைப் பணிந்து, ''எமது வரவை இறைவனுக்குத் தெரிவித்தருள வேண்டும்'' என்று சொல்ல, நந்திதேவர் சிவமூர்த்தியின் பால் அறிவிக்க, பரமசிவன் ''அழைத்து வருதி' என்று பணிக்க, நந்திதேவர் அனைவரையும் அழைத்துச் சென்றார்.

திருமால் முதலியோர் பரமேசனைப் பலகாலும் பணிந்து தமது குறைகளைக் கூறி முறையிட்டனர்.

சிவபெருமான் தேவர்கள் மீது திருவருள் நோக்கம் செய்து ''நீங்கள் மிக வருந்தினீர்கள். உங்களுக்கு வேண்டும் வரம் யாது? கூறுதிர், தருதும்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தேவர்கள் ''எம்பெருமானே அடியேங்கள் எல்லாம் இந்நாள்காறும் சூரன்முதலிய அவுணர்களால் வருந்தினோம் அவ்வருத்தம் நீங்கி முன்னை ஆக்கத்தை அடையும் பொருட்டு ஒருவரம் வேண்டுகின்றோம்; பரம கருணாநிதியே அகிலாண்டங்களையும் ஈன்ற

### வாழ்த்துச் செய்தி



வனப்புமிகு பழம்பெரும் ஆலயத்தில் குடிகொண்டு அடியவர்களுக்கெல்லாம் அருள் பாலிக்கும் மெதமஹாநுவர முருகாமலை ஸ்ரீமுருகன் தேர் — தீர்த்தோற்சவ மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

சிங்களவர், தமிழர் என்ற இன வேற்றுமை இன்றி, பல்வேறு இடங்களில் இருந்தும் எல்லோரும் வந்து வழிபடும் ஓர் ஒற்றுமையின் சின்னம் இவ் ஆலயம் என்பது பெருமைக்குரிய விடயம் ஆகும்.


'சின்னக் கதிர்காமம்' (புஞ்சி கதரகம) என்று பக்தர்களால் பூசிக்கப்படும் மெத மஹாநுவர முருகாமலை ஆலயம் எம் மக்களின் வாழ்வோடும், வளத்தோடும் இரண்டறக் கலந்து விட்டது. இது எமக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

1983 ஆம் ஆண்டு வன்முறை என்ற அழுக்குக் கரங்களால் களங்கப்படுத்தப்பட்டு ஆலயம் அழிக்கப் பட்டாலும், இன்று புதுப்பொலிவு பெற்று கலியுகக் கந்தன் திருவருள் பாலிக்கும் அற்புதத் திருத்தலமாகவிளங்குகிறது.

எல்லாம் வல்ல மெத மஹாநுவர முருகாமலை ஸ்ரீ முருகனின் அருளால் இந்நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவ பிரார்த்திப்போமாக.

**எஸ்.முத்தையா ஜே.பி**
**ஆலய பரிபாலன சபைத் தலைவர்**
**லக்கிலேண்ட் நிறுவன உரிமையாளர்**

அம்பிகையை நீர் திருமணஞ்செய்தமை தீவினைக் கடலில் அழுந்திய சிறியேங்களை ஆளுதற்கு, ஓர் ஏதுக்காட்டுதற்கன்றி அவரிடமாக ஒரு திருக்குமாரரைப் பெறுதற்கன்று. ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவமும் ஒப்பும் ஏதமும் வரவும் போக்கும் இன்பமும் துன்புமின்றி வேதமுங் கடந்துநின்ற விமலனே ஒரு திருக்குமாரரை உமக்கொப்பாக உம்மிடத்தினின்றுந் தோற்றுவித்தருளுக'' என்று விண்ணப்பஞ்



செய்தார்கள். அந்திவண்ணராகிய அரனார் ''நீங்கள் வருந்தாதொழிமின் புதல்வனைத் தருவோம்'' என்று திருவாய் மலர்ந்து, ஞானிகளால் சிந்திக்கப்படும் தனது பழைமையாகிய ஆறு திருமுகங்களையும் கொண்டு, அத்திருமுகங்களிலுள்ள நெற்றிக் கண்கள் தோறும் ஒவ்வோர் அக்கினிப் பொறியைத் தோற்றுவித்தருளினார்.

அப்பொறிகளின் வெம்மையைக் கண்டு அரனார் அருகில் எழுந்தருளியிருந்த உமாதேவியார் வேர்த்துத் திருவுளம் கலங்கித் திருவடியிலுள்ள சிலம்புகள் புலம்புமாறு திருக்கோயிலினுள்ளே ஓடினார். விஷ்ணு முதலாயினோர்கள் வெருவி நடுநடுங்கி ஒருவர் போமிடம் ஒருவர் உணராராய் ஓடி ஒளிந்தார்கள்.

அதுகண்டு சிவபெருமான் வாயுதேவனையும் அக்கினி தேவனையும் நோக்கி ''நீங்கள் இருவீரும் இத்தழற் பொறிகளைத் தாங்கிக் கொண்டு போய்க் கங்கையில் விடக்கடவீர்கள்'' என்று பணித்தருளினார்.

சிவபெருமான் ''இவற்றைத் தாங்கும் ஆற்றலை நுமக்களித்தோம்'' என்று அருள்புரிய வாயுவும் அக்கினியும் இசைந்து பணிந்தார்கள்.

ஒரு நாழிகை செல்ல வாயுதேவன் ''இவ் அக்கினியைத் தாங்குதல் அரிது அரிது'' என்று புலம்பிச் சிவனாரது அருளால் வலிமைபெற்ற அக்கினித்தேவனுடைய சென்னியிற் சேர்த்தான். இவ்வாறு மாறி மாறித் தாங்கிக் கொண்டுபோய் கங்கையில் விடுத்தனர்.

அப்பொறிகளின் வெப்பத்தால் கங்கை சிவனாரது சடையில் மறைந்தது போல் மறைந்தது. சிவபெருமான் அருளால் கங்கை அவற்றைச் சென்னி மேல் தாங்கி ஒரு நாழிகைக்குள் சரவணப் பொய்கையில் விடுத்தனள்.

அருவமும் உருவமுமாய் அநாதியாய் ஒன்றாய் பல வாய்ப் பரப்பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பே திருமேனியாகக் கருணை வெள்ளம் பொழியும் ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கண்களுங் கொண்டு உலக மெல்லாம் உய்யும் வண்ணம் முருகக்கடவுள் திருவவதாரஞ் செய்தருளினார்.

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன்
உலகம் உய்ய.

ஆகாயத்திலே துந்துபிகள் முழங்கின வேதங்களெல்லாம் ஆர்த்தன பிரமாவும் திருமாலும் இந்திரனும் பூமழைபெய்து ''அடியேங்களுக்கு அருள்செய்க'' என்று துதித்துச் சூழ்ந்தார்கள்.

உலகம் உய்யும் பொருட்டு அருளுருவங்கொண்டு சரவண தடாகத்தில் திரு அவதாரஞ் செய்தருளிய முருகப் பெருமான் கைக்குழந்தைபோலச் செய்யுந் திருவிளையாடலைக்கண்டு அரி அயேனாதி அமரர்கள் அனைவரும் கார்த்திகை மகளிர் களை நோக்கிச் ''சரவணப் பொய்கையில் சண்முகக் கடவு ளாய் வீற்றிருந்தருளும் எம்பெருமான் ஒரு குழந்தை போலத் தோன்றினார். நீங்கள் அவருக்கு நாள்தோறும் உங்கள் முலைப் பாலைக் கொடுத்து வளர்க்கக் கடவீர்கள் '' என்றார்கள்.

கார்த்திகைப் பெண்கள் அதற்கிசைந்து சரவணப் பொய்கையில் எழுந்தருளி இருக்கும் இளம்பூரணனை அடைந்து போற்ற அறுமுகக் கடவுள் தம்மை வேண்டுவோர் வேண்டிய பொருள்களை வெறாதுதவும் பெருமாள் ஆதலால் அவ் ஆறு மாதர்களும் அன்போடு பால்தரும் அன்பால் எடுக்க ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஆறு குழந்தையாகப் பிரிந்தருளினார்.



சிவத்தோடு
சுப்ரமணியம்
ஒன்றாக இணைந்து
ஆறுமுகனாக
ஆகிறது
முருகனே சிவன்
சிவனே முருகன்
அ, உ, ம, என்ற
ஓங்கார ஸ்வரூபன்
முருகன்

அங்ஙனம் பிரிந்த ஆறு திருக்குழந்தைகளையும் கார்த்திகை மகளிர்கள் மிகவும் மகிழ்ந்து எடுத்து தங்கள் தங்கள் முலைப்பாலை ஊட்ட முருகப்பெருமான் திருமுறுவல் செய்து நீங்காத பேரருளால் அருந்துவார்போல் அருந்தினார். பாலருந்திய பரஞ்சுடர் முதல்வனை அக் கார்த்திகைப் பெண்கள் வண்டருந்தாத கற்சமாமலர்ச் சயனத்தில் சேர்த்துத் தாலாட்டிக் கண்வளரச் செய்து துதித்தார்கள். குமாரக்கடவுள் திருவருளினாலே துயில் செய்ய ஒருருவமும், துயில் செய்து துண்ணென எழுந்து மதலைமொழி பேச ஒருருவமும், மாதாவின் முலைப் பாலைச் செம்பவள வாய்வைத்து உண்ண ஒருருவமும் நகை செய்து கொண்டிருக்க ஒருருவமும், விளையாடிக் கொண்டிருக்க ஒருருவமும் காரணமின்றியே அழுதுகொண்டிருக்க ஒருருவமும் உடையாராயினார்.

இவ்வாறு ஆறுதிருமேனியும் ஒருகணத்திற்குள் ஆயிரக்கணக்கான பேதமாம் வண்ணம் முழுமுதற் கடவுளாகிய முருகப்பெருமான் உயிர்கள்தோறும் ஆடல்போல எண்ணிலாத அற்புதத் திருவிளையாடல்களைப் புரிவாராயினார்.

*(வாரியார் சுவாமிகளின் கந்தபுராணத்திலிருந்து)*

## குன்றத்துச் சபையில் குவளை வீச்சு!

மத்திய மாகாண சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது. எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர். அமைச்சர் வீ.ராதாகிருஷ்ணனை நோக்கி கண்ணாடிக்குவளை வீசப்பட்டது. இதனால் இரு உறுப்பினர்கள் காயமடைந்தனர்.

பள்ளேகலையிலுள்ள மத்திய மாகாண சபை மண்டபத்தில் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் மகிந்த அபேகோன் தலைமையில் கூடியது. சபைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரேரணை முறையாகக் கையளிக்கப்படவில்லை எனக் கூறி அதனை நிராகரித்தார் சபைத் தலைவர்.

இதனை எதிர்க்கட்சியினர் கண்டித்தனர். சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. சபையை 30 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார் தலைவர்.

சபை மீண்டும் கூடியபோது குழப்ப நிலை மேலும் நீடித்தது. எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர். கண்ணாடிக் குவளைகள் வீசப்பட்டன. அமைச்சர் ராதாகிருஷ்ணன் மீது வீசப்பட்ட கண்ணாடிக்குவளை அவர் முகத்தை உரசியபடி சென்றது. இதனால் இரு உறுப்பினர்கள் காயமடைந்தனர்.

எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்த பின்னர் ஆளும் கட்சியினர் மாத்திரம் கூட்டத்தை நடத்தினர். முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்க எதிர்க்கட்சியினர் மீது கண்டனம் தெரிவித்தார்.

''அமைச்சர் ராதாகிருஷ்ணன் மீது வீசப்பட்ட கண்ணாடிக் குவளை தமிழ் மக்களின் கௌரவத்தின் மீது வீசப்பட்ட ஆயுதம் போல் நான் கருதுகிறேன். மலையகத் தமிழ் மக்களின் உறுப்பினரை எதிர்க்கட்சியினர் கேவலப்படுத்திவிட்டார்கள். இது இந்தச் சபையின் கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்திவிட்டது.'' என்று முதலமைச்சர் கூறினார்.

அமைச்சர் மீது கண்ணாடிக்குவளை வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் அபேரத்னவுக்கு ஒரு வார காலத்திற்கு சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டது.

அதேவேளையில் சபைத் தலைவர் தமக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரித்தது ஜனநாயக உரிமையை மீறிய செயல் என்று எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

## ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மணிவிழாவுக்கு முத்திரை

அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் மணிவிழாவை முன்னிட்டு முத்திரை ஒன்றை வெளியிடுமாறு ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வர் தபால் தந்தி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் கூடும் போது இதற்கான வாய்மூலக் கேள்விகளுக்கு அவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

அவை வருமாறு:

* முஸ்லிம்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்குடன் ஒரு பயிற்சிக்கல்லூரியாகவே அரசாங்க ஆசிரியர் கல்லூரி 1941.1.1.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதென்பதை அமைச்சர் அறிவாரா?
* முஸ்லிம் பெருந்தலைவர்களான டாக்டர் ரீ.பீ.ஜாயா, சேர் ராசீக் பரீத், சேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் ஆகியோரின் முயற்சியால் அட்டாளைச்சேனையில் இக்கல்லூரி ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?
* சமார் 10,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்து பெருமைமிகு சாதனையுடன் தனது 60 ஆண்டுகளை இக்கல்லூரி பூர்த்தி செய்வதை அறிவாரா?
* இக் கல்லூரி முஸ்லிம் சமுதாயத்திற்கு வழங்கிய மாபெரும் சேவையை அங்கீகரிக்கும் விதத்தில் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் மணிவிழாவை முன்னிட்டு முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?

அதே சமயம் சீதுவை ரயில் விபத்துக்கான முழுப்பொறுப்பையும் ஏற்று போக்குவரத்து அமைச்சர் திலேஷ்குணவர்த்தன பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும் அஸ்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் போக்குவரத்து அமைச்சருக்கு பாக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பி உள்ளார்.

## மற்றொரு பிந்துனுவெவவாக களுத்துறைச் சிறை மாறுமா?

இன்னொரு ''பிந்துனுவெவப் படுகொலைகள்'' எந்நேரமும் களுத்துறைச் சிறையில் இடம் பெறலாம்.

அவ்வளவு தூரத்துக்கு களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலை வலுத்துள்ளது.

தமது இக்கட்டான நிலைவரம் குறித்து களுத்துறைச் சிறையிலுள்ள அரசியல் கைதிகள் மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.சந்திரசேகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் புதிதாக இடமாற்றம் பெற்று களுத்துறைச் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு நியமிக்கப்பட்டவர்கள் தம்மை நடத்தும் முறை குறித்துத் தாம் அதிருப்தி அடைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலைமை தொடருமானால் கடந்த காலங்களில் இடம்பெற்ற சிறைச்சாலை பயங்கரங்கள் இங்கும் நிகழலாம் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

சிறைச்சாலைக்கு எம்மைப் பார்க்க வரும் உறவினர்களுக்கு சிறையதிகாரிகள் நெருக்கடிகளை வேண்டுமென்றே கொடுக்கிறார்கள்.

சிறைச்சாலையில் எமக்கு வழங்கப் படும் உணவு உப்புப் புளியில்லாததாக இருக்கிறது. இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளிலேயே மிகவும் தரம் குறைந்த உணவு வழங்கப் படுவது களுத்துறைச் சிறைச்சாலையில்தான்.

இப்படி கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# குடாக் கடல் ஊடாக புலிகள் யாழ். நகரைத் தாக்க முயற்சி?

## குருநகரில் சிக்கிய இரு சடலங்கள் எழுப்பும் சந்தேகம்!

**யா**ழ்ப்பாணம் குருநகர் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி அதிகாலையில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் உயிரிழந்திருக்கின்றனர்.

யாழ். நகரில் சன அடர்த்தி மிகுந்த பகுதி குருநகர். குடாக்கடலுடன் நேரடியான தொடர்புடைய தரைப் பிரதேசம் அது. மீன்பிடி மற்றும் அதனோடு இணைந்த தொழில்களைப் பிரதானமாகக் கொண்ட குருநகர் மக்களில் பலர் தற்போது இடம்பெயர்ந்து வசிக்கின்றனர்.

இந்தப் பகுதியைக் கண்காணிக்கும் படைப் பிரிவினருக்கோ மிகச் சிக்கலான பணி.

குருநகரை அடுத்துள்ள குடாக் கடலைத் தாண்டினால் சில கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பூநகரி. இடையில் சிறு சிறு தீவுகள் போன்ற மணற்பிட்டிகள்.

கடல் வழியாக் மீனவர்கள் போன்ற வேடத்தில் புலிகளும் எங்கே ஊடுருவி விடுவார்களோ என்ற பயம் படையினருக்கு.

இரவு பகலாக நூற்றுக் கணக்கான படையினர் குடாக் கடற்கரையோரம் முழுமையாகக் கண்காணிக்கின்றனர். இரவில் ஏதேனும் சந்தேகத்துக்கிடமான நடமாட்டம் தென்படின் இரவைப் பகலாக்கும் பரா வெளிச்சக் குண்டுகள் ஏவப்படும். ஷெல் வீச்சும் நடக்கும்.

குருநகரில் இருந்து கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அனைவரும் திரும்பி வருகின்றனரா, அவர்களுடன் மேலதிகமாக எவராவது வருகின்றனரா, என்பதைத் தினமும் கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டு கண்காணிக்கும் நிலை படையினருக்கு.

எனினும் புலிகள் குடாக்கடல் ஊடாக ஊடுருவி யாழ் நகரினுள் பிரவேசிப்பதற்கு குடியிருப்புச் செறிவு நிறைந்த குருநகர் பிரதேசம் வாய்ப்பாகவே இருக்கிறது. யாழ். நகரப் படையினர் இவ்வாறு கருதுகின்றனர்.

கடந்த 23 ஆம் திகதி பின்னிரவில் குருநகர் தொடர் மாடிக் கட்டடங்களுக்குப் பின்புறமாகக் கேணியடிப் பகுதியில் சந்தேகத்துக் கிடமான நடமாட்டம் தென்பட்டது. இதனை அவதானித்த முன்னரங் கக் காவல் நிலைகளில் இருந்த படையினர் 'பரா' வெளிச்சக் குண்டு களை ஏவினர். ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

கடல் வழியாக ஆயுதங்களுடன் ஊடுருவிய புலிகளில் சிலர் முன்னிரவு வேளை அப்பகுதியில் கைவிடப்பட்ட கிணறு ஒன்றினுள் ஒளிந்திருந்தார்களா? மறுநாள் அதிகாலை அங்கிருந்து அவர்கள் வெளியேற முற்பட்ட போது மோதல் ஏற்பட்டதாக பாதுகாப்புத் தரப்பினர் கூறுகின்றனர்.

படையினரிடம் சிக்கிக் கொள்ளும் நிலைமை உருவாகுவதை அறிந்து கொண்ட புலிகள் தம்மிடம் இருந்த கிரனேட்டுக்களை வெடிக்க வைத்துள்ளனர். அவ்விடத்தில் இருந்து மீட்கப்பட்டதாகக் கூறி மறுநாள் 24 ஆம் திகதி மாலை படையினரால் இரு சடலங்கள் யாழ். மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

பச்சை நிற அரைக் காற்சட்டைகளுடன் காணப்பட்ட — இருபது வயது மதிக்கத்தக்க — இருவரின் சடலங்களிலும் காயங்கள் காணப்பட்டன. இரு சடலங்களினதும் வலது கரங்கள் சிதைவுற்ற நிலையில் இருந்தன.

யாழ். நகரினுள் ஊடுருவும் புலிகளின் முயற்சியை முறியடித்து விட்டதாகப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பாகப் புலிகள் தரப்புத் தகவல் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை.

குடாக்கடல் ஊடாக பெரும் எடுப்பில் ஊடுருவி யாழ். நகரைத் தாக்க புலிகள் திட்டமிட்டார்கள். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். —இவ்வாறு நம்பும் படையினர் யாழ். நகர கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

### டக்ளஸ் மீது கொலை முயற்சி?

யாழ். நகரில் ஸ்ரீதர் தியேட்டர் கட்டடத்தில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் தங்கிப் பணியாற்றுகிறார் அமைச்சரும், ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா. அவரைக் கொல்லும் திட்டத்துடன் யாழ். நகருக்குள் ஊடுரு வினார் என்ற சந்தேகம் ஓர் இளைஞர் மீது எழுந்தது. அந்த இளைஞர் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் கடந்த இருமாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

யாழ். நகரில் கன்னாதிட்டிப் பகுதியில் கடந்த ஜூன் மாத முற்பகுதியில் சுப்பிரமணியம் சிவனேஸ்வரன் (வயது 24) கைதானார். இவர் மூதூரைச் சேர்ந்தவர்.

இந்த இளைஞன் கைது செய்யப்பட்டு சில நாட்களின் பின் யாழ். பொலிஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்தச் செய்தியில் பிரஸ்தாப இளைஞர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொல்வதற்கான திட்டத்துடன் வேறு சிலருடன் சேர்த்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டிருந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

யாழ். நகரில் நகைக் கடை ஒன்றின் கூரைப் பகுதிக்குள் ஒளிந்திருந்த சமயம் அந்த இளைஞரைப் படையினர் கைது செய்தார்கள் என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

படையினரின் தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்ட அந்த இளைஞர் தற்போது காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்.

படையினர் மற்றும் பொலிஸாரின் விசாரணைக்கு மேலதிகமாக ஈ.பி.டி.பி கட்சியினரும் அவரை விசாரணைக்குட் படுத்தினார்கள் என்று தெரிய வருகிறது.

கடந்த வாரம் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமுக்கு 'பிக்கப்' வாகனத்தில் சென்ற ஒரு குழுவினர் பிரஸ்தாப இளைஞரை விசா ரணை செய்தார்கள் என்று கூறப்படுகிறது.

—வலிகாமத்தான்

# சுடர் ஒளி அனுசரணை போட்டிப் பரிசளிப்பு



கட்டுரைப் போட்டியில் பங்குபற்றிய மாணவ, மாணவிகள்

சுடர் ஒளி வாரமலரின் அனுசரணையுடன் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தினால் வவுனியா பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகள் கடந்த 24ஆம் திகதி வழங்கப்பட்டன.

வெற்றி பெற்றோருக்கான பதக்கங்களையும், பணப்பரிசுகளையும், சான்றிதழ்களையும் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா வழங்கினார்.

கடந்த 24ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் பிரதம நீதியரசரால் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் திறந்து வைத்த பின்னர் இடம் பெற்ற வைபவத் திலேயே பிரதம நீதியரசர் பரிசுகளை வழங்கினார்.

நீதிமன்ற திறப்பு விழா வைப வத்தில் அநுராதபுரம், ஹெப்பிட்டிக் கொல்லாவ, மன்னார், மாரவல நீதிபதிகளும் மற்றும் அநுராதபுரம் உயர் நீதிமன்ற நீதியரசரும் வவுனி யாவில் உள்ள பல்வேறு திணைக் களங்களின் உயர் அதிகாரிகளும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வவுனியா நகர் மற்றும் வெளி மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 82 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இவர்களில் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டோர் 25 பேர். கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டோர் 57 பேர்.

நடுவர்களாக சட்டத் தர ணிகள் கடமை ஆற்றினர்.

வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் இப்போட்டிகள் அனைத்தும் இடம் பெற்றன.

ஓகஸ்ட் முதலாம் திகதி பேச்சுப் போட்டியின் முதல் சுற்று இடம் பெற்றது. இந்தப் போட்டியின் போது நடுவர்களாக சட்டத்தரணிகள் திருவாளர்கள் அன்டன் புனிதநாயகம், சபேசன் ரெமி டியால் ஆகியோர் கடமையாற்றினர்.

2ஆம் திகதி கட்டுரைப் போட்டி இடம் பெற்றது. 3ஆம் திகதி பேச்சுப் போட்டியின் இரண்டாவது சுற்று இடம் பெற்றது.

சட்டத்தரணிகள் திருவாளர்கள் அருணகிரி நாதன், ராமநாதன், புண்ணியமூர்த்தி ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர்.

பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:—

தங்கப் பதக்கம்: செல்வி இ.அனுஷா. (நம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயம்)




போட்டிகள் பற்றிய விவரங்கள் குறித்து சட்டத் தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி எம்.சிற்றம்பலம் உரை நிகழ்த்துகிறார்.

வெள்ளிப் பதக்கம்: இ.வளர்மதி. (நெளுக் குளம் கலைமகள் மகாவித்தியாலயம்)

வெண்கலப் பதக்கம்: ஐ.சாண்டேஸ்வரன்.

500 ரூபா பணப்பரிசு, வி.ஹம்சானந்தி, ஐ.துர்காராம், க.ரூபன், சி.சசிதனா, பா.பவநீதன், சு.பிரியதர்ஷினி, ஆர்.ராஜேஸ்வரன்.

கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:—

தங்கப்பதக்கம்: செல்வி எம்.கவிதா (வவுனியா, நம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

வெள்ளிப் பதக்கம்: செல்வி எஸ்.தமிழினி (வவுனியா, நம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

வெண்கலப் பதக்கம்: செல்வி ஜெ.ஜெயந்தினி (விபுலானந்த மகா வித்தியாலயம் பண்டாரிக்குளம்)

500 ரூபா பணப்பரிசுகள் பெறுபவர்கள்:—

எஸ். பிரதாப், என்.அஸ்மியா, ரி.அனிந்தை, எஸ்.சுகந்தினி, வி.கலைச்செல்வன், கீ.ரூபன், சி.சசீதனா.

போட்டிகளும், பரிசளிப்பு வைப வமும் சிறப்பாக நடைபெற்றன என்று ஏற்பாட்டா ளர்களில் ஒரு வரான சட்டத்தரணி நிஷாந்தன் தெரிவித்தார்.

—மகாமுனி




பேச்சுப் போட்டியின் இரண்டாம் சுற்றில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் ஏற்பாட்டுக் குழுவினருடன்

## சுடர் ஒளி சிட்டு



முகப்புப் படம் ஒன்றில் சிறுமி ஒருத்தி நீட்டுச் சட்டை போட்டு, தலையில் அழகான தொப்பியுடன் கறுப்புக் கண்ணாடியும் அணிந்து கொண்டு, ஒரு கையில் அலங்காரக்குடை, மறுகையில் சுடர் ஒளி வாரமலர் சகிதம் ஒயிலாகக் காட்சியளிப்பதைக் காண்கிறீர்கள்.

இவருடைய சட்டை சுடர் ஒளி வாரமலர் பிரதிகளால் தயாரிக்கப்பட்டது. குடை, தொப்பி, சப்பாத்து எல்லாவற்றையுமே சுடர் ஒளிப் பிரதிகள் அலங்கரிக்கின்றன. நன்றாகத் தெரிகிறது அல்லவா?

இந்தச் சிறுமிக்கும் இவருடைய பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் சுடர் ஒளி மீது அத்தனை பற்று, பாசம், அன்பு, அபிமானம். அதனால் சமீபத்தில் யாழ் மானிப்பாய் கிழக்கு பாரதி முன்பள்ளி விளையாட்டு விழாவில் வினோத உடைப் போட்டி நடந்தபோது இந்தச் சிறுமி சர்வமும் சுடர்ஒளி மயமாகவே போட்டியில் கலந்து அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.


நாடு முழுவதிலும் இவரைப்போல் இன்னும் எத்தனையோ ஆயிரம் சுடர் ஒளிச் சிட்டுகளும் வளர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

இந்த இதழோடு சுடர் ஒளி வார மலருக்கு ஒரு வயது பூர்த்தியாகிறது. இந்தக் குறுகிய காலத்தில் சுடர் ஒளி அனைத்து வாசகர்கள் நெஞ்சிலும் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டது என்பதைச் சொல்லத் தேவையில்லை. முகப்புப் படத்தைப் பார்த்தாலே புரியும்.

அன்பு வாசக நேயர்கள் அனைவருக்கும் விசேஷமாக முகப்புப் படத்தில் உள்ள சுடர் ஒளிச் சிட்டுக்கும் அவருடைய பெற்றோருக்கும் சுடர் ஒளி பணிவன்புடன் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# தமிழ்நாடு பாரதிய ஜனதா ஜெயலலிதாவுக்கு பாராட்டு!

## கூட்டு வைத்திருக்கும் கருணாநிதிக்கு இது ஒரு வேட்டு



கருணாநிதி

தமிழகத்தில் உருவாக்கப்பட்ட தி.மு.க கூட்டணிக்குள் பலப்பரீட்சை ஆரம்பமாகியிருக்கிறது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மத்திய அரசியல் ஆளுங்கட்சியாக இருக்கும் பாரதிய ஜனதா கட்சி தி.மு.கவுக்கு சார்பாக இயங்குவது உண்மைதான். ஆனால் தமிழகத்திலோ பா.ஜ.க உறுப்பினர்கள் அ.தி.மு.க அரசுடன் நெருங்கி உறவாடத் தொடங்கியிருக்கிறார்கள்.

முதலமைச்சர் ஜெயலலிதாவை ஏற்றிப் போற்றவும் சில பா.ஜ.க சட்ட சபை உறுப்பினர்கள் தயங்கவில்லை.

பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு ஜெயலலிதா ஆட்சியைக் கவிழ்க்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள். இவ்வேளையில் வாஜ்பாயின் தமிழக பா.ஜ.க பிரமுகர்கள் சிலர் ஜெயலலிதாவை ஏற்றிப் போற்றுவது வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அவ்வளவு தூரத்திற்கு ஜெயலலிதா தனது அரசியல் நிலைப்பாட்டை வலுப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது புலப்படுகிறது.

ஜெயலலிதா பதவிக்கு வந்து 100 தினங்கள் பூர்த்தியானதை அடுத்து தமிழகத்தில் விழா நடத்தப்படுகிறது. ஜெயலலிதா தமது ஆட்சிக்காலத்தில் தாம் எத்தனையோ சாதனைகளைச் செய்து விட்டதாகக் கூறிப் பெருமைப்படுகிறார். இதற்கிடையில் தமது அரசாங்கத்தின் முதலாவது வரவு – செலவுத்திட்டத்தையும் சமர்ப்பித்திருக்கிறார்.

அ.தி.மு.க அரசின் வரவு – செலவுத் திட்டத்தை தி.மு.கவினர் ஏளனம் செய்தனர். பல்வேறு கண்டனங்களைத் தெரிவித்தனர். தி.மு.க உறுப்பினர் பருதி இளம் வழுதி சபையிலிருந்து வெளியேற்றப் பட்டார். தி.மு.கவினர் வெளி நடப்பு செய்தனர்.

இவ்வேளையில் தி.மு.க கூட்டணியில் இடம் பெறும் பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் லட்சுமணன் முதலமைச்சர் ஜெயலலிதாவைப் புகழ்ந்து பாராட்டினார். இதனால் தி.மு.க கூட்டணிக்கும் மனக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சென்னையில் பிள்ளையார் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வழக்கம் இருக்கிறது. பின்னர் இந்தச் சிலைகள் ஆற்றில் கரைக்கப்படும்.

இந்த ஊர்வலங்களின்போது வேற்று மதத்தினருடன் மோதல்கள் நடைபெறுவது வழக்கம். இதனை முன்னிட்டு சென்னை பொலிஸ் கமிஷனர் முத்துக்கறுப்பன் பிள்ளையார் ஊர்வலங்களுக்குத் தடை விதித்தார்.

இந்து மத நிறுவனங்கள் இந்தத் தடையை எதிர்த்தன. இதனை அடுத்து முதலமைச்சர் ஜெயலலிதா இது விடயத்தில் தலையிட்டு அந்தத் தடையை ரத்துச செய்தார்.

மத்திய அரசின் நெருக்குதல்களுக்குள்ளாகியிருப்பவர் முத்துக்கறுப்பன். அவரை டெல்லிக்கு அனுப்பும்படி மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் அவரை அனுப்ப முடியாது என்று கூறிவிட்டார் ஜெயலலிதா. ஆயினும் விநாயகர், ஊர்வலத்தைத் தடை செய்த அவருடைய உத்தரவை ஜெயலலிதா ரத்து செய்து விட்டார்.

விநாயகர் ஊர்வலம் நடத்தஅனுமதி வழங்கியதற்காக ஜெயலலிதாவுக்குப் பாராட்டுகள் குவிந்தன. பா.ஜ.க உறுப்பினர் லட்சுமணன் தமிழக சட்டசபையில் ஜெயலலிதாவைப் புகழ்ந்து பாராட்டினார்.

முத்துக்கறுப்பன் கருணாநிதி கைது விவகாரத்தில் ஜெயலலிதாவுக்குப் பல்வேறு தலையிடிகளை ஏற்படுத்தியவர். இன்று அவர் மூலமே எதிர்க்கட்சியினரின் பாராட்டுகளை ஜெயலலிதா பெற்றிருக்கிறார். தமிழக அரசியலே இவ்வாறு பல்வேறு விசித்திரங்கள் நிறைந்ததாக இருக்கிறது.

பிரதமர் வாஜ்பாயின் மதிப்பைப் பெற்றவர் நடிகை விஜயசாந்தி. இவர் ஜெயலலிதாவுக்கு சார்பாக நடந்து கொண்டு ஏற்கெனவே பிரச்சினைகளை ஏற்படுத்தியவர். கருணாநிதி கைது விவகாரத்திலும் விஜயசாந்தி தமது கருத்தை ஜெயலலிதாவுக்கு சார்பாக வெளியிட்டவர். கருணாநிதி நாடகம் ஆடினார் என்று குற்றம் சாட்டினார். இதற்காக பா.ஜ.க உறுப்பினர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆறு மாத கால்க்கெடுவுக்குள் சட்டசபை உறுப்பினராக ஜெயலலிதா தெரிவு செய்யப்படா விட்டால் முதலமைச்சர் பதவி காலாவதியாகிவிடும். அத்தகைய நிலை ஏற்பட்டால் ஜெயலலிதா தனது பதவியை விஜயசாந்தியிடம் ஒப்படைப்பார் என்று ஒரு "கிசு கிசு" பரப்பப்பட்டிருக்கிறது.



ஜெயலலிதா

விஜயசாந்தியை அடுத்து பா.ஜ.கவில் ஜெயலலிதாவுக்கு சார்பாகக் குரல் கொடுத்திருக்கிறார் தமிழக சட்டசபை உறுப்பினர் லட்சுமணன். இதன் பின்னணியில் ஜெயலலிதாவுக்கு ஆதரவு தரக்கூடிய வேறு பா.ஜ.க பிரமுகர்களும் இருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

பாரதிய ஜனதா கட்சியுடன் நற்புறவை ஏற்படுத்தித் தமது பதவியைக் காத்துக் கொள்ள ஜெயலலிதா முனைகிறார். அதற்கு மத்திய அரசுடன் ஏற்பட்ட மனக்கசப்பை முதலில் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான புண்பலம் ஜெயலலிதாவிடம் இருக்கிறது. அதிகார பலம் மேலும் விருத்தியடைந்தால் சகல சோதனைகளிலிருந்தும் விடுபட்டு விடுவார் ஜெயலலிதா.

இதேவேளையில் பாரதிய ஜனதா கட்சியினர் ஜெயலலிதாவுடன் நல்லுறவு கொள்ள முயலுவது கருணாநிதிக்கு வேறு விதத்தில் நன்மையை ஏற்படுத்தித் தரக்கூடும்.

தமிழக சோனியா காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் அண்மைக்காலமாக ஜெயலலிதாவுக்கு எதிரான கருத்துக்களைக் கூறி வருகிறார். ஜெயலலிதாவின் ஆட்சி கலைக்கப்படாமல் இருப்பதற்கு தமது தலைவி சோனியாவின் பலமே காரணம் என்று கூறியிருக்கிறார்.

அத்துடன் அண்மையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற கருணாநிதியைச் சந்தித்து அவர் நலன் பெற வாழ்த்தியிருக்கிறார். இவ்விதமே தமிழக அரசியல் கூட்டணிகள் தமது நடவடிக்கைகளை மாற்றி அமைத்து வருகின்றன.

தி.மு.க கூட்டணிக்குள் பலப்பரீட்சை ஆரம்பித்தால் அதனால் ஜெயலலிதாவுக்கே லாபம் அதிகம் என்பது அனைவருக்கும் தெரியும்.

— கதாநி

# பித்தன் பதில்கள்

வையாபுரி, பண்டாரவளை.

கே : பித்தனே! என்கையெழுத்து அழகாக இருக்கிறது தலையெழுத்தும் அழகாக இருக்க என்ன செய்ய வேண்டும்?

ப : கவலை வேண்டாம். தலையெழுத்து ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுவிட்டது.

வி.கென்னடி, கொழும்பு.

கே : விசித்திரமான செய்தி ஒன்று சொல்லுங்களேன்?

ப : மாவீரன் நெப்போலியனுக்குக் குதிரையிலிருந்தபடி தூங்கும் பழக்கம் உண்டாம்!





ராம் கார்த்திகேயன், சிலாபம்

கே : அரசு கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் இரசாயன ஆயுதங்களைப் பாவித்தால் புலிகளின் பதிலடி என்னவாக இருக்கும்?

ப : பதிலடி தலைமயிர் யாக இருக்கும்.

கா.விசாகன், முல்லைத்தீவு

கே : பித்தா! கன்னி, கவிதை சுவைபட சுருக்கமாக் கூறுங்கள்.

ப : யாராலும் எப்போது நேரத்தில் விரும்பப்படுவது கவிதை. ஒப்பில்லாது எந்நேரமும் விரும்பப்படுவது மற்றது!

வா. அற்புதானந்தன், துன்னாலை.

கே : இணையங்கள் அழிந்து போனால் உலகத்தின் சுவலையா?

ப : அதனால் ஏற்பட்ட "இணையப் பித்தர்கள்" அறுந்தால் சவலை.

பா. ராஜீவன், கந்தானை

கே : பெண்களின் சல்வார், தாவணிக்கு என்ன பொருள்?

ப : அதுதான் காதலின் தேசியக்கொடி என்றார் இந்தியக் கவிஞர். ஆனால் இந்தக் காலத்தில் அதைப் பாட்டி மாரே அணிவதால் அர்த்தம் கெட்டுவிட்டது போலும்.



பத்மினி சற்குணராஜா, பருத்தித்துறை

கே : மேற்கு வங்காளத்தில் பிறந்து இந்தியத் திரை உலகிற்குப் பெருமை சேர்த்த சத்யஜித்ரே பெற்ற விருதுகள் எத்தனை என்று தெரியுமா பித்தனே?

ப : 'லெஜினிட் தி ஹானர்' என்ற பிரெஞ்சு நாட்டின் மிக உயரிய விருது, இந்திய அரசின் 'பாரதரத்னா' மற்றும் தாதா சாகிப் பால்கே விருது, சிறப்பு ஆஸ்கார் விருது, போன்றவை மட்டுமல்லாது, உலகத் திரைத் துறைகளுக்கான தனியார் நிறுவனங்களின் எண்ணற்ற விருதுகளையும் பெற்றவர் ரே.

சு.சங்கீதா, நீர்கொழும்பு

கே : எழுதப்படாத சட்டம் எது பித்தனே?

ப : உண்மை, நேர்மை, சத்தியம் என நாம் நினைக்கும் நிலைகள்.

ம. ஸ்வராஷங்கர், கோப்பாய்

கே : இளமையில் சோகம் எது?

ப : அன்னையை இழப்பது.

இ.மதுராந்தகன், மட்டக்களப்பு

கே : ஆடை அவிழ்ப்பதில் போட்டிபோடும் நடிகைகள் அடக்கமாக நடிப்பதில் போட்டி போடுவதில்லையே?

ப : ஆடை அவிழ்ப்பும் அடக்க நடிப்பும் டைரக்டர்கள் கையில் அல்லவா இருக்கின்றன.

த.ராஜசேகரன், கொட்டாஞ்சேனை

கே : திடீரென்று டெலிபோன்கள் மாயமாக மறைந்துவிட்டால்?

ப : டென்ஷன் உலகமே ஸ்தம்பித்துப் போய்விடும்...!

க. கேதாரநாதன், மட்டுவில்

கே : தமிழ்க் கட்சித் தலைவர்கள் கடந்த காலங்களில் நடம் புரண்டது உண்மையா?

ப : கடந்த காலத்தில் என்ன தற்காலத்திலும் அதுதான் நடக்கிறது.

றோய்லவன், திருகோணமலை

கே : 65ஆவது கலை என்று எதைச் சொல்லலாம் பித்தனே?

ப : குழந்தை வளர்ப்பு.

ம.சுரேஷ், சங்கானை

கே : பெண்களை அங்கீகரிக்க சமூகம் தயக்கங் காட்டுவது ஏன்?

ப : பெண்களைச் சுற்றிப் பின்னியிருக்கும் வலைகளை அறுத்தெறிய இன்னும் பரிணாம வளர்ச்சி தேவை.

அ.வெங்கடேசன், ஹற்றன்.

கே : நீதிபதி மீது வழக்குப் போடலாமா பித்தனே?

ப : இந்த நாட்டில் ஜனாதிபதியைத் தவிர வேறு எவர் மீது வேண்டுமானாலும் வழக்குத் தொடரலாம்.

இ.ராஜன், கல்முனை.

கே : நடிகர் பார்த்திபனைப் பிடிக்குமா பித்தனே?

ப : நடிகர் பார்த்திபன் வெறுமனே நடிகராக மட்டுமல்லாது, டைரக்டராக, கவிஞராக, எழுத்தாளராக என்றெல்லாம் பெயர் பதித்தவர். அதுமட்டுமல்லாமல் சைட் பிஸ்னஸாக நோயாளிகளை அவசரமாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதற்கான அம்புலன்ஸ் சேவையையும் நடத்துகிறார்.



எஸ்.ஜோன்சன், சண்டிலிப்பாய்

கே : பித்தனுக்குப் பிடித்த வெளி நாடு எது?

ப : பத்திரிகைச் சுதந்திரம் உள்ள ஜனநாயக நாடாக இருக்கும் சுவீடன்.

கலைவாணன், காலி.

கே : கலைஞர் கருணாநிதிக்கு எத்தனை மனைவியர் பித்தனே?

ப : மூன்று (பத்மாவதி, தயாளு அம்மாள், ராஜாத்தியம்மாள்)

கே.அங்கீத், செட்டிக்குளம்

கே : வடக்கு கிழக்கில் ஆயுதம் தாங்கும் இயக்கங்கள் பற்றி?

ப : ஆயுதங்களைத் தாங்கினால் மட்டும் இயக்கங்கள் அதிவிட முடியாது. கொள்கைகளிலும் குறிக்கோள்களிலும் நிலையாக இருக்க வேண்டும்.

கி.ரவீந்திரன், மாத்தளை.

கே : ஏனைய அமைச்சர்களைவிட வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமரே புலிகள் குறித்து அதிகமாகப் பேசுவது ஏன்?

ப : சேர்ந்த இடத்தில் தாம் விசுவாசமான தமிழன் என்று காட்டிக் கொள்ளும் [illegible]

எஸ். சண்முகராஜா, கந்தளாய்.

கே : அமைச்சர் ஜெயராஜ் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று திரும்பியதில் நன்மை உண்டா?

ப : தென்னிலங்கையிலிருந்து வருவோரைப் புலிகள் பிடித்து விழுங்கி விடுவார்கள் என்று கதை புனைந்தவர்களுக்கு [illegible]

வி.அருணோதயன், திருகோணமலை.

கே : கனடாவுக்குச் சென்று இலங்கை மெய்வல்லுநர் வீரர்கள் சிலர் துர்நடத்தைகளில் ஈடுபட்டுள்ளனரே?


ப : அவர்களில் சிலர் [illegible] வீரர்களாம். தமது சகாக்கள் [illegible] தாம் கனடாவில் செய்தால் [illegible] நினைத்திருப்பார்கள் போலும்.

ஆர்.பிரேம், தெல்லிப்பழை.

கே : 'அடல்ட்ஸ் ஒன்லி' படம் பார்க்க முதியவர்களும் போவது ஏன்?

ப : பழைய நினைவுகளை மீட்டுப் பெருமூச்சு விடத்தான்.


COMPUTER TABLES



STEEL FURNIMART
(opp. Bambalapitiya Flats)
325, Galle Road, Colombo 4.
Tel : 582904. T/Fax : 597516





# யானைக்குத் தாகம் வந்தால்...!

## வாலுயர் தென்னைகூடத் துவம்சம்!

கடும் வரட்சி மனிதரை மட்டுமா காட்டு மிருகங்களையும் வாட்டி வதைக்கிறது.

காட்டுயானைகள் கோடை காலம் வந்து விட்டாலே அங்கிருந்து வெளியேறி அயல் பிரதேசங்களிலுள்ள கிராமங்களை ஆக்கிரமித்து விடுகின்றன. புத்தளம் பகுதிக் கிராமங்கள் காட்டு யானைகளின்



புத்தளம் நகரிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள மதுரமடுவெம்பு என்னுமிடத்திலுள்ள செய்யது இபுறாகிம் என்பவருக்குச் சொந்தமான தென்னந் தோட்டத்தினுள் புகுந்த யானைகள் மரங்களை முறித்து வீழ்த்தியிருப்பதைக் காண்க.

(புத்தளம் நிருபா)

தாக்குதலினால் பெரும் பாதிப்புக்குள்ளாவது வழக்கம்.

கடும் வரட்சியினால் காட்டுப் பகுதி நீர் நிலைகள் வற்றிப் போய்விடுகின்றன. தாகத்தைத் தணிப்பதற்காக காட்டுயானைகள் கிராமப்பகுதிகளுக்குப் படை எடுக்கின்றன. ஆறு, குளங்களில் தண்ணீர் அருந்தி தாகத்தைத் தீர்த்துக் கொள்கின்றன. பின்னர் கிராமப்பகுதி மக்களின் வயல் நிலங்கள், தென்னை–வாழைத் தோட்டங்கள் ஆகியவற்றையும் அழித்து விடுகின்றன.

புத்தளம்– ஆனைமடு தொகுதிகளில் பெரும் பகுதி கிராமங்கள் காடுகளால் சூழப்பட்டிருக்கின்றன. காட்டு யானைகள் கோடை காலங்களில் அந்தக் கிராமங்களுக்கு அத்து மீறிப் பிரவேசிப்பது வழக்கமாகிவிட்டது.

மார்ச் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை இந்தப் படையெடுப்புத் தான். காட்டிலுள்ள பெரும்பாலான குளம், குட்டைகள் இக்காலப்பகுதியில் வற்றி விடுவதால் யானைகள்தண்ணீர் தேடி கிராமப் புறங்களை நாடி வருகின்றன.

நெல் வேளாண்மைக் காணிகள், தென்னந் தோட்டங்கள் என்பனவற்றை யானைகள் பதம் பார்த்து விடுகின்றன. இதனால் கிராம மக்கள் பெரும் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் எதிர்கொள்கின்றனர்.

புத்தளம் பகுதியிலுள்ள மதுரமடுவெம்பு, கல்லடி, கிறாம்பியடி, செல்லண்கண்டல், தப்போவ, கருவலகஸ்வெவ, குடாமதவாச்சிய போன்ற விவசாயக் கிராமங்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இரவு வேளைகளில் தத்தமது வீடுகளில் நித்திரை கொள்ள கிராம வாசிகள் பயப்படுகிறார்கள். வேறு இடங்களுக்கு சென்று உறங்கி விட்டுக் காலையில் வீடு திரும்புகிறார்கள்.

இரவு வேளைகளில் கிராமங்களுக்கு வரும் யானைகள் தென்னந் தோட்டங்களுக்குள் புகுந்து விடுகின்றன. தென்னங் கன்றுகளை வேரோடு பிடுங்கி ஏப்பம் விடுகின்றன.

வளர்ந்த தென்னை மரங்களை முட்டி மோதி வீழ்த்தி குரும்பைகளையும் , ஓலைகளையும் கபளீகரம் செய்து விடுகின்றன.

அத்தோடு யானைகள் திருப்தி அடைந்து விடுவதில்லை. விவசாயிகளின் வீடுகளையும் துவம்சம் செய்கின்றன. அவர்கள் சேகரித்து வைத்த அரிசி, நெல் மற்றும் உணவுப் பொருட்களையும் காலி செய்து விடுகின்றன.

அண்மையில் இப்பகுதியிலுள்ள வாழைத்தோட்டம் ஒன்றினுள் புகுந்த நான்கு யானைகள் முழு வாழை மரங்களையும் இருந்த இடம் தெரியாமல் சிதைத்து விட்டன.

யானைகள் அட்டகாசம் குறித்து வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் பட்டாசு வெடிகளைக் கொளுத்தி யானைகளை விரட்டினர். ஆயினும் யானைகள் மறுபடியும் கிராமங்களுக்குள் வந்து விடுகின்றன.

வெகு தூரத்திலுள்ள காடுகளுக்கு விரட்டப்பட்ட யானைகளும் 24 மணி நேரத்தினுள் மறுபடியும் தோட்டங்களுக்கு வந்து விட்டன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

காட்டு யானைகளின் இந்த அத்து மீறல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படாவிட்டால் இப்பகுதியில் தொடர்ந்து விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதே நேரத்தில் இனந்தெரியாத கும்பல்கள் கிராமத்திற்குள் பிரவேசிக்கும் இந்தக் காட்டு யானைகளை சுட்டுக் கொன்று விடுவதும் உண்டு. பெறுமதி மிக்க தந்தங்களை கையாடும் தந்திரமே இது.

கடந்த இரு மாதங்களில் மட்டும் மூன்று யானைகள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளன.

வன பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாக செயற்பட்டால் யானைகளை வில்பத்து சரணாலயப் பகுதிக்கு விரட்ட முடியும். கிராம மக்கள் நிம்மதியாக வாழமுடியும். அழியும் விவசாயத்தை தடுத்துக்காக்க



மதுரமடுவெம்பு தோட்டத்தில் இவ்வாறு சுமார் 50க்கு மேற்பட்ட பெரிய தென்னை மரங்களை வீழ்த்திய யானைக் கூட்டம் அவற்றிலுள்ள குரும்பைகளையும், ஓலைகளையும் கலைத்து விட்டு சென்றுள்ளது.

(புத்தளம் நிருபர்)

முடியும். தந்தத்திற்காகக் கொல்லப்படும் யானைகளின் தொகையை வெகுவாகக் குறைக்க முடியும். செய்வார்களா?

—ஏ.எஸ். புல்கி


ஆதி முதல் அந்தம் வரை பலசரக்கு வியாபாரத்தில் முன்னோடிகளாகத் திகழ்ந்த திருமகள் ஸ்ரோர்ஸ் நெல்லியடி என்னும் ஸ்தாபனத்தில்,

மீண்டும் மங்களகரமான
திறப்பு விழா

நெல்லைக் குமரன் ரேடர்ஸ்

அரிசி, பால்மா, சீனி, இனிப்பு வகை இன்னும் பலவித
மொத்த சில்லறை வியாபாரம்

பிரதான வீதி, நெல்லியடி தொ.பே : 021-3207

பலசரக்கு வியாபாரத்தில்
வடமராட்சியில், மக்கள் மனதில்
தமக்கென ஓர் இடத்தினைப்
பிடித்துக் கொண்ட
நெல்லைக் குமரன்
ரேடர்ஸ் ஸ்தாபனத்தினர்,
மீண்டும் தமது வியாபாரத்தினை
30.08.2001 காலை
9.30 மணியளவில்
ஆரம்பிக்க உள்ளார்கள்.
வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள், நண்பர்கள்
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

டோறா கொம்யுனிக்கேசன், கொழும்பு


### பாரிஸ் விநாயகர் தேர்த்திருவிழா சக்தி வானொலியில்

பிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிஸ் நகரில் கோவில் கொண்டுள்ள 'ஸ்ரீமாணிக்க விநாயகரின்' ஆறாவது தேர்த்திருவிழா செப்டம்பர் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

பகல் 11.00மணிக்கு தேரேறும் ஸ்ரீமாணிக்க விநாயகர் 3.00 மணிவரை ஐந்து கிலோ மீற்றர் தூரம் தேர்வலம் வருவார். மேளம் , நாதஸ்வரம், காவடி, பஜனை சகிதம் இந்தத் தேர்த்திருவிழா நடைபெறும்.

தேர்த்திருவிழா தொடர்பான வானொலி நேர்முக வர்ணனையை இலங்கையில் வழங்க 'சக்தி FM' ஏற்பாடு செய்துள்ளது.

FM 105.1 MHz அலைவரிசை ஊடாகவும், WWW.shakthifm.com எனும் சர்வதேச வலைப் பின்னலினூடாகவும் நேயர்கள் நேரடி அஞ்சலைச் செவிமடுக்கலாம் என ஆலய நிருவனரும், தலைவருமான வி.சந்திரசேகரன் தெரிவித்தார்.

தேர்த்திருவிழா தொடர்பான தொலைக்காட்சித் தொகுப்பு பின்னர் சக்தி TV யில் ஒளிபரப்பாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.





